20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2010

# தங்கப்பதக்கங்களில் கனடா உலக சாதனை!



கனடா ஒலிம்பிக்கில் நடைபெற்ற ஹொக்கி விளையாட்டில் அமெரிக்காவிற்கு எதிராக 3:2 என்ற கோல்களைப் பெற்றதன் மூலம் வெற்றியீட்டி தனது 14 தங்கப்பதக்கத்தை இம்முறை வன்கூவரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில் பெற்றது.

கனடா 26 பதக்கங்களை இம்முறை ஒலிம்பிக்கில் பெற்றது. இதுவே கனடா ஒலிம்பிக் விளையாட்டில் பெற்ற அதிகூடிய பதக்கங்களாகும். கனடா 14 தங்கப் பதக்கங்களைப் பெற்றதன் மூலம் இதுவரை நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டில் அதிகூடிய தங்கப்பதக்கங் களைப் பெற்ற நாடு என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளது.

கனேடிய மண்ணில் வன்கூவர் நகரில் மிகவும் கோலகலமாக ஆரம்பமாகிய குளிர் கால ஒலிம்பிக்ஸ் போட்டிகள் முன் எப்பவும் இல்லாதவிடத்து மிகப் பிரமாண்டமாகவும் சிறப்பாகவும் நடாத்தி முடித்துள்ளமை கனேடிய நாட்டுக்கு பெருமையாகும். இது பலசாதனைகள், வேதனைகள், வெற்றி, தோல்வி என பல மறக்கமுடியாத, மலரும் நினைவுகளாகவும் நடந்து முடிந்துள்ளது.

## குளிர்கால ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் 2010 மணித்துளிகள்

• சுவிஸ் வீரர் சீமோன் அம்மான் பனிசறுக்கு பாய்தலின் 108 மீற்றர்களை தாண்டி முதலாவது தங்கப்பதக்கத்தை வென்று பார்வையாளர்களை வியக்க வைத்தார். இது சீமோன் அம்மான் ஒலிம்பிக் போட்டிகளில் பெற்ற மூன்றாவது பதக்கமாகும்.

• 12ஆவது நாள் (Feb. 24) கனடாவிற்கு பொன்நாள் ஆகும். கனடா 4 பதக்கங்களை பெற்று (Hughes - Bronze) (Short Track - Silver) (Womens's Bobsleigh - Gold/Silver) 2002 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு நாளில் 4 பதக்கங்கள் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளது. இந்த நான்கு பதக்கங்களும் பெண் வீராங்கனைகளால் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

• கனேடிய வீராங்கனையான Clara - Hughes 37 வயதுடைய கியூபெக் மாநிலத்தை சேர்ந்தவர் உலக ஒலிம்பிக்ஸ் சாதனைப் பட்டியலில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர். Summer Olympics இலும் 2006 Turin Winter Olympic இலும் 2010 Winter Olympic இலும் 6 பதக்கங்களை வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையை பெறுகின்றார்.

• Ice Dance போட்டியில் கனடாவை சேர்ந்த Virtue and Moir தங்கப்பதக்கங்கள் வென்று கனடாவிற்கு Ice Dance இல் ஒலிம்பிக்கில்


தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## 2010 இல் இரண்டாவது பெரிய பூகம்பம்

மிகமிகச் சக்தி வாய்ந்த பூகம்பத்தால் சிலியே பெரும்பாதிப்புக்குள்ளானது. 8.8 ரிச்சட் அளவைக் கொண்ட பூகம்பம் பெப்ரவரி 27, 2010 சனிக்கிழமை காலைப்பொழுதில் சில்லி நாட்டின் தலைநகரம் சந்தியாகோ (Santiago) இலிருந்து 320 கிலோ மீற்றர் தூரத்திலும் 35 கிலோமீற்றர் ஆழத்திலும் ஏற்பட்டது.

பல கட்டிடங்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன. 53 நாடுகளில் சுனாமி அபாயகரம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. மத்திய, தெற்கு அமெரிக்க நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியா வரை இந்த அபாய அறிவிப்பு வழங்கப்பட்டது.

நாட்டின் அதிபர் Michelle Bachelet, மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். சில்லியின் இரண்டாவது பெரிய நகரமாகிய Concepcion இலிருந்து 112 கிலோமீற்றர் தூரத்தில் இது நடந்தது. TV Chile இன் உடனடி அறிக்கையின்படி 15 அடுக்குமாடிக் கட்டிடம் தரைமட்டமானதாகவும் பாலங்கள் தெருக்களில் பெரிய பெரிய வெடிப்புக்கள் ஏற்பட்டதாகவும் அறிவித்துள்ளது.




தொலைபேசி தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் தலைகீழாக புரட்டிப்போடப்பட்டுள்ளன.

உலகின் அதிகூடிய கொப்பர் (Copper) வழங்கும் நாடு உடனடியாக சகல வேலைத்தளங்களையும்

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# கனவுகள் வருங்கால நிதியம்! பொறுப்பேற்கத் தயாரா?

ஓய்வு பெற போதிய பணம் என்னிடம் உள்ளதா? 2008 இலிருந்து ஓய்வூதிய முதலீடு சுருங்குவதைப் பார்த்த பலர் பேருக்கு கனடாவில் எழுந்துள்ள கவலை இது. GIC என்று சொல்லப்படும் வங்கி வைப்புக்களில் மட்டுமே பணம் 4.5 ஆண்டுகளாகப் போட்டு வைத்த பலரும் பங்குச் சந்தையில் முதலீடு செய்தவர்களை விடச் சிறப்பாகவோ அல்லது ஏறத்தாழ அதே நிலையிலேயோ இருக்கக் காண்கின்றோம். ரொறொன்ரோ பங்குச்சந்தை மார்ச் 09, 2009 இல் அடிமட்டத்தை தொட்டபோது இருந்த பங்குச் சந்தை புள்ளிகள் 7566, விலைகள் விழுந்ததில் 50 சதவீதத்துக்கு மேல் திரும்ப உயர்ந்துள்ளது. 31 டிசம்பர் 2009 இல் ரொறொன்ரோ பங்குச் சந்தை புள்ளிகள் 11746 அப்படிப்பார்க்கையில் கிடைத்த வருவாயில் பெரிய வித்தியாசம் வங்கி பாதுகாப்பான நிதி வைப்புக்களும் (416) பங்குச் சந்தை முதலீடுகளுக்கும் இருப்பதாக தெரியவில்லை. வித்தியாசம் எதில் இருக்கின்றது என்றால் மனஅழுத்தம், இரத்தக் கொதிப்பு இவற்றில்தான். GIC க்காரர் இந்தக் காலகட்டத்தில் பெரிய கவலை ஒன்றும் பட்டிருக்க மாட்டார். ஆனால் மற்றவரோ கோபம், துக்கம் என ஆளாகியிருப்பார்.

சிலபேர் வங்கியில் கிடைக்கும் ஒன்றிரண்டு சதவீத வட்டி, பங்குச்சந்தையில் ஏற்படும் 20, 30 சத வீத நட்டத்தை விட எவ்வளவோ மேலானது என்று நினைக்கின்றனர். உயர முயல்பவன்தான் கீழே விழ முடியும். பங்குச் சந்தை முதலீடு அத்தகையது. அதிகலாபமும் தரலாம், அதிக நட்டமும் தரலாம். அதிலும் பல தரம் உள்ளது. உங்கள் முதலீட்டின் தரத்தையும் பொறுத்து லாப நட்டத்தின் வேகமும் அழுத்தமும் கூடலாம், குறையலாம்.

GIC முற்றிலும் ரிஸ்க் (Risk) இல்லாதது? அப்படி சொல்ல முடியாது. விலைவாசி உயர்வு GIC இல் போகும் பணத்தின் மதிப்பைக் குறைத்து விட வாய்ப்பு உள்ளது. விலைவாசி உயர்வு 2 சதவீதம் என்று வைத்துக்கொள்வோம். GIC வட்டிவிகிதம் 1சதவீதம் என்றால் உண்மையான வட்டிவிகிதம் - 1 சதவீதம் (2 - 1) ஆகும். அதாவது இன்றைக்கு 100க்கு வாங்கக் கூடிய பொருளின் விலை ஓராண்டில் 102 ஆகி உள்ளது. உங்கள் பணமோ 101 ஆகத்தான் உயர்ந்துள்ளது. உண்மையில் 1 டாலரை விலைவாசி உயர்வில் இழந்திருக்கின்றீர்கள். இல்லையா? விலைவாசி மட்டும்தான் காரணமா? இல்லை வரிகள் சிக்கலாகும் பொருளாதாரம் என்று பல காரணங்கள் உள்ளன.

பல பேருக்கு இருக்கும் சொத்து முழுவதும் கரைந்த பின்பும் வாழ்வு மிச்சமிருக்கலாம் என்பது இப்போதைய நிலைப்பாடு. வாழ்நாள் கூடிக் கொண்டே போவது தான் காரணம். அப்படிப்பார்க்கும் போது பங்குச் சந்தை முதலீடுகள் கவர்ச்சிகரமாகத் தெரிகின்றது.

ஆனாலும் பாதுகாப்பான முதலீடுகளையே பலரும் நாடும் நிலையும் காணப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு RBC ஆய்வின்படி ஓய்வு காலத்துக்கு இன்னும் தயார் இல்லை என்று நினைப்பவர்களின் எண்ணிக்கை 32சதவீதம் ஆகி உள்ளது. முந்தைய ஆண்டில் இது 24 சதவீதமாக இருந்தது.

நீங்கள் ஓய்வு காலத்துக்குத் திட்டமிடுகின்றீர்களோ இல்லையோ, உங்களின் வருங்கால நிதியத்துக்கு நீங்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். நீங்களே பொறுப்பேற்கவில்லை என்றால் வேறு யார்தான் பொறுப்பேற்பர்?

உங்கள் சிந்தனையைத் தூண்டவும், பிறகு செயல்படுத்தவும் சில கேள்விகளும், ஆலோசனைகளும் இதோ:

**1. உங்களுடைய முதலீடுகளைக் கண்காணிக்க உங்களுக்குப் போதிய நேரம், அறிவு, அனுபவம் உள்ளதா?**

பதில் இல்லை என்றால், நீங்கள் எடுக்கக் கூடிய மிகப் பெரிய நிதியம் மற்றும் முதலீட்டைப் பற்றிய முடிவு, தகுந்த நிதி ஆலோசகரைத் தேர்ந்தெடுப்பது தான். நீங்களே செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் நேரம், அறிவு, அனுபவம் இவற்றில் ஒன்றோ அல்லது எல்லாமோ உங்களிடம் இல்லை. அப்படியானால், அதிக ரிஸ்க் இல்லாத GIC போன்றவற்றில் பணம் போடுவதுதான் உங்களுக்கு நல்லது. மற்றொரு பொன்னான விதி என்னவென்றால் தெரியாத, புரியாத ஒன்றில் ஒருநாளும் பணத்தை முதலீடு செய்யாதீர்கள். நிர்ப்பந்தம், பயம், பேராசை, குழப்பம் இவற்றின் காரணமாக முடிவுகளை எடுத்தாலும் முடிவு வருத்தத்தைத் தரத்தக்கதாகவே இருக்கின்றது. GIC மட்டும் என்று இருப்பவர்கள் Laddering GIC இல் ஐந்து வருடத்துக்குப் பணம் போடலாம். ஆண்டு தோறும் ஐந்தில் ஒரு பங்கைப் புதுப்பிக்க வேண்டி வரும். தேவையிருந்தால் அந்த சமயம் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். இல்லையேல் மீண்டும் புதுப்பிக்கலாம். இந்த முறையில் உங்கள் வட்டி வீதம் சராசரியாக இருக்கும். அதிகம் கூடவும் இருக்காது. அதிகம் குறைவாகவும் இருக்காது.

## - துறவி -

2. உங்களின் தற்போதைய நிதிநிலையை உற்றுக் கவனியுங்கள். இதற்காக நீங்கள் இரண்டு சிட்டைகளைத் தயாரிக்க வேண்டியிருக்கும். முதல் சிட்டையில் உங்களின் (குடும்ப) வருமானத்தையும், (குடும்ப) செலவுகளையும் பட்டியலிடுங்கள். மறக்காமல்

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

# கண்டனம் தெரிவிக்கின்றோம்

22-02-2010 அன்று கனடாவின் தமிழ் வார இதழ்களில் ஒன்றான உதயன் பணிமனை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. தாக்குதலால் ஏற்பட்ட சேதம் பல ஆயிரம் டொலர்களுக்கும் அதிகமானது என்று உதயன் இதழாசிரியர் தெரிவிக்கிறார். இந்தத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஊடக சுதந்திரத்துக்கு ஊறு விளைவிப்பது என்பது நமது சமூகத்தின் உயிருக்கும், வளத்துக்கும் செழுமைக்கும் மரண அடி தருவதற்கு ஒப்பானதாகும். ஊடக சுதந்திரமும் ஊடக பலமும் சிறப்பாகப் பேணப்படுகிற கனடாவில் தமிழ் சமூகத்தில் இத்தகைய தாக்குதல் இடம் பெற்றிருப்பது நமது விழுமியங்களையும் பெரும் கேள்விக்குள்ளாக்குகிறது. இதுபோன்ற நாகரிகமற்ற செயல், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் எதிர்காலத்தை பலவிதங்களில் மிகவும் பாதிக்கும். நாம் எல்லோரும் இதனை கண்டிப்பது எமது ஜனநாயக உரிமை. அனைத்துத் தமிழ் ஊடகவியலாளரும் ஊடகங்களும் இத்தகைய அநாகரிமான தாக்குதல்களைக் கண்டிக்க வேண்டுமென நாங்கள் கோருகிறோம்.



# வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Fax: 416.282.4978
3. email: vlambaram@sympatico.ca

ஆசிரியர்
விளம்பரம் பத்திரிகை

தமிழ்துறை பேராசிரியர் கரு முத்தையா அவர்கள் பெயரளவில் 'விளம்பரம்' என்ற பெயரைக் கொண்டாலும் நல்லதொரு செய்திப்பத்திரிகை என்று கூறியது நூறுவீத உண்மை. பத்திரிகைகள், தங்களது கொள்கைகளை அடித்தளமாக வைத்து, விளம்பரதாரர்கள் அனுசரணையுடன் பக்கங்களை நிரப்புவது சாதாரணம். ராஜா மகேந்திரனின் விளம்பரம் பத்திரிகை, உலக, கனேடிய அரசியல், நிதி சேமிப்பு, RRSP கடன் வகைகள், வியாபார அடித்தளங்கள் போன்ற பல விடயங்கள் அறிவூட்டத்தக்கதாய் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. இன்னும் வெற்றியாக வாழ வழிகாட்டும் லலிதா புருடி, K.G Master, வள்ளிநாயகி அம்மாவின் ஆன்மீகமும் விஞ்ஞானமும் விரும்பி வாசித்து பயனடையலாம். இன்னும் சினிமாப் புதினங்கள், தாய்நாடு, Toronto Canada up to Date News தருவதால் 'விளம்பரம்' ஒரு தரம் உயர்ந்த பத்திரிகை என்பதை எவரும் ஏற்பார்கள் (என்பது எனது கருத்து)

தாவீது ஞானம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
*Jenisha Tailors & Designs*
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை

416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# கனடாவின் கதை - 16

## அமெரிக்கப் புரட்சி

1775 இல் அமெரிக்கப் புரட்சியாளர், தமது புரட்சி நடவடிக்கைகளை கியூபெக்குக்கும் கொண்டு செல்ல முயற்சித்தனர். இதற்கு கியூபெக் மக்களிடமிருந்து பூரணமான ஆதரவு கிடைக்கவில்லை. நிலச்சொந்தக்காரரும் குருமாரும் இதை எதிர்த்தனர். ஆனால் பதின்மூன்று குயேற்றங்களிலிருந்தும் குடிபெயர்ந்தோரும் ஆங்கிலம் பேசும் வணிகரும் ஆதரவு காட்டினர். நிரந்தரவாசிகளில் சிலவிடங்களில் வசித்தோர் (குறிப்பாக மொன்றியலுக்கும் சென்ற் ஜோனுக்கும் இடைப்பட்ட பிரதேசங்கள்) கூடியளவு ஆதரவாய் இருந்தனர். ஜேம்ஸ் லிவிங்ஸ்ரன் என்பவர் படைக்குழுக்களை உருவாக்கினார். நவம்பர் 1775 இல் அமெரிக்கர்கள் சென்ற் ஜோன் கோட்டையைத் தாக்கிக் கைபற்றியதுடன் மொன்றியலையும் கைப்பற்றினர். டிசம்பர் 1775 இல் கியூபெக் நகரத்தை கைப்பற்றும் முயற்சியில் தோல்வி அடைந்தனர். மே, 1776 இல் பிரித்தானியப் படைகள் வந்து இவர்களைத் தாக்கி மொன்றியலை நோக்கிப் பின் வாங்கச் செய்தன. றொய் றிவியர்ஸ் என்ற இடத்தில் அமெரிக்கர், பிரித்தானிய படைகள் மீது தாக்கியது தோல்வி அடைந்ததனால் மாகாணத்தை விட்டு வெளியேறினர். இவர்களோடு இவர்களுக்கு உதவிய 250 கியூபெக் படையினரும் வெளியேறினர்.




படம் - 1 போல்ரிமோருக்கருகே இருந்த மக்கென்றிகோட்டையை பிரித்தானியப் படைகள் தாக்கிய வரைபடத்தை சித்தரிக்கும் வரைபடம்

பெரும் வாவிகளின் கோட்டைப் பகுதியில் வசித்த கியூபெக்கினரும் அமெரிக்கருக்கு உதவி செய்து கோட்டையைக் கைப்பற்றுவதில் பெரும் பங்காற்றினர். 1781 இல், 147 கியூபெக் படையினர் பல முக்கிய பிரமுகர்களான மேஜர் கிளெமென்ற், கொஸ்லின், பியேற், அயோற்றே, அன்ரொயின், போலின் ஆகியோருடன் யோக் நகரில் நடந்த போரில் அமெரிக்கரோடு சேர்ந்து பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.

நோவா ஸ்கோசியாவில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சில கிளர்ச்சிகள் எழுந்தன. இதற்கு காரணமாயிருந்தவர்கள், மாசாசுசெற்சிலிருந்து வந்து கம்பர்லாந்துக் கோட்டைக்கருகில் வசித்து வந்த ஜொனத்தன் எடியும் ஜோன் அலனுமாமாவர். நவம்பர் 1776 இல் எடியும் மாசாசுசெற்சிலிருந்து வந்த அமெரிக்கரும், அக்கேடியன்களும் இந்தியர் களும் சேர்ந்து கம்பர்லாந்துக் கோட்டையைத் தாக்கினர். பிரித்தானியப் படையினர் மேலதிகமாக அங்கு வந்து இவர்களைத் தோற்கடித்தனர். எனினும் எடியும் அலனும், மாச்சியஸ் என்ற இடத்திலிருந்து பல வருடமாகப் பிரச்சனைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

கடலோர மாகாணங்களில் பல தனியார் குழுக்கள் குடியேற்றவாசிகளைத் தாக்கி வந்தனர். குறிப்பாக சாளற்ரவுண், பிறின்ஸ் எட்வேட்தீவு லூனென்பேர்க், நோவா ஸ்கோசியா ஆகியன இத்தாக்கங்களுக்கு உள்ளாகின.

புரட்சியின் போதும் அதன் பின்னரும் ஐக்கிய இராச்சிய விசுவாசிகள் 70,000 பேர் அமெரிக்காவிலிருந்து வெளியேறினர். இதில் 50,000 பேர் அப்போது பிரித்தானியாவின் வடஅமெரிக்கக் குடியேற்றங்களான நியூபவுண்லாந்து, நோவா ஸ்கோசியா, கியூபெக் மாகாணம், பிறின்ஸ் எட்வேட் தீவு ஆகிய இடங்களில் குடியேறினர். நோவா ஸ்கோசியாவில் குடியேறிய விசுவாசிகள், ஹலிபாக்சிலிருந்து அரசியல் விடுதலை கோரினர். எனவே பிரித்தானியா 1784இல், நியூ பிறன்ஸ்விக்கைப் பிரித்து விட்டது. 1791 ஆம் சட்டப்படி கியூபெக் கீழ் கனடா, மேல் கனடா எனப்பிரிக்கப்பட்டது. இதனால் 8,000 விசுவாசிகள் (தென்மேற்கு கியூபெக்கிலிருந்த வர்களுக்கு மேல் கனடா எனும் மாகாணத்தைப் பெற்றனர்).

அமெரிக்கப் புரட்சியின் பின் குடியேறிய விசுவாசிகள் பலர் ஆபிரிக்க வழித் தோன்றல்களாய் இருந்தனர். இவர்களுள் 2000 அடிமைகள், பிரித்தானியருக்கு சேவை செய்ததினால் விடுதலை பெற்றனர். 1793 இல் மேல் கனடாவில், அடிமைகள் முறையை படிப்படியாக ஒழிப்பதற்கான முதல் சட்டம் இயற்றப்பட்டது.

### 1812 ஆம் ஆண்டு யுத்தம்.

மேற்படி யுத்தம் அமெரிக்காவுக்கும் பிரித்தானிய இராச்சியத்துக்குமிடையே (குறிப்பாக பெரிய பிரித்தானியாவுக்கும் பிரித்தானிய வட அமெரிக்காவுக்கும்) ஏற்பட்டது. இது 1812 இல் தொடங்கி 1815 வரை நடந்தது. இது பெரும்பாலும் அத்திலாந்திக் சமுத்திரம், வட அமெரிக்கக் கரையோரங்கள், நிலங்கள் ஆகியவற்றில் இடம் பெற்றது.

இந்த யுத்தத்துக்குப் பல நேரடியான காரணங்கள் உண்டு. 1807 இல் பிரித்தானிய பிரான்சுடன் யுத்தத்தில் ஈடுபட்டபோது அமெரிக்காவின் பிரான்சுடனான வர்த்தகத் தொடர்புகளைத் தடைசெய்யும் விதிகளை ஏற்படுத்தியது. ஆனால் இவற்றை அனைத்துலகச் சட்டங்களின் படி செல்லுபடியாகா என அமெரிக்கா வாதாடியது. மேலும் அரச கப்பற்படைக்கு அமெரிக்கப் பிரசைகளைக் கட்டாயப்படுத்தி சேர்த்தமையும், அமெரிக்காவின் எல்லைகளை வடமேற்கே விஸ்தரித்ததை எதிர்த்த அமெரிக்க இந்தியர்களுக்கு பிரித்தானியா படை உதவி செய்தமையும் இரு நாட்டின் உறவில் மேலும் விரிசல் ஏற்பட வழிவகுத்தன.

தற்போதைய மாகாணங்களான ஒஹையோ, இந்தியானா, இலினொய், மிக்சிகன், விஸ்கொன்சின் ஆகியன வடமேற்குப் பிரதேசம் என அன்று அழைக்கப்பட்டன. வயல் செய்கைக்காக இவற்றை உபயோகிக்கும் நோக்குடன் அமெரிக்கா எல்லைகளை விஸ்தரிக்க முனைந்தபோது இந்தியர் அதனை முறியடித்தனர். எனவே யுத்தம் ஆரம்பிக்கும் முன் பிரித்தானியர் ஒரு நடு நிலை வர்த்தகத்துக்கு வழி செய்தனர், எனினும் கப்பல் படையிலிருந்து தப்பியோரும் மாலுமிகளைத் திரும்பப் பெறும் அதிகாரத்தை விட்டுக்கொடுக்கவில்லை. மேலும் வடமேற்குப் பிரதேசங்களில் "நடுநிலையான" இந்திய மாகாணத்தை உருவாக்கும் நோக்கோடு பிரித்தானியா 1814 ஆம் சமாதான மாநாட்டில் கோரியது, எனினும் யுத்தத்தில் தோல்வி அடைந்ததனால் கோரிக்கை வெற்றி பெறவில்லை.

இந்த யுத்தம் நான்கு முனைகளில் நடைபெற்றது. போர்க்கப்பல்களும், இருநாட்டுத் தனியார் நிறுவனங்களும் ஒருவருக்கொருவர் தமது எதிரியின் வணிகக் கப்பல்களைத் தாக்கினர். அமெரிக்காவின் அத்திலாந்திக் கரையோரங்களை பிரித்தானியர் தடுத்து பெரும் தாக்குதல்களை மேற்கொண்டனர். பெரும் வாவிகளிலும் சென்லோறன்ஸ் ஆற்றின் கரையோரங்களிலும், கனடாவையும் அமெரிக்காவையும் பிரித்த நிலப்பகுதிகளிலும், மெக்சிக்கோ வளைகுடாப்பகுதியிலும் போர் நடைபெற்றது. இருசாராரும் தமது எதிரியின் பிரதேசங்களில் சேதங்களை ஏற்படுத்தினர். எனினும் இவை சிறிதளவு தற்காலிக வெற்றியையே கொடுத்தன. யுத்தத்தின் முடிவில் பிரித்தானியர் மெயின் பிரதேசத்தின் சில பகுதிகளையும் சனநெருக்கம் குறைவான மேற்பகுதியையும் வைத்திருந்தனர். அமெரிக்கர் டிற்றொயிற்றுக்கு அருகே இருந்த சில பகுதிகளைக் கைப்பற்றினர். எனினும் இவை மீளளிக்கப்பட்டன.

பிரித்தானியாவுக்கு எதிரான இப்போரினால் அமெரிக்கர்களுக்கு ஒரு சுபீட்ச மனோநிலை ஏற்பட்டது. இதனை இரண்டாவது விடுதலைப் போராகக் கருதினர். முக்கியமாக நியூ ஓளியன்சிலும், போல்ரிமோர் போர்களிலும் ஏற்பட்ட வெற்றியே இதற்கு காரணமாயிருந்தது. போல்ரிமோர் போரின் வெற்றியை அடிப்படையாக வைத்தே அமெரிக்காவின் தேசிய கீதமான "நட்டத்திரங்கள் நிறைந்த வெற்றிக்கொடி" என்பது இயற்றப்பட்டது. மேலும் கனடாவிலும் தேசிய உணர்வும், ஒற்றுமை உணர்வும் மேலோங்க இப்போர் வழிவகுத்தது. இதே நேரத்தில் ஐரோப்பாவில் நெப்போலியனின் போர்கள் நடந்து கொண்டிருந்தமையால் பிரித்தானியா இப்போரை ஒரு பக்க நிகழ்வாகவே கருதியது. மேலும் பிரித்தானியரை இப்போர் அதிகம் பாதிக்காத காரணத்தால் நாளடைவில் அமெரிக்காவுடன் ஒரு சமாதான உறவைக் கடைப்பிடிக்கலாயினர்.



படம் - 2 லோறா செகோட் என்ற விசுவாசி அமெரிக்கப் படைகள் தாக்கவிருப்பதை படைத்தலைவர் ஜேம்ஸ் பிற்சிபொன்னுக்கு தெரிவிக்கிறார் - 1813.

**- துறையூரான் -**


STATE FARM INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# ஆன்மீகப் பாதையில் ஆட்கொள்ளப்படுதல்

***உங்கள் ஒவ்வொரு சுவாசமும், எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும், செய்யும் ஒவ்வொரு செயலும் உங்கள் வாழ்வில் ஓர் ஆன்மீக செயல்முறையாக மாறுகிறது.***



## சத்குரு வாசுதேவ்

நீங்கள் ஆன்மீகப் பாதையில் உண்மையாகவே நடையிடுகிறீர்கள் என்றால் அது உங்கள் பெரும் விருப்பமாக மட்டும் இருப்பதில்லை. நீங்கள் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் விழிப்பு நிலையின் உச்சத்தை நீங்கள் தொடவேண்டுமென்றால், உங்களிடமிருக்கும் அத்தனை சக்தியையும் ஒரே திசையை நோக்கி ஒருமுகப்படுத்த வேண்டும். அதை பத்து திசைகளில் சிதறடிப்பீர்களேயானால், நீங்கள் எங்கும் செல்லப் போவதில்லை. உங்களிடம் இருக்கும் அத்தனை சக்தியையும் ஒரே திசையில் செலுத்தினாலும் கூட அது போதாது. அதனால் தான் வேண்டியபோது உங்களுக்கு உதவியாய், உங்களை உயர்த்துவதற்கு குரு துணை வருகிறார். ஆனால் உங்கள் சக்தியை பத்து திசைகளில் விநியோகித்துக் கொண்டே போனால் பலன் ஏதும் இருக்காது. எனவே, இதை பெரும் விருப்பமாக மட்டும் கொள்ளாமல் நீங்கள் ஆன்மீகத்தால் ஆட்கொள்ளப்பட வேண்டும், அதைத் தவிர வேறு எதுவும் உங்கள் நினைவில் இல்லை, உங்கள் எல்லா முயற்சிகளும் அந்த நிலையை நோக்கி உங்களை கொண்டு செலுத்தத்தான் என்ற தன்மையில் இயங்குகிற போதுதான் உங்கள் ஆன்மீகத் தன்மை அர்த்தமுள்ளதாகிறது. அப்படியில்லாமல் உங்களின் வெவ்வேறு ஆர்வங்களில் ஒன்றாக மட்டும் ஆன்மீகம் இருக்கிறதென்றால், பலர் பலவிதமான பொழுபோக்குகளை ஏற்படுத்தி இருப்பதைப் போல ஆன்மீகமும் உங்களுக்கு பொழுதுபோக்காக மட்டுமே இருக்கும் என்றால் அத்தகைய மனிதர்களுக்கு நான் என்ன சொல்வது? ஆனால் உண்மையிலேயே உங்களை உணர நீங்கள் விரும்பினால் உங்கள் முழு இருப்பும் அதை நோக்கிய கவனக் குவிப்பில் இருக்க வேண்டும். அதனால் அந்த தன்மையால் நீங்கள் முழுவதும் ஆட்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதற்காக நீங்கள் மற்ற விஷயங்களில் ஈடுபாடு செலுத்தக் கூடாது என்றில்லை. நீங்கள் உங்கள் குடும்பத்தையோ, சமூகப் பொறுப்புக்களையோ நிகழ்த்த முடியாது என்றில்லை. அவற்றையும் கூட உங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு நீங்கள் பயன்படுத்தலாம். உங்கள் ஒவ்வொரு சுவாசமும், எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியும், செய்கின்ற ஒவ்வொரு செயலும் உங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கான படிநிலையாக மாறக் கூடும். அப்போது தான் உங்களுக்கு வேறு எந்த உரசல்களும் வருவதில்லை. இது என்னுடைய ஆன்மீகப்பாதை, இது என்னுடய குடும்பம், இது என் தொழில், இது என் பொழுபோக்கு, இது என் குடிகார நண்பர்கள் என்று நீங்கள் பிரிக்கிறபோது தான் மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது. உண்ணுவதைக் கூட உங்களை உணர்வதற்காக உண்ணுங்கள். ஏதேனும் பருகினால் கூட அந்த நோக்கத்திலேயே பருகுங்கள். நீங்கள் செய்கிற பணி கூட உங்களை உணர்வதற்கான ஒரு கருவியாக இருந்தால் அங்கே மோதல்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www. ishafoundation.org
www. ishayoga.org

# கனவுகள்: வருங்கால...

வருடாந்திரச் செலவுகளையும் பன்னிரண்டால் வகுத்து மாதச் செலவுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். இது தவிர அவ்வப்போது செய்யும் செலவுகளையும் தக்கமுறையில் மாதாந்திர செலவாக மாற்றிக் கொள்ளுங்கள். உதாரணத்துக்கு உடைகள், பர்னிச்சர் போன்றவை. சில மாதங்களுக்கு உங்கள் உண்மையான செலவுகள் எல்லாவற்றையும் எழுதிப் பாருங்கள். நீங்கள் திட்டமிட்ட செலவும், உண்மையில் செய்த செலவும் ஏறத்தாழ சரியாக உள்ளதா என்று கவனியுங்கள். மாதாந்திரச் செலவில் மறக்காமல் உங்கள் கிரிடிட் கார்ட், கடன்கள், இன்சூரன்ஸ் போன்றவற்றிற்கு கட்டும் பணத்தையும் சேர்க்க வேண்டும். வாடகை அல்லது வீட்டுக்கடன் பெருஞ் செலவாக இருக்கும். இப்போது இரண்டாவது சிட்டைக்கு வருவோம். இந்த சிட்டை உங்கள் சொத்து மதிப்பைக் கணக்கிட உதவுகின்றது. உங்களுடைய எல்லா சொத்துக்களையும் பட்டியல் இடுங்கள். வீடு, கார், நகை, வங்கி ரொக்கம் என எல்லாவற்றையும் பட்டியல் இடுங்கள். பிறகு உங்களுக்கு வீட்டுக் கடனிலிருந்து கிரிட் கார்ட் கடன் வரை இருக்கும் எல்லா கடன்களையும் பட்டியல் இடுங்கள். மொத்த சொத்திலிருந்து மொத்தக் கடன்களைக் கழிக்கும் போது என்ன எண் மீதம் உள்ளதோ அதுதான் உங்கள் பெறுமதி. உங்களின் நிகரி சொத்து அல்லது பணமதிப்பு அதுதான்.

இப்போது முதல் சிட்டையில் உபரி வருகின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த உபரியைக் கடன்களைக் குறைக்கப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக அதிக வட்டியில் உள்ள கிரிடிட் கார்டு கடன்களைக் குறைக்கப் பயன்படுத்த வேண்டும். கிரிடிட் கார்டுக்கு எப்போதுமே முழுத்தொகையையும் கட்டி விடுவது தான் சாலச் சிறந்தது. முதல் சிட்டையில் வரும் உபரியைக் கொண்டு, கடன் இல்லாத பட்சத்தில் மாதந்தோறும் சேமித்து சொத்து மதிப்பை அதிகரிக்கலாம்.

முதல் சிட்டையில் துண்டு விழுகின்றது என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் என்ன செலவுகளைக் குறைக்கலாம் என்று யோசிக்க வேண்டும். மேலும் தேவைப்பட்டால் வருவாயை அதிகரிக்க இன்னொரு வேலை, ஓவர் ரைம் போன்றவற்றையும் செய்ய வேண்டியிருக்கும். கடனோ, சேமிப்போ கவனத்தில் கொள்ள வேண்டிய வார்த்தைகள். ‘வட்டி’ மற்றும் ‘கூடுதல்’ அல்லது ‘கூட்டுவட்டி’. கூட்டுவட்டி என்பது வட்டிக்கு வட்டி, வங்கிகளும், கிரிடிட் கார்டு கம்பனிகளும் கடனுக்கு மாதாந்தோறும் (கூட்டு) வட்டி கணக்கிடுகின்றன. உங்கள் சேமிப்புக்கோ ஆண்டுதோறும் கூட்டிவட்டி தருகின்றன. மூன்று சதவீத மாதாந்திரக் கூட்டுவட்டி மூன்று சதவீத வருடக் கூட்டு வட்டியை விட கூட இருக்கும்.

### 3. இப்போது நிதி சம்பந்தமாக உங்கள் குறிக்கோள் என்ன?

சிந்தியுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட குறிக்கோள்கள் வரலாம். பிள்ளைகள் படிப்பு, பெற்றோருக்கான செலவுகள், தன்னுடைய ஓய்வுகாலம் என்று ஒன்றுடன் ஒன்று முரண்படலாம். இவற்றில் எதெது எந்த அளவுக்கு முக்கியம் என்று குடும்பத்தினர் அனைவருடனும் கலந்து முடிவு எடுங்கள். பிள்ளைகளையும் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாக அவர்கள் சம்பந்தப்பட்ட முடிவுகளில் அவர்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும். உங்கள் குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட்ட பின் இருக்கும் சேமிப்புக்களையும், இனி சேமிக்க உள்ள ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு தேவை என்று முடிவு செய்து எப்படி அடையப் போகின்றீர்கள் என்பதையும் தீர்மானியுங்கள். பணத்தையும் பற்றி ஆராயுங்கள். திடீரென்று பெரிய செலவுகள் வந்தால் பலமுறை யோசித்து தேவைப்பட்டால் மட்டுமே செலவு செய்யுங்கள். இல்லையேல் அச் செலவீனங்களைத் தள்ளிப் போடுங்கள். சிறிய செலவுகள், உதாரணத்துக்கு உணவு, சினிமா போன்றவை சற்றே கூடினாலும் பரவாயில்லை. வாழ்க்கையில் கேளிக்கைகளும் தேவையே. அளவுக்குள் இருக்கும் வரை, செலவுகள் சற்றே கூடினாலும் சரியே.

4. இப்போது கடைசி கட்டம். உங்கள் சேமிப்புக்களையும், முதலீடுகளையும் ஆராய வேண்டிய நேரம். உங்கள் நிதி ஆலோசகரின் உதவியுடனோ, (உதவி இல்லாமலோ) இதை நீங்கள் செய்யலாம். இந்தக் கட்டத்தில் சில விடயங்களை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**1. உங்கள் குறிக்கோள் - குறுகிய காலத்திற்கா? நீண்ட காலத்திற்கா?**
குறுகிய காலத்திற்கு என்றால் பாதுகாப்பான முதலீடுகளையே நாடுங்கள்.

**2. ரிஸ்க் எடுக்கும் தன்மை. எவ்வளவு?**
குறைவாக இருந்தால் பாதுகாப்பான முதலீடுகள் தான் பதில்.

3. சொத்துக்களின் கலவை - எல்லோரின் சொத்தையும் நான்காகப் பிரிக்கலாம். (அ) ரொக்கம்: வங்கியில் இருக்கும் பணம் போன்றவை. (ஆ) நிரந்தர வருவாய் (GIC போன்றவை) (இ) பங்குச் சந்தை சம்பந்தப்பட்ட முதலீடுகள் (ஈ) ரியல் எஸ்ரேற் (வீடு போன்றவை) பொதுவில் இந்த ஆய்வில் ரியல் எஸ்ரேற்றை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. மற்றபடி உங்கள் வயதை நூறில் கழித்தால் என்ன வருகிறதோ அந்த அளவுதான் பங்குச் சந்தையில் ஒருவர் முதலீடு செய்ய வேண்டும் என்று ஒரு பொதுவிதி உள்ளது. அந்த வகையில் 40வயது நபர் 60 சதவீதமும் 50வயது நபர் 50சதவீதமும் பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம். இது பொதுவிதி. இந்தப்பொதுவிதி உங்களுக்குப் பொருந்தாமலும் இருக்கலாம்.

விலைவாசி ஏற்றமோ, பொருளாதார தேக்கமோ, மந்த நிலையோ பொருளாதாரச் சூழ்நிலை எதுவானாலும் பணத்தைப் பற்றிய அடிப்படையில் விதியில் எப்போதுமே மாற்றம் இருப்பதில்லை. அந்த அடிப்படை விதி இதுதான். சேமியுங்கள், கடன்களைக் குறையுங்கள், கவனத்துடன் முதலீடு செய்யுங்கள்.

உங்களுக்கு இந்தக் கட்டுரையைப் படித்த பின் வரும் கேள்விகளை Vlambaram@sympatico.ca என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். அடுத்து வரும் விளம்பரம் இதழ்களில் பதிலை எதிர்பார்க்கலாம்.

# 2010 இல் இரண்டாவது...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



மூடியுள்ளது. பூகம்பம் ஏற்பட்டு ஒரு சில மணிநேரங்களில் சிலியின் றோயின்சன் தீவை மூன்று மீற்றர் உயரமான அலைகள் தாக்கியது.

சிலியில் ஏற்பட்ட பூகம்பம் கடந்தமாதம் ஜனவரி 12ஆம் திகதி ஹெற்டியின் தலைநகர் Port Ao Prince இல் ஏற்பட்டதனை விட 1000 மடங்கு சக்தி வாய்ந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். ஹெயிற்டி பூகம்பத்தில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

சிலியில் மே 22, 1960 இல் 9.5 பெறுமதியானன பூகம்பம் ஏற்பட்டது. இதில் 1655 மக்கள் உயிரிழந்துள்ளனர்.

தகவல்: பரப்பு 756,950 km.
மக்கள் தொகை: 17 மில்லின் (பெப்ரவரி 2010 அண்ணளவாக)

சுதந்திரமடைந்தது - செப்ரெம்பர் 18, 1810
GDP - $!4,525 per Capital
ஜனாதிபதி: Michelle Bachelet
அரசமொழி: ஸ்பானிஷ்
தலைநகர்: சந்தியாகோ
நாட்டின் நீளம்: 4630 கி.மீ. அகலம் 430 கி.மீ.

# வியாபார நிறுவனம் தனது ஊழியர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் இலாபம் ஈட்டுகின்றதா?

வியாபார நிறுவனம் ஒன்று போட்டிச்சந்தையில் நிலைத்திருப்பதற்கும், இலாபமீட்டுவதற்கும் தனது ஊழியர்களை ஊக்கப்படுத்துதல் அவசியமானதாகும்.

கடந்த பெப்ரவரி 01ம் திகதி வெளியாகியிருந்த விளம்பரம் பத்திரிகையின் பத்தியொன்றில் வியாபார நிறுவனம் இலாபமீட்டுவதற்கு திட்டமிடலும், சூழற்காரணிகளும் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதென முகாமைத்துவக் கருத்துக் களினூடாகக் கட்டுரை ஒன்றின் மூலம் நோக்கப்பட்டிருந்தது.

வியாபார நிறுவனம் தனது ஊழியர்களை செயலூக்கப்படுத்துவதனூடாக எவ்வாறு போட்டிச்சந்தையில் நிலைத்திருக்கவும், பெருலாபம் ஈட்டக்கூடியதாகவுள்ளதென்பது தொடர்பாக இக்கட்டுரையில் நோக்கலாம்.

இன்றைய இக்காலகட்டத்தில் பாரிய வர்த்தக நிறுவனங்கள் நவீன முகாமைத்துவ, நிர்வாக தந்திரோபாயங்களைக் கையாண்டு பெருலாப மீட்டுவதுடன் போட்டிச்சந்தையில் நீடித்து நிலைக்கவும் செய்கின்றன. கனடா நாட்டில் சிறுமுதலீட்டுடன் கூடிய சிறுவர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் எம்மவர்கள் வியாபார போட்டிச்சந்தையில் நிலைத்திருக்கவும், இலாபமீட்டுவதற்கும் பல்வேறு காரணிகள் காரணமாக அமைகி ன்றன. அவற்றினைச் சரியாக இனம்கண்டு கொள்ளாமையாலும், உடனடித்தீர்வினைக் கண்டறியாமையாலும் பல வர்த்தக நடவடிக்கைகள் இடைநடுவில் கைவிடப்படு வதையும், நட்டமடைவதையும் நாம் காண்கின்றோம். அவற்றில் ஒருசில காரணிகளாக சூழற்காரணிகள், திட்டமிடல் என்பன தாக்கம் செலுத்துகின்றன என்பது பற்றி முன்னைய கட்டுரையில் நோக்கப்பட்டிருந்தது. இலாபமீட்டுவதன் மற்றொரு காரணியாக ஊழியர்களை ஊக்கப்படுத்துதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

எந்தவொரு வர்த்தக நிறுவனத்தின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதேயாகும். அந்த நோக்கத்தை அடைவதற்கு திறமையான ஊழியர்களை ஆட்சேர்ப்பது பொதுவான நடைமுறையாகும். திறமை மாத்திரமன்றி ஊக்கம் மிக்கவர்களாகவும் ஊழியர்கள் சேர்க்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். நிறுவனத்தின் நோக்கம் இலாபமீட்டுவதாக இருப்பதால் நிறுவனத்தில் கடமைபுரியும் ஊழியர்களும் நிறுவனம் இலாபமீட்டுவதற்கு தாம் எவ்வாறு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக கடமைபுரிய வேண்டுமென ஒவ்வொரு நிறுவனங்களாலும் எதிர்பார்க்கப்படு கின்றது. அதாவது முகாமைத்துவக்கருத்தில் கூறுவதாயின் நிறுவனத்தின் நோக்கமும், பணியாற்றும் ஊழியர்களது நோக்கமும் ஒன்றாக அமைய வேண்டும். எனவே நிறுவனத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டு ஊழியர்களை செயலூக்கப் படுத்த வேண்டிய அவசியம் நிறுவனத்திற்கு உண்டு.

நிறுவனத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டு ஊழியர்களை வேலை செய்யத்தூண்டுகின்ற ஒரு செயற்பாடே ஊக்கப்படுத்துதல் அல்லது செயலூக்க மளித்தல் எனப்படுகின்றது. இதற்காக நிறுவனச் சொந்தக்காரர்கள் அல்லது முகாமையாளர் பொருத்தமான ஊக்கப்படுத்தல் மூலம் ஊழியர்களது செயற்றிறனை அதிகரித்து நிறுவனத்தின் இலாபமீட்டும் நோக்கத்தை அடைந்துகொள்ள முற்படுகின்றனர். எனவே நிறுவனச் சொந்தக்காரர் ஊழியர் ஊக்கப்படுத்தல் தொடர்பான சிறந்த அறிவினைப் பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

ஊக்கப்படுத்தல் என்ற விடயம் சிறுவர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அனேக நிறுவனங்களில் கைக்கொள்ளப் படாமையால் அல்லது குறைவாகக் காணப்படுவதால் நிறுவனம் தனது நோக்கத்தை அடைந்து கொள்ளமுடியாது போகின்றது. அது மாத்திரமன்றி நிறுவனம் தொடர்பான வேறு பல பிரச்சனைகளுக்கும் சரியான ஊக்கப்படுத்தல் இன்மை காரணமாக அமைகின்றது. உதாரண மாக ஊழியர் வரவின்மை, வேலையில் அக்கறையின்மை, வேலைத்தரம் பாதிப்படைதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் முகாமைத்துவக் கருத்துகள் ஆய்வாளர்களால் முன்வைக்கப் பட்டுள்ளன. கடந்த காலங்களில் கூடுதலாக வேலை செய்பவர்களுக்கு கூடுதலான பணம் கொடுக்கப்பட்டு ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்பட்டனர். அதாவது பணத்தினூடாக ஊழியர்களை ஊக்கப்படுத்தலாம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இது பழமைவாய்ந்த அணுகுமுறையென ஆய்வாளர்களால் குறிப்பிடப்பட்டது.

பணத்தினால் மட்டும் ஊழியர்களை ஊக்கப்படுத்த முடியாது என்ற கருத்து பின்னைய காலங்களில் உணரப்பட்டது. தொடர்ச்சியாக ஒரே வேலையைச் செய்யும் போது ஏற்படும் சலிப்பானது ஊழியர்களின் ஊக்கத்தை குறைவடையச் செய்கின்றதென ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டது. ஊழியர்களது சமூகத்தேவையை பூர்த்தி செய்து நிறுவனத்திற்கு அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள் என்ற உணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் ஊழியர்களை ஊக்கப்படுத்தலாம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதாவது ஊழியர்களை அவர்களது வேலை தொடர்பாக போதிய தீர்மானம் எடுப்பதற்கான வசதியளித்தல், ஊழியர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றினுடாக ஊக்கப்படுத்தலாம் என்ற கருத்து மானிடவியல் அணுகுமுறை என்ற ஆய்வினூடாக கண்டறியப்பட்டது.

இருப்பினும் ஊக்கப்படுத்தலானது ஒருசில காரணிகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது பல காரணிகளில் தங்கியுள்ளதென்ற விடயம் தற்கால அணுகுமுறையாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது சிலவகையான ஊழியர்களை ஊக்கப்படுத்தும் முறைமை வேறு சிலவகையான ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்குப் பொருத்தமற்றதாகக் காணப்படும். உதாரணமாக கூடுதலான பணத்தினை வழங்குவதன் மூலம் சிலவகையான ஊழியர்களை ஊக்கப்படுத்தலாம். ஆனால் வேறு சிலரை பணத்தின் மூலம் ஊக்கப்படுத்த முடியாது. வேறு சிலருக்கு வேலைக்குத் தகுந்த அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் ஊக்கப்படுத்தலாம். இந்தவகையில் பொதுவான முறைமையினூடாக சகல ஊழியர்களையும் ஊக்கப்படுத்த முடியாது என்ற கருத்து தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஊக்கப்படுத்தலுக்கு எவை காரணங்கள், ஊக்கப்படுத்தல் எவ்வாறு மேற்கொள்ளப்படு கின்றது என்பதன் அடிப்படையில் ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் (Motivation Theories) பல கோட்பாட்டாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு முன் வைக்கப்பட்டுள்ளது. 1943ம் ஆண்டில் ஆபிரகாம் மாஸ்லோவால் முன்வைக்கப்பட்ட மாஸ்லோவின் படிமுறை அமைப்புக் கோட்பாடு (Maslow's Hierarchy of Needs Theory) 1960ம் ஆண்டில் பிரடெறிக் ஹேர்ஸ்பேக்கினால் முன்வைக்கப்பட்ட இருகாரணிக் கோட்பாடு (Two Factor Theory) 1960ம் ஆண்டில் J.S.அடம்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்ட சமனிலைக்கோட்பாடு (Equity Theory); 1960ம் ஆண்டில் விக்டர் வூம் என்பவரால் முன்வைக்கப்பட்ட மற்றொரு கோட்பாடான எதிர்க்காப்புக் கோட்பாடு (Expectancy Theory); மற்றும் ஹாவாட் பல்கலைக்கழகத்தைச் சேரந்த டேவிட் மக்லிலாண்டும் சக ஆய்வாளராலும் முன்வைக்கப்பட்ட சாதனை ஊக்குவிப்புக் கோட்பாடு (Achievement Motivation Theory) போன்ற ஊக்குவிப்புக் கோட்பாடுகளிலிருந்து சிறந்த ஊக்கப்படுத்தலானது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

- ஊழியர்களை வேலைசெய்யும்படி தூண்டுதல்
- உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்துவதாகக் காணப்படல்
- சிறந்த ஊக்கப்படுத்தல் ஊழியர்களின் சகல தேவைகளை யும் திருப்திப்படுத்துவதாகக் காணப்படல்
- நெகிழ்வுத் தன்மையினைக் கொண்டிருத்தல்
- ஊக்கப்படுத்தல் திட்டம் எல்லோரையும்

ஒரேமாதிரியாக நடாத்துவதாகக் காணப்படல் வேண்டும். ஒரு பகுதிக்குச் சார்பாக காணப்படுதல் கூடாது.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு இன்றைய பொருளாதார சூழலிற்கேற்ப நிறுவனங்கள் ஊக்கப்படுத்தல் தொடர்பாக பல்வேறு முகாமைத்துவ தந்திரோபாயங்களை பின்பற்றுகின்றன. அவைபற்றி நோக்குவோமாயின்

வேலையினைச் சிறப்பாக்கல் (Job Enrichment) - அதாவது வேலை தொடர்பான பொறுப்புக்களையும், அங்கீகாரத்தையும், சாதனைபுரிவதற்கான வாய்பினையும் அதிகரிக்கும் பொருட்டு ஊழியர் தனது வேலையினை திட்டமிடல், கட்டுப்படுத்தல், அமல்படுத்தல் என்பவற்றில் தானே ஈடுபட்டு வேலை தொடர்பாக கூடியளவு சுதந்திரத்தையும், தனது வேலையைத் தானே


குமா. ஜெயகுமார்
(B.A;Dip.in.Mgt;Dip.in.HRM-Srilanka)
aojeyakumar@yahoo.com




தொடர்ச்சி 25ம் பக்கம்




# தங்கப்பதக்கங்களில் கனடா உலக சாதனை!

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கிடைத்த முதல் தங்கம் என்ற பெருமை பெற்றனர். அதுமட்டுமல்லாமல் Ice Dance முதலாவது North American என்ற பெருமையையும், அதிகுறைந்த வயதில் தங்க பதக்கம் வென்ற Couple என்ற இரண்டு சாதனையும் படைத்துள்ளனர்.

• 2006ஆம் ஆண்டு Ice Hockey யில் கால்இறுதி ஆட்டத்தில் ரஷ்யா கனடாவை வீட்டுக்கு அனுப்பியது. 2010ஆம் ஆண்டு கால் இறுதியாட்டத்தில் 7:3 என்ற கோல் அடிப்படையில் ஆண்டுகளுக்கான Ice Hockey ஆட்டத்தில் ரஷ்யாவை வென்று கடந்த 30 வருட ஒலிம்பிக் சரித்திரத்தில் முதல்முறை ரஷ்யாவை கனடா வென்று சாதனை படைத்துள்ளது.

பதக்கத்தை வென்ற கனேடியப் பெண்மணி என்ற பெருமையை பெற்றார். குளிர்கால ஒலிம்பிக்ஸ் இன் போது மாரடைப்பினால் தனது தாய் இறந்த போதிலும் மனதளவில் மிகவும் உறுதியாக இருந்து இந்தப்பதக்கத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

• வன்கூவரில் நடைபெற்ற 21 ஆவது குளிர்கால ஒலிம்பிக்போட்டி கோலாகலமான விழாவுடன் ஒலிம்பிக் கொடியை ரஷ்சியாவிடம் கையளித்ததுடன் இனிதே நிறைவுற்றது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | USA | United States | MEDAL WINNERS | 9 | 15 | 13 | 37 |
| 2 | GER | Germany | MEDAL WINNERS | 10 | 13 | 7 | 30 |
| *3* | *CAN* | *Canada* | *MEDAL WINNERS* | *14* | *7* | *5* | *26* |
| 4 | NOR | Norway | MEDAL WINNERS | 9 | 8 | 6 | 23 |
| 5 | AUT | Austria | MEDAL WINNERS | 4 | 6 | 6 | 16 |
| 6 | RUS | Russia | MEDAL WINNERS | 3 | 5 | 7 | 15 |
| 7 | KOR | South Korea | MEDAL WINNERS | 6 | 6 | 2 | 14 |
| 8 | CHN | China | MEDAL WINNERS | 5 | 2 | 4 | 11 |
| 8 | SWE | Sweden | MEDAL WINNERS | 5 | 2 | 4 | 11 |
| 8 | FRA | France | MEDAL WINNERS | 2 | 3 | 6 | 11 |
| 11 | SUI | Switzerland | MEDAL WINNERS | 6 | 0 | 3 | 9 |
| 12 | NED | Netherlands | MEDAL WINNERS | 4 | 1 | 3 | 8 |
| 13 | CZE | Czech Republic | MEDAL WINNERS | 2 | 0 | 4 | 6 |
| 13 | POL | Poland | MEDAL WINNERS | 1 | 3 | 2 | 6 |
| 15 | ITA | Italy | MEDAL WINNERS | 1 | 1 | 3 | 5 |
| 15 | JPN | Japan | MEDAL WINNERS | 0 | 3 | 2 | 5 |
| 15 | FIN | Finland | MEDAL WINNERS | 0 | 1 | 4 | 5 |
| 18 | AUS | Australia | MEDAL WINNERS | 2 | 1 | 0 | 3 |
| 18 | BLR | Belarus | MEDAL WINNERS | 1 | 1 | 1 | 3 |
| 18 | SVK | Slovakia | MEDAL WINNERS | 1 | 1 | 1 | 3 |
| 18 | SLO | Slovenia | MEDAL WINNERS | 0 | 2 | 1 | 3 |
| 18 | CRO | Croatia | MEDAL WINNERS | 0 | 2 | 1 | 3 |
| 23 | LAT | Latvia | MEDAL WINNERS | 0 | 2 | 0 | 2 |
| 24 | GBR | Great Britain | MEDAL WINNERS | 1 | 0 | 0 | 1 |
| 24 | KAZ | Kazakhstan | MEDAL WINNERS | 0 | 1 | 0 | 1 |
| 24 | EST | Estonia | MEDAL WINNERS | 0 | 1 | 0 | 1 |

• கனேடிய ஐஸ் ஹொக்கி பெண்கள் அணி (Golden Girls) தொடர்ந்து 3 ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் (2002, 2006, 2010) தங்கப்பதக்கத்தை வெற்றிபெற்று ஒலிம்பிக்ஸ் சரித்திரத்தில் சாதனை படைத்துள்ளது. 2010 ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் எல்லா ஆட்டங்களிலும் வெற்றிபெற்று எவருமே தோற்கடிக்க அணியாக திகழ்கிறது. 18 வயதுடைய கியூபெக் மாநிலத்தைச் சேர்ந்த Poulin 2 கோல்களை மிகவும் இலாவகமாக அடித்து 2 - 0 என்ற கோல் அடிப்படையில் அமெரிக்க அணியை வெற்றியீட்டி கனேடிய மண்ணுக்கு தங்கப்பதக்கத்தை பெற்று பெருமை சேர்த்தது.

• குளிர்கால ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் Figer Skating இல் கனேடிய வீராங்கனை Joannie Rochette வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். இவர் 1988 ஆம் ஆண்டு வெற்றிபெற்ற முதல் கனேடிய வீராங்கனையான Elizabeth Manley இற்கு 12 வருடங்களுக்கு பின்னர் முறியடித்து

# விளையாட்டுத் தகவல்கள் 278

## சாதனை நாயகன் சச்சின் : ஒருநாள் போட்டியில் உலக சாதனையான இரட்டை சதம்

தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் இரட்டை சதம் அடித்து புதிய சாதனையை படைத்துள்ளார். நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 401 ஓட்டங்களை பெற்றது. இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய சச்சின் டெண்டுல்கர் 06 சிக்கசர், 25 பவுண்டரிகள் அடங்கலாக 200 ஓட்டங்களை பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்திய மக்களுக்கு இந்த இரட்டை சதத்தை அர்ப்பணிக்கிறேன் : டெண்டுல்கர்

ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையை டெண்டுல்கர் பெற்றார். குவாலியரில் நடந்த ஆட்டத்தில் அவர் ரசிகர்களுக்கு விருந்து படைத்தார். இது குறித்து தெண்டுல்கர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, 'இரட்டை சதம் அடிப்பேன் என்று நான் நினைத்தது இல்லை. 175 ரன்னை தொட்ட போது தான் எனக்கு அந்த ஆர்வம் ஏற்பட்டது. அப்போது 42 ஓவர் தான் முடிந்து இருந்தது. இந்த வாய்ப்பு கிடைத்ததும் ஒவ்வொரு ரன்னாக எடுக்க முடிவு செய்தேன். ஏனென்றால் மறுமுனையில் டோனியின் அதிரடி ஆட்டத்தை வெகுவாக ரசித்தேன். 200 ரன்னை அடித்ததை எப்படி உணர்வது என்றே எனக்கு தெரியவில்லை. 20 ஆண்டு காலமாக எனக்கு ஆதரவு தந்த இந்திய மக்களுக்கு இந்த இரட்டை சதத்தை அர்ப்பணிக்கிறேன். எனது ஆட்டம் மிகுந்த மகிழ்ச்சியை தந்தது. பந்து சரியான முறையில் மட்டையில் பட்டது. சாதனைக்காக நான் ஆடவில்லை. அது தானாக நடக்கிறது. நான் எப்போதுமே சாதனைக்காக ஆடியது கிடையாது. 200 ரன் எடுத்தது மிகவும் சிறப்பானது.

எனக்காக பிரார்த்தனை செய்த ரசிகர்கள் அனைவரையும் மதிக்கிறேன். அவர்களது வாழ்த்து எனக்கு மிகவும் முக்கியம். 199 ரன்னில் இருந்த போது நெருக்கடி எதுவும் இல்லை. நான் 50 ஓவர்கள் வரை நின்றது மகிழ்ச்சியை தருகிறது. எனது உடல் தகுதிக்கு கிடைத்த நல்ல சோதனையாகும்.

நான் 150 ரன்னில் இருந்த போது 350 முதல் 360 ரன் வரை எடுக்க முடியும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் யூசுப்பதானும், டோனியும் அதிரடியாக ஆடி 400 ரன்னை குவிக்க காரணமாக இருந்தார்கள். யூசுப்பதான் ஆட்டத்தை மாற்றினார். டோனி அருமையாக நிறைவு செய்தார். தினேஷ் கார்த்திக் பேட்டிங்கும் சிறப்பாக இருந்தது.' இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## இந்திய அணி 153 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி : தொடரையும் கைப்பற்றியது

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதும் 2-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று குவாலியரில் நடந்து வருகிறது. டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீரர்களாக சச்சின் சேவாக் களம் இறங்கினர் 3.5 ஒவரில் சேவாக் 9 ரன் எடுத்த நிலையில் பெர்னல் பந்தில் அவுட் ஆனார். சச்சினுடன் ஜோடி சேர்ந்த தினேஷ் கார்த்திக் நிதானமாக விளையாடி ரன் சேர்த்தனர் 33.2 ஓவரில் 79 ரன் எடுத்த நிலையில் கிப்ஸ்சிடம் கேட்சாகி வெளியேறினார்.

தொடர்ந்து விளையாடிய சச்சின் தென் ஆப்பிரிக்கா பந்து வீச்சை நாலாபுறமும் சிதற-டித்தார். 90-வது பந்தில் சச்சின் தனது 46 -வது சதத்தை பூர்த்தி செய்தார். இதில் 13 பவுன்ரிகள் அடங்கும் தினேஷ்கார்த்திக்கை தொடர்ந்து யூசுப்பதான் 39 ரன் எடுத்து அவுட் ஆனார். அதன்பின் களம் வந்த டோனி சச்சினுடன் நிலைத்து நின்று ஆடினார். ஆட்ட இறுதியில் இந்தியா 50 ஓவரி ல் 401 ரன்கள் எடுத்தது. சிறப்பாக விளையாடிய சச்சின் 147 பந்தில் 25 பவுன்ரிகள் மற்றும் 3 சிக்சருடன் 200 என்ற இமாலய ஸ்கோர்ரை எட்டி உலக சாதனை படைத்தார். டோனி அதிரடியாக விளையாடி 35 பந்தில் 7 பவுண்ரி 4 சிக்சர் உடன் 68 ரன்களும் எடுத்தனர்.

அடுத்து களம் இறங்கிய தென் ஆப்பிரிக்க அணி 42.5 ஓவர்களில் 248 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. இதையடுத்து இந்திய அணி 153 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் வில்லியர்ஸ் 114 ரன்கள் எடுத்து இறுதி வரை ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தார்.

## 20 : அவுஸ்திரேலியா அபார வெற்றி

சிட்னியில் சற்று முன் முடிந்த அவுஸ்திரேலியா - மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் இறுதி 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி எடுத்த 138 ரன்களை அவுஸ்ட்ரேலிய அணி 70 பந்துகளில் அடித்து நொறுக்கி வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்த கோடை கால கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியா ஒரு தோல்வியைக் கூட சந்திக்காமல் வெற்றிகளைக் குவித்துள்ளது. மேற்கிந்திய அணித் தலைவர் கிறிஸ் கெய்ல் டாஸ் வென்று முதலில் பேட் செய்ய முடிவு செய்து, அவர் ஒரு பவுண்டரி ஒரு சிக்சர் அடித்து ஆட்டமிழந்தார். ஆனால் அதன் பிறகு மார்ட்டன், போலார்ட், ஹைண்ட்ஸ், ஸ்மித் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க டவுலின் 31 ரன்களை எடுக்க மேற்கிந்திய அணி 77/6 என்று ஆனது.

கடைசியில் ராம்தினும் ஆட்டமிழக்க 98/7 என்று ஆனது. ஆனால் கடைசியில் தியோநரைன் 36 ரன்களையும், டேரன் சம்மி 11 பந்துகளில் 2 சிக்சர்களுடன் 26 ரன்களையும் எடுக்க மேற்கிந்திய அணி 138/7 என்று முடிந்து போனது.

அவுஸ்திரேலியா இன்னிங்ஸை துவங்கிய முதல் ஓவரை கேமர் ரோச் வீச ஷேன் வாட்சன் ஒரு சிங்கிளை அடிக்க அடுத்த பந்துகளில் அதிரடி மன்னன் டேவிட் வார்னர் 3 சிக்சர்களையும் ஒரு பவுண்டரியையும் அடித்து அதிரடி துவக்கம் கொடுத்தார்.

முதல் ஓவர் முடிந்தவுடன் அவுஸ்திரேலியா 24 ரன்களை எடுத்து முடித்திருந்தது. இரண்டாவது ஓவரை சம்மி வீச அதில் வார்னர் மேலும் ஒரு சிக்சரும், ஒரு பவுண்டரியும் விளாசினார். அடுத்த ஓவரை டிவைன் ஸ்மித் வீச அதிலும் ஒரு பந்தை மிடான் திசையில் சிக்சர் பறக்கவிட்டார் வார்னர். அடுத்த ஓவரை தியோநரைன் வீச அவருக்கும் விழுந்தது இரண்டு பவுண்டரிகள். அடுத்த ஓவரை மில்லர் வீச வாட்சன் இந்த முறை 3 பவுண்டரிகள், ஒரு சிக்சர் என்று புகுந்தார்.

அடுத்த ஓவரில் வார்னர் ஒரு பவுண்டரி அடித்து 18 பந்துகளில் அரை சதம் பூர்த்தி செய்து இருபதுக்கு 20 கிரிக்கெட்டில் இரண்டாவது அதிவேக அரை சதம் கண்டார். மீண்டும் வார்னர் ஒரு சிக்சர் அடித்தார். மீண்டும் போலார்டை ஒரு சிக்சர் வாட்சனும், வார்னர் மில்லரை ஒரு சிக்சரையும் அடித்தனர். 29 பந்துகளில் 67 ரன்கள் எடுத்த வார்னர் அதில் 5 பவுண்டரிகளையும் 7 சிக்சர்களையும் சாதித்தார். ஷேன் வாட்சன் 4 பவுண்டரிகள் 4 சிக்சர்களுடன் 62 ரன்களில் ஆட்டமிழக்காமல் இருக்க 2 விக்கெட்டுகள் இழந்த நிலையில் ஸ்கோர்கள் சமமாயின. அதன் பிறகு பவுண்டரி அடித்து வெற்றியை 70 பந்துகளில் அவுஸ்திரேலியா ஈட்டியது.

அவுஸ்திரேலியா இன்னிங்சில் மொத்தம் 11 பவுண்டரிகள், 11 சிக்சர்கள் என்று ஓடாமலேயே 110 ரன்கள் எடுக்கப்பட்டது. ஆட்ட நாயகனாக டேவிட் வார்னர் தேர்வு செய்யப்பட்டார்.

சாம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதி-16 சுற்று


ஐரோப்பாவின் மிகப்பெரிய கிளப் கால்பந்து போட்டித் தொடரான யு.இ.எ.்.ப்.ஏ. சாம்பியன்ஸ்



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஏப்ரல் 19, 2010

வழமைக்கு மாறாக, அதிகாலையில் கைத்தொலைபேசி தொடர்ந்து அடித்தது. அரைகுறை நித்திரை தூக்கத்தில் தொலைபேசியை எடுத்து குரலைக் கொடுத்தேன். அடுத்த பக்கத்திலிருந்து எனது நண்பரின் மருமகன் கெவின், 'அங்கிள் (Uncle) நாங்கள் உடனடியாக வீடு வாங்கத் தீர்மானித்துள்ளோம்' எனக் கூறினார். அதற்கு இப்ப என்ன அவசரம் என்றவாறு கதையைத் தொடர்ந்தேன். அடமானக்கடன் பற்றிய புதிய மாற்றம் வருவதாக கெவின் கூறினார். திருப்பி அழைப்பதாகக் கூறி தொடர்பை துண்டித்தேன்.

ஏற்கனவே அடமானக்கடனில் மாற்றம் வரலாம் என எனது பழைய கட்டுரைகளில் எழுதியிருந்தேன். இருந்தும், மாசி மாதம் 4 ஆந் திகதி வர இருக்கும், மத்திய அரசின் புதிய நிதி வரவு செலவுத்திட்டத்துடன் வரலாம் என எதிர்பார்ந்திருந்தேன்.

பெப்ரவரி 16, 2010 அன்று மாண்புமிகு கனடிய மத்திய நிதி மந்திரி ஜிம் பிளெய்றிரி (Jim Flagerty) அடமானக் கடன் பெறுவதில் சில மாற்றங்களை கொண்டு வரவுள்ளதாக அறிவித்தார்.

மிகவும் கவனமாக ஆராய்ந்தால் வர இருக்கும் அடமானக் கடன் பற்றிய மூன்று மாற்றங்களுள், பெரிதளவாக ஆதன வியாபாரத்தில் ஏற்ற/இறக்கங்களைக் கொண்டு வரலாம் என எதிர்பார்க்க முடியாது. இது ஒருவகை பயமுறுத்தலாகவே இதனை நான் கருதுகிறேன். அளவுக்கதிகமாக செலவு செய்தல், மிகக்குறைந்த முதலீட்டுடன் விலை தொடர்ந்து ஏறும் என எதிர்பார்த்து ஆதனத்தில் முதலிடுவதை கட்டுப்படுத்துவதே இதன் முக்கியமான நோக்கமாக காணலாம்.

முதல் தடவையாக (First Time Buyers) ஆதனம் வாங்குபவர்களில் ஒரு சில வீத மக்களை ஆதனம் வாங்குவதை சிலவேளை கட்டுப்படுத்தலாம் அல்லது விலை குறைந்த ஆதனத்தை வாங்க நிர்ப்பந்திக்கலாம் என்பது எனது எண்ணம்.

**எவ்வாறான மாற்றங்கள் நிதி மந்திரியால் கொண்டு வரப்பட்டுள்ளது என பார்ப்போம்.**

மூன்று (3) விதமான மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் ஏற்கனவே அடமானக்கடன் பெறும் முறையில் கொண்டு வரப்பட உள்ளது.

1. ஆதனம் வாங்குபவர்கள் தங்களிற்கு ஏற்ற அடமானக்கடன் வட்டி முறையை தேர்வு செய்யக்கூடிய வசதியுள்ளது. புதிய முறையிலும் இதில் எதுவித மாற்றமுமில்லை. ஆனால், பொதுவாக அடமானக் கடனைப் பெறும் ஒருவரின், பெறப்படும் அடமானக் கடனைத் திருப்பிக்கொடுக்கும் தகுதியை ஆராயும்போது, புதிய முறையில், நிதி நிறுவனங்களால் ஐந்து வருடத்திற்குரிய மாறாத வட்டியின் (Closed Mortgage) பெறுமதியைக் கொண்டு, தகுதி கணக் கிடப்படும். இது ஏற்கனவே நடைமுறையில் இருந்த மூன்று வருடத்தை விட இரு வருடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மாற்றமாகும்.

2. முதலீடு நோக்கமாக இரண்டாவது அல்லது அதற்கு மேலாக ஆதனங்கள் வாங்குபவர்கள் குறைந்தது 20% முதலீடு செய்து தான், எதிர்காலங்களில் (April 19, 2010) வாங்கமுடியும். ஒருவர் இருக்கும் ஆதனம் விற்று இரண்டாவது தடவையாக ஆதனத்தை வாங்கி, அங்கு குடியேறுவதாக இருந்தால் 5% முதலீட்டுடன் வாங்கலாம் என்பதனை கவனிக்கவும். அதாவது கடன்பெறுவதற்குரிய தகுதியில் சிறிய இறுக்கம்.

• எனவே முதல் தடவையாக வாங்குபவர்கள் அல்லது குடியிருப்பதற்காக இரண்டாவது, மூன்றாவது தடவையாக ஆதனம் வாங்குபவர்களின் ஆரம்ப முதலீட்டில் (Down Payment) எதுவித மாற்றமும் கிடையாது.

3. ஒரு ஆதனத்தைப் பாவித்து பெறும் கடன் தொகையில் ஏற்பட்ட மாற்றம் இதுவாகும். இதுவரை ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட அடமானத்தின் பெறுமதியை, மேலதிகமாக அதிகரித்து பெறும் பணத்தை பலர் பலமுறைகளிலும் பாவிப்பதை அல்லது செலவு செய்வதை கட்டுப்படுத்துவதற்காக, அல்லது கனடியர்கள் பெறும் கடனின் அளவை மட்டுப்படுத்துவதற்காக மூன்றாவது மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரை ஆதனத்தின் பெறுமதியில் 95% வரையான அடமானக் கடனைப் பெறக்கூடியதாக இருந்தது. புதிய மாற்றத்தில் இந்தப் பெறுமதி 90% ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அடமானக் கடனின் மூன்று மாற்றங்கள் முறையே:

1. 5 வருடத்தில் வைத்து அடமானக்கடனின் தகுதி பெறப்படுகிறது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**
**ராஜா மகேந்திரன்**
**தொடர் - 315**


## HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga
Tel.: 905.712.2666




**Downtown New CONDO. by Tridel**

- **300 Front St.**
- 1 Bedroom
- 1 bedroom + Den
- 2 bedroom
- 2 bedroom + den

**Concord City Place - Toronto**

- Parade 2 - Condo. Special Prices

***Expect - Very soon***

- New Tridle Condos. HWY 427 / Bloor - ***West Village***
- For prices and other information - Pl. call: 416.315.9397

***Lucky Draw*** Sunday August 29, 2010 @ 2:00 pm
> First Price - BMW - 3 series > 2nd price 2 to Cuba
> 3rd price LCD TV (இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு HomeLife GTA Realty ஐ தொடர்பு கொள்ளவும்)

**Condo. for Sale**

***MCLEVIN & NEILSON (Mayfair Buildings)***

- 2 Bedroom corner unit
- Laminated, ceramic floor
- Laminated floor, Ceramic floor
- 24 hours security, swimming pool, in a separate building
- Close to doctors, pharmacy, mall, ttc, highway....
- 1265 sqft
- 2 parking, 1 locker included.
- Price $184,900

***Party Rental Business for Sale***

- Brimley / Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions / Occasions.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Established Business
- Asking Price $99,000 Plus Stock

***Commercial unit for sale - Markham***

- Markham Rd. / Major Mackenzie
- 1,233 Sq.Ft.
- Prime location, visible Strip Plaza
- Suitable Uses Restaurant/Retail (Currently running as a bakery business.
- Asking $349/sqft

***Commercial/Retail for Lease***

- GTA Square Mall
- Rent $950 Gross Lease
- Great Opportunity!
- Only few units left on the mainfloor
- Underground And Surface Parking
- Don't miss this chance.

Nantha Aiyadurai
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



COLDWELL BANKER
COBURN REALTY

நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# துர்க்காதுரந்தரி

நாள்: 17.11.2009, செவ்வாய்க்கிழமை
இடம்: துர்க்காதேவி ஆலயம், தெல்லிப்பழை
தலைமை: செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

மதிப்புக்குரிய செஞ்சொற்செல்வர் அவர்களே! வணக்கத்துக்குரிய அந்தணப் பெருமக்களே! எல்லாம் வல்ல துர்க்காதேவி அம்பாளின்

மெய்யன்பர்களே! தொண்டர்களே!

நீண்ட காலத்துக்குப் பின்னர் உங்கள் எல்லோரையும் காணக்கிடைத்த வாய்ப்பை எண்ணி எம் பெருமாட்டியின் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன். மங்கையர்க்கரசி என்று தொடங்கும் தேவாரத்தை ஒரு காரணத்தோடுதான் பாடினேன் என்பதை உங்களிற் பலர் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

ஞானசம்பந்தப் பெருமான் போற்றிய மங்கையர்க்கரசியார் பற்றி திருத்தொண்டர் புராணத்திலே படித்திருக்கிறோம். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் நாங்கள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. நாங்கள் எல்லோரும் கண்ணாரக் கண்டு போற்றிய மங்கையர்க்கரசியார் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்தாம்.

ஒருவேளை அவர்தான் இவராக வந்து பிறந்தாரோ தெரியவில்லை. எங்கள் சமயத்திலே அத்தகைய நம்பிக்கைக்கும் நிறையவே இடம் இருக்கின்றது.

ஆனால் இருவரும் வெவ்வேறு காலத்தவராதலால் அவர்களுக்கிடையே வேறுபாடுகள் அதிகம்.

ஞானசம்பந்தப் பெருமான் காலத்தில் வாழ்ந்த மங்கையர்க்கரசியார் வளவர்கோன் பாவை, பாண்டிமாதேவி. சோழநாட்டில் இளவரசியாக இருந்தவர் பாண்டிநாட்டில் அரசியானார்.

அது மன்னர் காலம். எங்கள் தங்கம்மா பிறந்தது மக்கள் யுகத்தில். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, படித்து, வளர்ந்து மக்கள் நாயகியாகப் பவனி வந்தார்.

மங்கையர்க்கரசியாருக்கு அதிகாரம் பிறப்பாற் கிடைத்தது. ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பாண்டிநாட்டின் நிலைமை குறித்துச் செய்தி அனுப்பும் முறையிலே அந்த அதிகாரம் செயற்பட்டதைப் பார்க்கிறோம். அரசியார் அழைக்கின்றாரே என்று சம்பந்தர் நாளும் கோளும்கூடப் பாராது, வேயுறு தோளிபங்கனைப் பாடிக்கொண்டு உடனேயே புறப்பட்டுவிட்டார்.

மங்கையர்க்கரசியாரின் சைவப் பணிகளுக்கு அவரது வாழ்க்கைப் பின்னணி - குறிப்பாக அரசி என்கின்ற அதிகார நிலை பெரிதும் உதவியாக இருந்தது என்பதை மறுக்க முடியாது.



தங்கம்மா அவர்களுக்கு அப்படியான அதிகாரம் எதுவும் இருக்கவில்லை. அவரது வாழ்க்கைப் பின்னணி முற்றிலும் வித்தியாசமானது. அவரது பதவிகளும் செல்வாக்கும் அவருக்கு இயல்பாகவே அமைந்த திறமைகளாற் பெறப்பட்டவை. அவருக்கு இருந்த திறமைகளில் ஒன்று நாவன்மை. அவரது சமயப் பணி இந்த நாவன்மையுடன் தொடங்குகின்றது.

மங்கையர்க்கரசியார் சமண சமயத்தைத் தழுவிய பாண்டிய மன்னனைத் திருஞான சம்பந்தப் பெருமானைக்கொண்டு சைவத்துக்கு மாற்றினார். அதனைத் தொடர்ந்து மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பதற்கேற்ப மக்களும் சைவநெறியைத் தழுவலாயினர். அது ஒரு பாரிய மாற்றம், பெரிய தொண்டு. அந்தப்பெரிய தொண்டைச் செய்வதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் சிறியது. அவர் மனைவி என்கின்ற அளவிலே கணவருக்குத் தனது கருத்துக்களைச் சொல்லிய குறிப்புகள் சில பெரியபுராணத்திலே உள்ளன. மற்றும்படி தாமாகச் சமணருக்கு எதிராகப் பரப்புரைகள் எதனையும் பகிரங்கமாகச் செய்யவில்லை.

நாவலர் பெருமான் காலத்திலே சைவர்கள் கிறித்துவ சமயத்துக்கு மாறிக் கொண்டிருந்தனர். அவர் தமது நாவன்மையால் சைவத்தின் பெருமையைப் பரப்புரை செய்தார். அதன் விளைவாகப் பலர் சைவத்திலேயே நின்றுகொண்டனர் என்று அறிகின்றோம். கிறித்துவத்துக்கு மாறியவரும் மீளச் சைவத்தைத் தழுவிக்கொண்டனர் என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன.

நாவலர் பெருமானுக்குப் பின்னர், நாவன்மையால் சைவத்தின் மேன்மையை மக்களுக்கு எடுத்துரைத்தவர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களே. அவரைப்போன்ற வேறு சைவப் பரப்புரையாளரை நான் அக்காலத்தில் கண்டதில்லை. அவரது பரப்புரைகளும் காலத்துக்கு ஏற்றதாகவே அமைந்திருந்தன.
மங்கையர்க்கரசியார் சமணரைக் கழுவேற்றுவதற்கு வழிவகுத்தவர். நாவலர் பெருமானது பரப்புரைகளிற் கண்டனங்களும் கலந்திருந்தன.

ஆனால் தங்கம்மா அவர்களின் சொற்பொழிவுகள் யாரையும் நோகவைத்த வரலாறு இல்லை. கிறித்தவர், இசுலாமியர் என்று எல்லோருமே அவரது கருத்துக்களை விரும்பிக் கேட்டனர். கல்வி, தமிழ், பண்பாடு, சமயம் என்று எந்தப் பொருளிலும் கேளாரும் வேட்ப மொழியும் ஆற்றல் படைத்தவர் அவர்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது
என்ற வள்ளுவனார் வாய்மொழிக்கு அமைய அம்மையாரைச் சொற்பொழிவுக் கலையில் யாரும் வெல்ல முடியாதவாறு அத்துறையில் தனியரசியாகவே திகழ்ந்தார்.

ஒரு சொற்பொழிவாளருக்கு என்ன என்ன தகைமைகள் வேண்டுமோ அத்தனை தகைமைகளும் அவரிடத்தில் அமைந்திருந்தன. பரந்த அறிவு, சொல்வளம் என்பவற்றோடு காலமும் இடமும் அறிந்து கச்சிதமாகப் பேசிமுடிக்கும் விவேகமும் படைத்தவர் அவர். அவற்றோடு, இயற்கைக் கொடைகளாக அமைந்த இனிய குரல், சங்கீத ஞானம், அழகிய தோற்றம் ஆகியவையும் மேலதிக கவர்ச்சிகளாக அமைந்தன. தமிழ்நாடு மட்டுமல்லாது தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் சென்று சமயம் வளர்த்த பெருமைக்குரியவர் தங்கம்மா அவர்கள்.

அவரது புரட்சிகளில் மிக முக்கியமானது சொற்பொழிவுக் கலையை வளர்த்ததுதான், சொற்பொழிவுகளை விரும்பி மக்களைக் கேட்க வைத்ததுதான்.

இளவயதில் பட்டிமன்றங்களிலும் பங்குபற்றியிருக்கின்றார். அவரோடு பல பட்டிமன்றங்களில் நானும் பங்குபற்றியிருக்கின்றேன். அவரது பரந்த அறிவையும் விவாதிக்கும் ஆற்றலையும் கண்டு வியந்திருக்கின்றேன். ஆனாற் பிற்காலத்தில் தனிச் சொற்பொழிவுகளிலேயே கவனம் செலுத்தினார். அதுவும் சமயச் சொற் பொழிவுகள் செய்வதில் அதிக மனநிறைவு கண்டார். என்னையும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றத் தூண்டியவர் அவர்தான்.


நாவலர் பெருமான் காலத்திலே இல்லாத பல நடைமுறைகள் தங்கம்மா காலத்திலே மேலோங்கியிருந்தன. திரைப்படங்கள், சின்னமேளங்கள், வாணவேடிக்கைகள் என்று பல பொழுதுபோக்குக் கவர்ச்சிகள் மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருந்த ஒரு காலத்திலே, சொற்பொழிவுகளைக் கேட்பதில் மக்களுக்கு



கவிஞர் வி. கந்தவனம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்




COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
● EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
● 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✔
● 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✔
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
DIPLOMA முடித்தவர்கள்
ACCOUNTS CLERK · COST CLERK
AUDIT CLERK · PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE · ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT · BOOK KEEPER
போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்
INSTRUCTORS
★ PUSHPA ★ SP ★ RAM
CERTIFICATE COURSES
Buy One Get One Free
WINDOWS, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK
PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elagupplai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Brimortan/Lawrence
$309,900
Detached Bungalow Bed rooms 3+2, Washrooms 3
Sheppard And Conlins
$312,888
Townhouse 2 Storey. Bed rooms 3, Washrooms 2 Close To Ttc, Shopping And U.O.T., Scarborough Campus Well Maintained,
Hwy48/9th Line
$329,000
Townhouse, 2 Story Bed rooms 3, Washroom 2 4 Years New!, Porch Enclosure, Fully Fenced Backyard, Walk To The Park, School
Kennedy/Steeles
$369,000
Detached 2 story, Bed rooms 3+1, Washrooms 3 Finished Basement.Home Office In Garage.Covered Front Porch
9th Line/14th Avenue
$394,900
Semi Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Great Neighbourhood!Close To Hwy 407, Shopping, Banks, Hospital, Schools
9th Line/Reeves Way
$419,000
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 2 Yrs New, Upgraded Kitchen Cabinet,Stainless Steel Appliances,Double Door Entry
Cornell Centre/16th Ave.
$419,000
Detached 2 Story, Bed rooms 4 Washromss 3,Over 2200Sf. Oak Hardwood,Backyard Red Cedar Fence. Professinoal Landscaping
9th Line/Reeves Way
$424,900
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3 Large Pantry, Breakfast Area, Stone & Perennial Lands
Finch & Morningside
$434,900
Detached 2 Story, Bed rooms 4+1, Washrooms 4 Amazing Neighbourhood, 1800 Sq/Ft,Thousand Of Dollars Spent On Upgrades
Markham/Bur Oak Ave
$439,900
Detached 2 story, Bed rooms 4 Washrooms 3, Double Entrances,Driect Access To Garage, Close To Park, Step To School
Major Mackenzie/ Markham
$448,800
Semi Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Hardwood&Ceraminc Floor, Tall Cabinets, Basement W/R/I 3Pc Bath
Hoover Pl/ 10th Line
$454, 900
Detached 2 Story, Bed rooms 3+1, Washrooms 3 Approx. 2000 Sqft. Fully Upgraded Top To Bottom, Close To All Possible Amenities
Brimley/Denison
$459,000
Link 2 Story, Bedrooms 4+2, Washrooms 5, Upgraded Executive Home Outstanding New Roof, Walking Distance To Ttc, School,
9th Line & 16th Ave
$469,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Super-Sized Backyard, Super Floor-Plan With Separate Living & Dining Rooms
9th Line & 14th Ave
$479,900
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3 Upgraded Kitchen Cabinets, Fully Fenced Backyard, Extended Driveway
9th Line/14th Avenue
$486,000
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Maple Hardwood Floor, Hardwood Stairs, Direct Acc Fr Garage, Fenced Yard,
Markham Road/14th Ave
$489,900
Detached 2 Story, Bedrooms 4+2 Washrooms 4 Close To School, Shopping And Park.
Middlefield/Denison
$529,900
Detached Bungalow, Bedrooms 4+2 Washrooms 5, Walking Distance To Ttc, Close To Schools, Shops, 2 Br Basement Apartment
9th Line & 14th Ave.
$599,000
Detached 2 Story Bed rooms 4, Washrooms 4 Close To New Shopping Plaza And 407 Exit. 3,237 Sq.Ft, Lots Of Upgrades
Kennedy /16th Ave
$638,000
Detached 2 Story Bed rooms 4+1, Washrooms 3, Many High Quality Upgrades Maple Hardwood Floor, Marble Counter Tops
Birchmount/Ellesmere
$249,900
Condo Apt. Bed rooms 2, Washrooms 2, A Luxury High Demand Building, 24 Hrs Security Guard
Pickering Beach/Bayly
$359,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Approx. 2300 Sq. Ft.Hardwood Floors And A Fully Remodelled Kitchen
Sales of Business
$525,000 For Sale
Sale Of Business Without Property Gas Stations. Full Service Gas Station On A Very Busy Highway 41
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# தைரோயிட் சுரப்பி வீக்கமும் உணவும்

# Thyroid Gland Swollen and Food

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?




எமக்கு உடம்பும் அதன் உறுப்புக்களும் இருந்தால் போதுமானதல்ல. இவற்றுக்கு இயக்கு நீர் (Hormones)கள் இன்றியமையாத தாகும். நமது உடலின் செயல்களைக் கட்டுப்படுத்தும் நாளமில்லாச் சுரப்பிகளில் இயக்கு நீர்கள் சுரந்து கொண்டு இருக்கின்றன. இச்சுரப்பிகள் உடலை இயக்குவதற்கு முக்கியமாக இருப்பதினால் இயக்கு நீர் என அழைக்கப்படுகின்றது. இந்த இயக்கு நீர்கள் ஒவ்வொரு உறுப்புக்களில் இருந்து உருவாகி நாளம் வழியாக வந்து இரத்தத்துடன் கலவாமல் இரத்தத்தில் இரசாயனப் பொருளாகச் சுரப்பதினால் நாளமில்லா சுரப்பிகளென அழைக்கப்படுகின்றன.

இத்தன்மை பொருந்தியதில் ஒன்றுதான் "தைரோயிட்" சுரப்பி ஆகும். இச்சுரப்பி நமது கழுத்தின் முன்புறத்தில் இரு பக்கங்களிலும் "பட்டாம்பூச்சி" போன்ற உருவத்தில் அமைந்து இருக்கின்றது. இதனை கேடயச்சுரப்பி எனவும் அழைப்பதுண்டு. பரா தைரோயிட் (Para Thyroid Gland) சுரப்பியும் தைரோயிட் சுரப்பியுடன் இணைந்து காணப்பட்டாலும் இதுவும் தைரோயிட் சுரப்பியும் ஒன்றல்ல என்பதையும் நன்கு கருத்தில் கொள்ளவும். இந்த தைரோயிட் (Thyroid Gland) சுரப்பியின் எடை ஏறக்குறைய ஒரு அவுன்ஸ்க்கு குறைவாகக் காணப்படும். இது பெரும்பாலும் சுயமான நிலையில் பார்க்கும்போது எமது கண்களுக்குத் தெரியாது. ஆனால், சில வியாதிகள் ஏற்படும்போது அல்லது தைரோயிட்டில் தாக்கம் அல்லது பற்றாக்குறை ஏற்படும்போது வீக்கமான தோற்றம் தெரியவரும். இவ்வித வீக்கமான தோற்றத்தில் சில மாற்றங்கள் காணப்படலாம்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

A few Bungalow houses near Universities London, Waterloo, Hamilton, Peterborough Good investment for your children

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

Home Based Business for Senior Care
Over 65 years old with Property
100 Acres Farm with Income North of Markham
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.


தைரோயிட் சுரப்பி அதிகமாகச் சுரக்கும்போதும் குறைந்தளவு சுரக்கும் போதும் வீக்க நிலை இருக்கும். இப்படியான வீக்கம் தைரோயிட் சுரப்பியின் இரு பக்கங்களிலும் ஒரே மாதிரி இருக்கலாம். அல்லது ஒரு பக்கத்தில் கூடு மாதிரி இருக்கும். தைரோயிட் இரு வகையான இயக்கு நீர்களை Hormones உற்பத்தி செய்வதாகவும் அறியக் கிடக்கின்றது. முதலாவது தைரோக்ஸின் (Thyroxine) கோர்மோன்ஸ் (Hormone) 4 அயோடின் அணுக்களைக் கொண்டதை T4 எனவும், இரண்டாவது, கோர்மோன்ஸ் 3 அயோடின் அணுக்களைக் கொண்டதை T3 எனவும் அழைக்கப்படுகின்றன. T4 இரத்தத்தில் கலந்து இரத்தோட்டத்தின் போது மற்றும் உறுப்புக்களை சேர்ந்தவுடன் T3 ஆக மாற்றப்பட்டுச் செயலாற்றுவதாகக் கூறப்படுகின்றது. இந்நிலைகளை இரத்த பரிசோதனை மூலம் உரிய வைத்தியர்கள் கண்டு கொள்வார்கள்.

மேலும், தைரோயிட் ஹோர்மோன் (Hormone) சரியான அளவில் இல்லாமல் இருந்தால் சில குழந்தைகளின் மூளை உடல் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதுடன் காதும் கேட்காமல் வாய்பேச முடியாத நிலையும் காணப்படலாம். எனவே, இந்நோய் வயதைப் பொறுத்ததல்ல எவருக்கும் ஏற்படலாம். கருப்பையில் உள்ள சிசுகூடப் பாதிக்கப்படலாம். மேலும் கூறப்போனால் பெண்களுக்கே அதிகம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவர்களின் வயதைக் கணிக்கும்போது 60 வயதைக் கொண்ட ஆண்களிலும் பார்க்க 60 வயதைக் கொண்ட பெண்களுக்கே அதிகம் பாதிப்பு ஏற்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் தைரோயிட் சுரப்பி இயக்கு நீர் பற்றாக்குறையே ஆகும்.

தைரோயிட் பிரச்சினை எந்த வயதில் ஏற்பட்ட போதிலும் அதிகமாக பருவம் அடைந்த பெண் பிள்ளைகள், தாய்மார்கள் போன்றோருக்கு ஏற்படுகின்றது. ஆனால் ஆண்களில் இந்த தைரோயிட் சுரப்பி வெளியில் தெரிவதில்லை. ஆனால், பெண்களில் முகத்தின் நாடிப்பகுதியைப் பிடித்து மேல் நோக்கி உயர்த்திப் பார்க்கும்போது வீக்கம் தெரியவரும். கழுத்துப் பகுதியை தொட்டுப் பரீட்சித்துப் பார்த்தாலும் நன்கு புலனாகும். சிலரைப் பார்த்தால் தைரோயிட் சுரப்பி வீக்கம் ஒரு திரட்சியாக கழலை வடிவில் காணப்படும். இவ்வியாதி பொதுவாக 15 வயதில் இருந்து 28 வயதுள்ள பெண் பிள்ளைகள் இந்த தைரோயிட் வீக்கத்தினால் பீடிக்கப்படுகின்றார் கள். இவ்வீக்கத்தை உரியவர் கண்டு கொள்வதற்கு முன் அவர்களின் உறவினர் நண்பர்கள் முதலில் அறிந்து விடுவார்கள். அப்படி கழுத்துப் பகுதி அதைப்பாக இருக்கும். ஆனால் சிலருக்கு உணவு உண்ணும் போது தொண்டையில் இறுக்கமான உணர்வு தெரியவரும். மற்றும் நமது உடம்புக்குத் தேவையான நீர் உப்புச்சத்து முறையாக அளவாக இருக்க ஒழுங்கு படுத்த தைரோயிட் சுரப்பி ஆதாரமாகவுள்ளது. மேலும் உடல் வளர்ச்சிக்குத்தேவையான கொழுப்பு, புரோட்டின், காபோகைதிரேட் போன்றவற்றை எரிபொருளாக (கலோரி) மாற்றுவதற்கு ஆதாரமாகவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. நரம்பு உணர்ச்சிகளைத் தூண்டும் சக்தி இதற்குண்டு. அத்துடன் விந்து உற்பத்திக்கும் மூலாதாரமாகவும் அமைகின்றது எனவும் அறியக்கிடக்கின்றது.

மேலும், தைரோயிட் இயக்கு நீர் (Hormone) சுரப்பதற்கு ஆரோக்கியம் பொருந்திய தைரோயிட் திசுக்களும் தரமுள்ள உணவும் தைரோயிட் சுரப்பதற்கு முக்கிய தூண்டுகோலாக வுள்ள மூளையின் அடிப்பகுதியில் அமைந்துள்ள பிட்யூற்ரறி (Pituitary Gland) சுரப்பியின் தூண்டுகோல் சரியாக திடமாக இருக்க வேண்டும். இந்த தைரோயிட் உருவத்தில் பெரிதாக இருந்தால் நோயினால் ஏற்பட்ட தைரோயிட் என்றும், குறைந்த உருவத்தில் இருந்தால் அதுவும் ஒருவித குறைபாட்டால் ஏற்பட்டதாகவும் கருத வேண்டும். அதாவது தைரோயிட் குறைந்து அது தேவையினால் ஏற்படும் வீக்கத்தில் நோய் இல்லாமல் தைரோயிட் சுரப்பு பெரி தாகக் காணப்படும். ஒரு உடம்பிற்கு எவ்வளவு தைரோயிட் இயக்கு நீர் இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்கும் ஒருவருக்கு எதுவித சிரமமும் ஏற்படாது. இதற்கு உடம்புக்குத் தேவைான அளவான அயோடின் இருப்பதேயாகும். எனவே அயோடின் எமக்கு முக்கியம் தேவை என்பது புலனாகின்றது. இந்த அயோடின் பெரும்பாலும் மாமிச உணவில் மீன் வகையில் செறிந்து காணப்படுகின்றன. மற்றும் சோயா, பீன்ஸ், காரட், முட்டைக்கோஸ், பால், பருப்பு போன்றவற்றிலும் ஓரளவு காணப்படுவதினால் உணவை எடுக்கும்போது இவற்றில் ஏதாவது பாவித்து வருதல் மிக நன்று. உணவுப் பாவனைக்கு பாவிக்கும் உப்பு அயோடின் உப்பாக இருப்பது மிக நன்மை பயக்கும். ஆனால் அளவுக்கு மிஞ்சி அயோடின் பாவிப்பது நல்லதல்ல. எல்லாம் தகுந்த அளவே சிறந்ததாகும்.

மேலும், வயதானவர்களுக்கு தைரோயிட் சுரப்பி பெரிதானால் மூச்சுக்குழாயை அழுத்தக்கூடும். அயோடின் சத்து குறைவாக இருந்தால் தைரோயிட் சுரப்பியின் அளவும் குறைந்து காணப்படும் என்றும் தைரோயிட் இல்லாத நிலையும் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இன்னும் சிலருக்கு இரத்தம் வடிந்து அதிகளவு பருமனாகி, வலியும் அதிகரித்து மூச்சுக்குழா யும் அடைப்பு ஏற்பட்டுக் கஸ்டம் ஏற்படும் நிலையும் வரலாம் எனவும் அறியக்கிடக்கின்றது.

சிலரை அவதானிக்கும்போது தைரோயிட்




வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013


தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# அமெரிக்கப் பயணம் - 2

## வடிவமைப்புக்களின் ஆக்கம்

லூறே மாகுகைக்குள் இருந்த கல்சியம் காபனேற்றுக்கலவை, காபனீரொட்சைட்டை வெளிவிட்டதனால் சுண்ணாம்பு வீழ் படிவங்கள் ஏற்பட்டன. இவ் வீழ்படிவுகள் ஆரம்பத்தில் வட்டப் பளிங்குருக்கல் சைற்றாக இருக்கும். பின்னர் இவை மேலதிக படிவங்கள் சேர்ந்து ஸ்ரலக்ரைற்ஸாகவும் பல்வேறு ஒழுகுகின்ற சிந்துகின்ற கற்களாகவும் மாற்றமடையும். தூய கல்சியம் காபனேற்றின் நிறம் வெள்ளை. ஆனால் இது நாளடைவில் பல்வேறு அசுத்தங்களை மண்ணிலிருந்தும் கற்பாறைகளிலிருந்தும் அகத்துறிஞ்சி சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தைப் பெறுகின்றது. மேலும் மங்கனீசு ஈரொட்சைட்டை அகத்துறிஞ்சி கறுப்பு நிறத்தையும், செப்புச்சேர்வைகளிலிருந்து நீலப் பச்சை நிறங்களைப் பெற்றிருக்கின்றது. இக்குகை இன்னும் செயற்பட்டுக் கொண்டேயுள்ளது. புதிய படிவுகள் 120 ஆண்டுகளுக்கு ஒரு கனவங்குலம் என்ற வேகத்தில் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

## கொண்டாடப்படும் அமைப்புக்கள்


இக்குகையிலிருந்த நீர்மட்டம் கீழே நிலத்துக்குள் இறங்கியதனால், அரிக்கப்பட்ட இவ்வமைப்புக்கள் பல்வேறு வடிவங்களாக வளரத்தொடங்கின. சரியும் பிசா (Leaning Tower of pisa) கோபுரம் போன்ற பெரிய அமைப்புப் பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. இதில் பல்வேறு துளைகளும் ஓட்டைகளும் பல்வேறு வேலைப்பாடுகளை கொண்டுள்ளன. சிற்பிகள் கூட நினைத்துப் பார்க்க முடியாத பலவகை உருக்களைக் கொண்டிருப்பது வியப்புக்குரியதே. ஆரம்பத்தில் கூறிய மாபெரும் தூண் வீணை இன்னுமொரு வியப்புப் பொருள். இது பல்வேறு நாட்டுப் பாடல்களுக்கும் சமயப்பாடல்களுக்கும் பின்னணி இசையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. நீர்மட்டக்குறைவினால் ஏற்பட்ட அலைபோன்ற படிவங்கள் கூரையில் நன்கு பதிந்திருப்பதும் வண்ணவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பது போல் காட்சியளிக்கின்றன.

குகையின் உட்புறம் மஞ்சள், கபிலம், சிவப்பு நிறங்களில் காணப்படுகின்றது. இது நீரிலிருந்த இரசாயனப் பொருள்களாலும் நிலத்திலிருந்த கனிப்பொருட்களினாலும் ஏற்பட்டவை. உறுதியான காபனேற்றுக்களின் மீது படிந்த புதிய உருவங்கள் வெள்ளையாகக் காட்சியளிக்கின்றன. சில செம்மஞ்சளாகவும், ஊதாவாகவும் தோற்றமளிக்கின்றன. இராணி தூண் 35 அடி உயரமும் ரோசா நிறமுடையதாகவும் அழகான வேலைப்பாடுகளைக் கொண்டதாக வும் உள்ளது. இரட்டைத்தூண்கள் பேராசிரியர்கள் ஹென்றி, பேயாட் ஆகியோரின் ஞாபகமாகப் பெயரிடப்பட்டவை, அருகருகே அமைந்துள்ளன. ஒன்று 25 அடியும் மற்றையது 60 அடியும் உயரமுள்ளவை. வெண்ணிறமாகக் காட்சியளிக்கின்றன. இராட்சத மண்டபம் என அழைக்கப்படும் விசாலமான இடமொன்றுள்ளது. இங்கே பலவமைப்புக்கள் 5 அடி நீளத்தைக் கொண்டுள்ளன. புளூட்டோவின் ஆவி எனப்படும் ஒரு தூண் பால் வெள்ளை நிறத்தில் உள்ளது.

நீர் வீழ்ச்சிகள் பல நுரையோடு தொங்கிக்கொண்டிருக்கின்ற. பால் வெள்ளையாகவும் மஞ்சள் கலந்த வெள்ளையாகவும் காட்சியளிக்கின்றன. பிறாண்ட்ஸ் நீர்வீழ்ச்சி (Brands Cascade) 40 அடி உயரமும் 30 அடி அகலமும் வெண்மெழுகு போன்ற தோற்றத்தையும் கொண்டுள்ளது. திரைச்சேலைகள் போன்றவை ஏராளங் காணப்படுகின்றன. இதில் மிகவும் கவனத்தை கவர்வது சரசனின் கூடாரம் (Saracen' Tent) எனப்படுவது. பெரும்பாலான அறைகளில் பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் திரைச்சேலை அமைப்புக்கள் காணப்படுகின்றன. இயற்கை அன்னை எத்தனை ஆண்டுகளாக இவற்றை வைத்திருப்பாள் என்பது புரியாத புதிராகவே உள்ளது. மேலும் மணிகள் பல வட்டமாக அமைந்திருப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். திரைச்சேலைகள் மீது கையால் தட்டினால் பல்வேறு ஓசைகள் உண்டாகும். இதைத்தவிர கழுத்துச்சால்வைகளும், படுக்கைவிரிப்புக்களும் காணப்படுகின்றன. இவற்றின் மீது மடிப்புக்களும் சுருக்கங்களும் காணப்படுகின்றன. நீர் சரிவான கரடுமுரடான மேற்பரப்பின் போது மெதுவாக ஓடியதால் இவ்வாறு உண்டாகி இருக்கலாமெனக் கூறப்படுகின்றது. 16 சால்வைகள் “ஹொவியின் உப்பரிகையில்” (Hoveys Balcony) அருகருகே தொங்குகின்றன. இவற்றுள் 3 வெண்ணிறமானவை பார்வைக்கு கிரேப் சால்வை போலுள்ளன. மிகுதி 13இலும் வரிகள் கொண்ட வைடூரியம் போன்று கபிலத்தின் பல்வேறு நிறங்களில் காட்சியளிக்கின்றன.

**- துறையூரான் -**

நீரோடைகளும் சிற்றாறுகளும் இக்குகைக்குள் காணப்படவில்லை. நூற்றுக்கணக்கான நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன. இவை 1 முதல் 50 அடிவரை விட்டத்தையும் 16 அங்குலம் முதல் 15 அடி ஆழத்தையும் உடையன. இவற்றிலுள்ள நீர் கல்சியம் காபனேற்றைக் கொண்டுள்ளது. இதனால் இத்தேக்கங்களின் அளவைப் பொறுத்து சிலவற்றில் முத்துக்கள், முட்டைகள், பனிக்கட்டிகள் போன்ற கூட்டுப் பொருட்கள் காணப்படுகின்றன. இவ் வுருளைப் பொருட்களின் உடைவுகளை உற்று நோக்கினால் ஆரைவரியமைப்பைக் கொண்டிருப்பதைக் காணலாம்.



நீர் நிறைந்துள்ள குழிகளின் அடியிலும் அருகுகளிலும் கல்சியம் காபனேற்றுப் பளிங்குருக்கள் மூடியிருக்கும் வெவ்வேறு காலங்களில் நீர் மட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கும் அடையாளங்களாக வளையங்கள், வரப்புகள் சுருக்கங்கள் விளிம்புகள் காணப்படுகின்றன. இவை மிகத்துலக்கமாக புறோட்டஸ் வாவியின் (Broaddus Lake) காணப்படுகின்றன. இங்கு பளிச்சிடும் கல்சிய வடிவங்களும் பெரிய காளான்கள் போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன. காளான்களின் மேற்புறம் சிவப்பு வெல்வெற் அல்லது ஊதா வெல்வெற் துணி போர்த்திருப்பது போல் காட்சியளிக்கின்றன. காபோனிக்கமிலம் கூடுதலாக இருக்கும் பள்ளங்களில் பளிங்குருக்கல் அடியில் இருக்க மேலே பனிப்படலத்தால் மூடப்பட்டிருப்பது போல் காட்சியளிக்கின்றன. இவ்வாறான ஒரு குளம் 12 அடி அகலமுள்ளது. இதன் மேற்பரப்பின் மூன்றிலொரு பகுதியே தெரிகிறது.

பல்வேறு பருவகாலங்களின் போது இக்குகையிலுள்ள நீரின் அளவு மாறுபடுகின்றது. சில கல்சிய உருவங்கள் நீரைத் தொட்டுக்கொண்டிருக்கும்போது பளிங்குருக் கம்பிகள் இவற்றின் மீது வளரும். பின்னர் வெப்ப காலங்களில் சுண்ணாம்புப் படிவங்கள் இவற்றின்மேல் படியும். இதனால் ஒவ்வொன்றும் தனித்தனியான உருவ அமைப்புக்களைக் கொண்டிருக்கும். கனவு வாவி (Dream Lake) எனப்படும் சுனை நீர் கண்ணாடி போன்றுள்ளது. இவற்றின் மீது பல்வேறு உருவங்களின் நிழல்கள் விழுந்து பிரதிபலிக்கபடுவதால் இதன் அடிப்பகுதியை பார்க்கமுடியாது. இந்த வாவிக்கு கீழேயுள்ள ஒரு சுனையுடன் தொடர்புள்ளது. “நலம் வாழத்தும்” (Wishing Well) பச்சைக் குளம் ஒன்றுள்ளது. இதில் பார்வையாளர் சில்லறைக் காசுகளையும் தாள் காசுகளையும் எறிந்திருக் கிறார்கள். இவற்றையெல்லாம் சேகரித்து நலன்புரி நிலையங்களுக்கு நன்கொடை கொடுக்கப்படுவதாக அங்குள்ள பலகையில் எழுதப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஆண்டு தோறும் எவ்வளவு பணம் சேகரிக்கப்பட்டது என்ற தகவலும் அங்கே எழுதப்பட்டுள்ளது. இக்குளம் பார்த்தால் 2, 3 அடி ஆழமுள்ளதுபோல் தோற்றமளிக்கின்றது எனினும் இது 6, 7 அடி இருக்கும்.




# நாடுகடந்த அரசின் கனேடிய செயற்பாட்டுக் குழுவின் ஊடகவியலாளர் மகாநாடு

நாடு கடந்த அரசின் கனேடிய செயற்பாட்டுக் குழுவினரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் களுடனான கலந்துரையாடல் மதிய போசனத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 21, 2010 அன்று J& J Swagat Banquet Hall இல் நடைபெற்றது. கலாநிதி ராம் சிவலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தக்கலந்துரையாடலை நாடு கடந்த அரசின் கனேடிய செயற்குழுவின் ஊடகத்துறைக்குப் பொறுப்பாக இருக்கும் ராம் சிவதாசன் வழிநடத்தினார்.

இதில் Mr. Petera Schalk, Ms. Karen Parker, Dr. Sri Sriskantharaja ஆகியோர் அமெரிக்காவில் இருந்து வந்து கலந்து கொண்டார்கள். சட்டத்தரணி உருத்திரகுமார் அவர்கள் நேரடிக்காணொளி மூலம் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் ஊடகவிய லாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த Ms. Karen Parker இச்செயற்குழு நாடு கடந்த தமிழீழ அரசிற்கான பிரதிநிதிகளை உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் தெரிவுசெய்தவுடன் கலைக்கப்பட்டு விடும் என்றார். இதில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தான் நாடுகடந்த தமிழீழ அரசிற்கான யாப்பை தயாரிப்பார்கள்.

இன்னொருவரின் கேள்விக்குப் பதிலளித்த கலாநிதி ராம் சிவலிங்கம், நாடு கடந்த தமிழீழ அரசிற்கான தேர்தலை தாங்கள் கனேடியத் தமிழர் தேசியப் பேரவைக்கான தேர்தலுடன் இணைத்து நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்றார்.

மேலும் எமது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றிருந்த சிந்தனைகளையும் கருத்துக்களையும் பிரதிபலிக்கும் வகையில் மீளமைக்கப்பட்ட மதியுடைக்குழுவின் அறிக்கை மார்ச் மாதத்தின் இரண்டாவது கிழமைக்குள் வெளியிடப்படும் என்று தெரிவித்தார். (பெப்ரவரி 28, 2010 ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட இணைப்பாளர் சட்டத்தரணி உருத்திரகுமாரின் அறிக்கையின் படி மீளமைக்கப்பட்ட அறிக்கை மார்ச் மாதம் 8ஆம் திகதி வெளியிடப்படும் எனத் தெரியவருகிறது.

## தங்கப்பதக்கங்களில்...

லீக் கால்பந்து போட்டிகள் அதன் இறுதி -16 முதல் சுற்று ஆட்டங்களுக்கு வந்துள்ளது.
இதில் போர்டியூ, பேயர்ன் மூனிக், மான்செஸ்டர் யுனைடெட், மாஸ்கோ கால்பந்து கிளப், ரியால் மேட்ரிட், ஏ.சி.மிலன், செல்சீ, எ.ஃப்.சி. போர்ட்டோ, புளோரென்டீனா, லயான், பார்சிலோனா, இண்டர் மிலன், செவில்லா, ஸ்டட்கர்ட், ஆர்செனல், ஒலிம்பியாகோஸ் ஆகிய அணிகள் தங்கள் பிரிவுகளில் முதல் 2 இடங்களைப் பெற்று இறுதி-16 சுற்றுக்கு தகுதி பெற்றன.
இதில் 23ஆம் தேதி நடைபெற்ற முதல் லெக் இறுதி-16 சுற்று ஆட்டங்களில் பிரான்ஸ் அணியான போர்டியூ அணி ஒலிம்பியாகோஸ் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதே தினத்தில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் பார்சிலோனா அணியுடன் ஸ்டட்கர்ட் அணி டிரா 1-1 என்று டிரா செய்து அதிர்ச்சியளித்தது. இதனால் இரண்டாவது லெக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி ஸ்டட்கர்ட்டை வீழ்த்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. மற்றொரு முக்கிய ஆட்டத்தில் பலம் வாய்ந்த இங்கிலாந்து கால்பந்து கிளப்பான செல்சீ அணியை இண்டர்மிலன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் மாஸ்கோ கால்பந்து கிளப் அணியும் செவில்லா அணியும் 1-1 என்று சமன் செய்தது.

கால்பந்து உலகக்கோப்பை நடத்த தென்ஆப்ரிக்கா தயார் நிலையில் இல்லை :

உலகக்கோப்பை கால்பந்து தொடர் துவங்க இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில், போட்டி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட தென்ஆபிரிக்க இன்னும் முழுமையாகத் தயாராகவில்லை என சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான FIFA தெரிவித்துள்ளது. இதுகுறித்து சன்சிட்டியில் நடந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய FIFA பொதுச் செயலர் ஜெரோமி, ' உலகக்கோப்பை போட்டிகளை நடத்த தென்ஆபிரிக்கா தயார் நிலையில் இல்லாத காரணத்தால், வீரர்களை எங்கே தங்கவைப்பது என்று தெரியவில்லை.


தற்போதைய நிலவரப்படி தென்ஆபிரிக்காவில் உலகக்கோப்பை கால்பந்து நடத்த முடியாது




என்றே தெரிகிறது. ஏனென்றால் சாக்கர் சிட்டி (Soccer City) முழுமையாகத் தயாராகவில்லை. உலகக்கோப்பையின் முதல் போட்டியை நடத்த முடியாது என்றே தோன்றுகிறது என்றார்.


யோகா வகுப்புக்கள்

***GTA Square Mall*** இல்
புதன்கிழமைகளில் காலை 8:00
மணிக்கு வகுப்பு ஆரம்பமாகின்றது
தொடர்புகளுக்கு: செல்வ சோதி
***416.289.2033***




# ஏப்ரல் 19, 2010

07ஆம் பக்கத்தொடர்ச்சி

2. முதலீட்டுக்கு வாங்குபவர்கள் குறைந்தது 20% முதலீடு செய்தல் வேண்டும்.

3. ஆதனத்தை பாவித்து பெறப்படும் கடன் தொகை ஆதனத்தின் பெறுமதியின் 90% ஆக குறைக்கப்பட்டுள்ளது. (இப்பொழுது 95% ஆக உள்ளது)

ஆதன வியாபாரத்தின் சில முடிவுகள்
சில நகரங்களில் டிசெம்பர் 2008 இலிருந்து டிசெம்பர் 2009 வரையிலான விலை அதிகரிப்பு ரொறொன்ரோ 7.1%
வன்கூவர் 5.1% மொன்றியல் 5.0%
கல்ஹறி 0.1%




# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# பொறாமையின் அடித்தளம்

## ஓடும் நீர் உறைவதில்லை 96

நமது உணர்வுகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் அடித்தளம் உண்டு. அன்பு, பாசம், கோபம், வெறுப்பு, விரக்தி, மகிழ்ச்சி, கவலை என நம்மால் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொன்றுக்கும் ஓர் அடித்தளம் உள்ளது. இந்த அடித்தளம் பற்றிய தெளிவு நமக்கு ஏற்படும் போது அவற்றின் வெளிப்பாட்டின் தன்மையும் நம்மால் உணரப்படக்கூடியதாக அமைந்து விடுகின்றது.

இக்கட்டுரையில் பொறாமையின் அடித்தளமாக அமைவது எது என்பது பற்றிப் பார்ப்போம். முதலில் பொறாமை என்பது பற்றி நடைமுறையில் நாம் வெளிப்படுத்தும் கருத்துக்கள் பற்றிய ஒரு சிறு விளக்கத்தை முன்வைப்பது பொருத்தமானதாகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பாலானவர்களால் முன்வைக்கப்படும் விளக்கம் என்னவெனில் பொறாமை என்பது ஒருவரது முன்னேற்றத்தை, அவரது சமூக, பொருளாதார வளர்ச்சியை நம்மால் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளமுடியாத நிலையில் அதற்கு எதிர்மாறான மன உணர்வை நாம் வெளிப்படுத்துவதாகும். இந்த மன உணர்வானது காழ்ப்புணர்ச்சி எனவும் இனம் காணப்படுகின்றது. அதாவது ஏதோ ஒரு காரணத்தால் இன்னொருவரது முன்னோக்கிய வளர்ச்சியை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் எமக்குள் எழும் ஓர் உணர்வாகும். இந்த உணர்வின் வெளிப்பாடானது பல சந்தர்ப்பங்களில் மற்றவர்களால் இலகுவாக அடையாளம் காணப்பட முடியாதவாறு மூடிமறைக்கப்படுவதும் இயல்பானதே. அதாவது நமது முன்னேற்றத்தில் மற்றொருவர் எந்த அளவுக்குப் பொறாமைப்படுகின்றார் என்பதை நாம் மிக இலகுவாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதற்கான காரணம் என்னவெனில் நம்மீது பொறாமைப்படுபவர்கள் ஆரம்பகாலங்களில் எம்மீது அதிக அக்கறை கொண்டவர்கள் போல் நடந்து கொள்வார்கள். அவர்களது அறிவுரைகள், ஆதரவுகள், அனுமானங்கள் எல்லாம் எமது நலனை மையப்படுத்தியாக அமைவது போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் கொடுக்கும். இதனால் எம்மீது பொறாமைப்படுபவர்களது உண்மையான மனஉணர்வை நாம் அடையாளம் காண்பது கடினமானதாக அமைந்து விடுகின்றது. இவர்களது உள்ளீடுகளை நாம் ஏற்க மறுத்தாலோ அல்லது ஏற்றுக் கொண்டு மேலும் வளர்ந்தாலோ பொறாமைப்படுபவர்கள் பொறாமையின் உச்சநிலையான துரோகம் என்ற நிலையை அடைந்து விடுகிறார்கள். அதாவது பொறாமைப்பட்டவர்கள் என்ற நிலையில் இருந்து துரோகிகள் என்ற நிலைக்கு மாறி விடுகிறார்கள்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

ஒருவர் மீது நாம் பொறாமைப்படுவதற்கு நமது இயலாமை, சுயநலம், சந்தேகம், தாழ்வு மனப்பான்மை, நம்பிக்கையின்மை, சோம்பேறித்தனம், மற்றவர்களது உயர்வை ஏற்கும் மனப்பக்குவமின்மை, போட்டி மனப்பாங்கு, பேராசை, வெறுப்பு எனப் பல காரணிகளை முன்வைக்கின்றோம். ஆனால் இவை எவையுமே பொறாமைக்கான அடித்தளமாக அமைவதில்லை என்பது எனது கருத்தாகும்.

ஒருவரது முன்னேற்றத்தை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு எமது இயலாமையே காரணம் என எண்ணுவது பொருத்தமானதல்ல. ஏனெனில் நமது இயலாமை என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மற்றவர்களது சிறப்பை, உயர்வை, சாதனையை, மறுதலிப்பதில்லை. நமது இயலாமை தெளிவாகப் புரிந்திருந்தும் மற்றவர்களது வெற்றியை, முன்னேற்றத்தை, சாதனையை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். உதாரணமாக ஒலிம்பிக் விளையாட்டுகளில் சாதனைபடைக்கும் வீரர்களையும், வீராங்கனைகளையும் அவர்களது சாதனைகளையும் நாமே சாதித்தது போன்ற உள்ளுணர்வுடன் ஏற்றுக் கொள்கிறோம். அந்த விளையாட்டுகளில் நமக்கு அனுபவம் உண்டோ அல்லது இல்லையோ அந்த அளவுக்கு எம்மால் இயலாது என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களைப் பாராட்டுகின்றோம். எனவே நமது இயலாமை பொறாமைக்கு அடித்தளமாக அமைய முடியாது.

இயலாமைக்கு அடுத்ததாகச் சுயநலம் பொறாமைக்கான காரணியாக முன்வைக்கப்படுகின்றது. சுயநலம் இல்லாமல் மனிதன் தனது வாழ்க்கையை நகர்த்தமுடியாது. சுயநலத்தின் அதிஉச்சமென நான் வலியுறுத்துவது தாய்ப்பாசம். ஒரு தாயின் ஒட்டுமொத்தமான சுயநலம் தான் இன்றுவரை நாம் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதற்கு வித்தாக அமைந்தது. தனது குழந்தை மற்றைய குழந்தைகளை விட எல்லாவிதத்திலும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்ற தாய்ப்பாசத்தின் எதிர்பார்ப்பைப் பொறாமை என வகைப்படுத்துவது மிகவும் மோசமான தவறு. எனவே சுயநலம் என்பது அதன் அவசியத்தை வேண்டிநிற்பதால் அது பொறாமையின் அடித்தளமாக அமைய முடியாது. ஏனெனில் அடித்தளமாக அமையும் எதுவும் அதன் தனித்தன்மையை மட்டும் கொண்டிருப்பதால் சூழ்நிலைக்கும், சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப மாற்றம் அடைவதில்லை. ஏனெனில் சுயநலம் என்பது அதன் தேவையைப் பொறுத்து அவசியமாகவும் சில சந்தர்ப்பங்களில் அனாவசியமானதாகவும் அமைகின்றது. இவ்வாறே சந்தேகம் என்பதுகூட ஒன்றுக்கு மேற்பட்ட நிலையைக் கொண்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் நமது சந்தேகங்கள் புதிய தகவல்களைப் சேகரிப்பதற்கு வழிவகுக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் நமது சந்தேகங்கள் பொருத்தமற்றவை என்பதை உணர்த்தி விடுகின்றன. சந்தேகத்தின் முடிவு என்பது சந்தேகப்பட்ட விடயம் சம்பந்தமான தெளிவு அல்லது விளக்கமாகும். ஆனால் பொறாமையானது அதன் முடிவை நோக்கிய தேடுதலுக்கு வழிவகுப்பதில்லை. அதுமட்டுமல்ல நல்ல பொறாமை, கூடாத பொறாமை என வகைப்படுத்தவும் வழிவகுப்பதில்லை.

**ஒருவர் மீது நாம் பொறாமைப்படுவதற்கு நமது இயலாமை, சுயநலம், சந்தேகம், தாழ்வு மனப்பான்மை, நம்பிக்கையின்மை, சோம்பேறித்தனம், மற்றவர்களது உயர்வை ஏற்கும் மனப்பக்குவமின்மை, போட்டி மனப்பாங்கு, பேராசை, வெறுப்பு எனப் பல காரணிகளை முன்வைக்கின்றோம். ஆனால் இவை எவையுமே பொறாமைக்கான அடித்தளமாக அமைவதில்லை என்பது எனது கருத்தாகும்.**

**KG Master**-*kgmaster@rogers.com*

பொறாமைக்கான காரணிகளாக முன்வைக்கப்படும் ஏனையவைகள் கூட சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப ஒன்றுக்கு மேற்பட்ட தன்மையை வெளிப்படுத்துகின்றன. சந்தேகம், தாழ்வுமனப்பான்மை, நம்பிக்கையின்மை, சோம்பேறித்தனம், போட்டிமனப்பாங்கு என்பவை நாம் அவற்றைக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை நமக்குக் கொடுத்துவிடுகின்றது. தாழ்வு மனப்பான்மை உள்ளவர் தம்மை முன்னிலைப்படுத்தக்கூடிய மனப்பக்குவம் இல்லை என்பதை உணர்ந்திருப்பார்கள். தன்னால் ஒரு விடயத்தை நிறைவேற்ற முடியாது என்பதுதான் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடேயன்றி மற்றவர்கள் நிறைவேற்றி விட்டார்களே என விரக்தியடைவதல்ல. ஏனெனில் தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் தங்களது செயற்திறனின் அளவை ஒரு பொழுதும் மற்றவர்களுடன் ஒப்பிடுவதில்லை. இதனால் மற்றவர்களின் பெறுபேறுகள் உயர்வாக இருப்பினும் சரி, தாழ்வாக இருப்பினும் சரி எந்தவொரு மாற்றத்தையும் இவர்கள் உள்வாங்கிக் கொள்வதில்லை.

நாம் நடைமுறையில் காரணிகளாகக் கருதப்படும் பல விடயங்கள் பொறாமைக்கான அடித்தளமாக அமைவதில்லை என்பது பற்றிப் பார்த்தோம். அதற்கான உதாரணங்களையும் அறிந்து கொண்டோம். அடித்தளமாக அமைவது ஒருமைத் தன்மை வாய்ந்தது என்பதும் புரியப்பட்டு விட்டது. ஒருமைத் தன்மை என்பது எந்த நிலையிலும் அதன் தனித்துவத்தில் இருந்து மாறுபடுவதில்லை. இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகப் பொறாமை என்பது பொறாமை மட்டும்தான். நல்ல பொறாமை கூடாத பொறாமை என வகைப்படுத்தப்பட முடியாதது எனவும் அறிந்து கொண்டோம்.

இப்போது பொறாமையின் அடித்தளம் எது என்பதை பார்ப்போம். பொறாமையின் அடித்தளம் என்பது ஒருவரது இயலுமை (செயற்திறன்) மீதான நமது தவறான கணிப்பீடு பற்றிய அறியாமையே. புரிகின்றதா? அதாவது ஒருவரது இயலுமை (செயற்திறன்) பற்றிய நமது தவறான கணிப்பீட்டை நாம் தவறாகக் கணித்துவிட்டோமே என்பதைக் கூட அறியமுடியாத அளவுக்கு அறியாமையால் வசப்படுத்தப்பட்டிருத்தலாகும்.

நாம் எப்பொழுது ஒருவரது செயற்திறனை (இயலுமையை)க் குறைவாக மதிப்பிட்டு, அவ்வாறு குறைவாக மதிப்பிட்டு விட்டோமே என ஏற்றுக்கொள்ளாத விடத்து அவரது செயற்பாட்டின் பெறுபேறுகள் எமது எதிர்பார்ப்பை விட அதிகமாகும் போது பொறாமைப்படுகிறோம். இதனால் தான் நமது தவறான கணிப்பீடு பற்றிய அறியாமை பொறாமைக்கான அடித்தளமாகின்றது. இதை நாம் மேலும் தெளிவாக்கிக் கொள்வதற்கு மீண்டும் ஒலிம்பிக் விளையாட்டுக்குப் போவோம். ஒலிம்பிக்கின் வீரர்களையும், வீராங்கனைகளையும் நாம் மனமார ஏற்றுக் கொள்வதற்கான காரணம் எமது இயலாமை பற்றியதல்ல. மாறாக அவர்களது இயலுமை (செயற்திறன்) பற்றிய உயர்வான கணிப்பீடே.

ஆம் வாசகர்களே!

பொறாமை என்பது ஒரு மனிதனது மனத்தின் மிகவும் மோசமான அழுக்கு நிலையாகும். இதற்கு அடித்தளமாக அமைவது மற்றவர்களது இயலுமை பற்றிய தவறான கணிப்பீட்டின் அறியாமையாகும். துரதிஷ்டவசமாக நமது கணிப்பீடுகள் தவறானவை என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த பொறாமையுடன் ஒருங்கிணைந்திருக்கும் அறியாமை சந்தர்ப்பமளிப்பதில்லை. இதனால்தான் பொறாமையின், வளர்ச்சி தொடர்ச்சியாகி விடுகின்றது. இந்த தொடர்ச்சி நமது வாழ்க்கையின் அடித்தளத்தையே தகர்த்து விடுகின்றது.

எனவே தவறான கணிப்பீடு பற்றிய அறியாமை மட்டுமல்ல அந்த அறியாமையை அறிந்து கொள்வதற்குக் கூட சந்தர்ப்பம் அளிக்காத இந்தப் பொறாமை நம்மைப் பற்றிப்பிடிப்பதிலிருந்து தப்பித்திக் கொள்வதற்கு ஒரேயொரு வழிமட்டும் தான் உண்டு. அந்த வழி என்ன தெரியுமா?

மற்றவர்களது இயலுமையை (செயற்திறன்) எப்பொழுதும் உயர்வாகக் கணிப்பிடுதல் வேண்டும். நமது எதிர்பார்ப்புகள் உயர்வாக இருக்கும் போது மற்றவர்களிடம் இருந்து உயர்வான பெறுபேறுகளே எதிர்பார்க்கப்படும். உயர்வான பெறுபேறுகள் மீண்டும் உயர்வான கணிப்பீட்டைக் கொடுக்கும். இதனால் நாமும் உயர்வோம். மற்றவர்களும் உயர்வார்கள்.

*'வரப்பை உயர்த்துவோம் நீர் தானாக உயரும்'.*


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am Rogers Cable Channel - 20 Bell Express vu Channel - 219 |

# கனடாவில் தங்கள் வாகனம் எதற்காக சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படுகின்றது?

## கனடிய தகவல் தொடர் 120

**அன்றொரு நாள் நடந்த அந்த சம்பவம்!**
வீதியில் ஓடிக்கொண்டிருந்த நம்மவர் ஒருவரின் வாகனத்தினை அடையாளம் தெரிந்து பொலிசார் இடைமறிக்கின்றனர்.

"வாகனம் பறிமுதல் உத்தரவு ஆணை" (Vehicle Seize Order) என்னும் சட்டரீதியான உத்தரவு ஆணை பத்திரத்தினை காட்டி அந்த வாகனம் பொலிசாரால் அதே இடத்தில் வைத்து பறிமுதல் செய்யப்படுகின்றது. வாகனம் ஓட்டிச் சென்ற அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு ஒன்றுமாய் புரியவில்லை.

**இன்னொரு சம்பவம்!**
இரவு நேரம் தமது வீட்டில் நன்றாக தூங்கிவிட்டு மறுநாள் விடிந்த பின்பு எழுந்து பார்த்தவருக்கு ஒரே ஆச்சரியம்.! தமது வீட்டின் முன்னால் நிறுத்திய தமது சொந்த வாகனத்தினை காணவில்லை. சட்டரீதியாக பறிமுதல் செய்யவேண்டிய ஆணையினை வைத்து இரவோடு இரவாக அதனை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். எதுவிதமான கள்ளம் கபடம் அற்ற நிலையில் இருந்த அந்த வாகன உரிமையாளருக்கு சில மணிநேர அங்கலாய்ப்புக்கு பின்பு தமது வாகனம் திருட்டு போகவில்லை சட்ட ரீதியான உத்தரவு ஆணையின் பின்பு கட்டி இழுத்து கொண்டு போய்விட்டார்கள் என்பது தெரியவர ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. புரியாத நிலைமை தொடர்ந்து இறுதியாக தங்களின் வாகன உரிமை என்பது சந்தேகமில்லாது "சட்டரீதியாக பறிமுதல் செய்யப்பட்டது" என்பது மட்டுமே அவர்களினால் சில மணிநேரத்தின் பின்பு புரிந்துகொள்ளப்பட்டது.

இந்த வாகனத்தினை வாங்கிய எவரோ ஒருவர் வங்கியிலோ அல்லது ஏதாவது ஒரு கடன் நிதி நிறுவனத்திலோ கடன் எடுத்து வாங்கப்பட்டிருப்பது என்பதும் கடன் வாங்கி அந்தக் கடன் முற்று முழுதாக கொடுத்து தீர்க்கும் வரை இவ்வாகனம் குறிப்பிட்ட இந்நிதி நிறுவனத்திற்கு அல்லது வங்கிக்கு ஈடாகவே எழுதப்பட்டுள்ளது என்பதும் இறுதியில் அவர்களுக்கு தெரியவந்தது.

எவரோ ஒருவர் ஈட்டுக் கடனை செலுத்த தவறிய சுமையினை தாங்கள் சுமக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது என்பதும் புரிந்தது. பொதுவாக இவ் ஈட்டு கடனை ஒழுங்கான முறையில் செலுத்தி தீர்த்துக் கொள்ளத் தவறினால் முதலில் கடிதம் வரும்! தொடர்ந்து தொலைபேசி அழைப்பு வரும்! இறுதியாக எச்சரிக்கை கடிதம் வரும். கடைசி முடிவு "பறிமுதல் ஆணை" பிறப்பிக்கப்படும். இதுதான் நடந்துள்ளது.

வாகனத்தின் உரிமையாளரே இவ்வாகனம் வாங்குவதற்காக பெற்ற ஈட்டுக் கடனை ஒழுங்காக திருப்பி செலுத்த தவறியிருக் கின்றார். அதனால் எச்சரிக்கைகளின் பின்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில் இருந்தால் அவருக்கு அது ஆச்சரியமாக அன்று இருக்கமாட்டாது. திடீர் என வாகனத்தினை பறிமுதல் செய்வது என்பது எதிர்பார்த்த ஒன்றாகவே பொதுவாக அவருக்கு இருந்திருக்கும்.

ஆனால் முழுதாக பணம் கொடுத்து வாங்கிய ஒரு அப்பாவியின் ஏக்கம் இந்த இடத்தில் எப்படியிருக்கும்?. இங்குதான் வாகனம் வாங்கும்போது அவர் தமது தவறினை விட்டிருக்கின்றார்.

பொதுவாக வாகனம் வாங்குபவர்கள் இரு வழிகளில் வாகனம் வாங்கிக் கொள்வார்கள்.

1. எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கிக் கொள்வார்கள். (Buying from Curbsiders)
2. அரச அனுமதிப்பத்திரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து (Licensed Car Dealer) உபயோகித்த வாகனத்தினையோ அல்லது நேரடியாக கம்பனியிடமிருந்து (Manufacturing Company Dealer) புதிய வாகனமாகவோ அல்லது உபயோகித்த வாகனமாகவோ வாங்குபவர்கள்.

**எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கிக்கொள்தல் (Buying from Curbsider)**

எவரோ ஒருவரிடமிருந்து ஏற்கனவே உபயோகித்த ஒரு வாகனத்தினை வாங்கியிருப்பார். அது பலரின் கைகளுக்கு மாற்றப்பட்ட வாகனமாயிருக்கலாம். இத்தகைய நிலையில் இருப்பவர்களே அனேகமாக நிரபராதியான நிலையில் வாகனம் சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படும் நிலையில் நிர்க்கதியாவது வழமையாகும்.

எந்தவொரு வாகனத்தினையும் எவரோ ஒருவரிடம் இருந்து பணம் கொடுத்து வாங்கிக் கொள்பவர்கள் குறிப்பிட்ட இவ்வாகனத்தின் வரலாற்றுக் குறிப்பினை (Vehicle History) எடுத்து முதலில் பரிசீலனை செய்யாது வாங்கிக் கொண்ட காரணத்தினாலேயே இங்கு இவர்கள் தங்கள் வாகனத்தினை பறிமுதலுக்கு கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஒவ்வொரு வாகனத்திற்கும் முன்கண்ணாடியின் உள்பக்கத்தில் உள்ள பதாகையில் (Front Dash Board) எழுத்தில் 1981 ஆம் ஆண்டுக்கு பின் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்கு இந்த முறையில் இருக்கும். ஒரு அடையாள குறியீட்டு இலக்கம் இருக்கும்.

இதனை ஆங்கிலத்தில்
VEHICLE IDENTIFICATION NUMBER (VIN) அல்லது VEHICLE SERIAL NUMBER என குறிப்பிடுவார்கள்.

உதாரணமாக ஒரு வாகனத்தின் குறியீட்டு அடையாள இலக்கத்தினை இங்கு எடுத்து கொள்வோம்.
ITIYY 3252 T 5600198
இப்பதினேழு குறியீட்டு இலக்கத்தின் ஒவ்வொன்றும் வாகனத்தின் ஒவ்வொரு பகுதியினை அடையாளப்படுத்துகின்றன.

அதாவது உதாரணமாக: எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது அல்லது உருவமைக்கப்பட்டது? எந்த வகையான வாகனம்? எந்த வருடம்? உற்பத்தி இலக்கம்? அமைப்பு? இயந்திரத்தின் குறியீடு? இப்படியே இப்பதினேழு குறியீட்டு அடையாளமும் ஒவ்வொரு வாகனத்தினையும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டிக் கொடுக்கின்றது.

இவ் அடையாள குறியீட்டினை வைத்து வாகனம் ஒன்றின் வரலாற்று குறிப்பினை எடுத்து முதலில் பரிசீலனை செய்து கொள்ளல் வேண்டும். இவ்வாறான வாகனங்களின் வரலாற்று குறிப்பினை எடுத்து பரிசீலனை செய்து பார்க்கும் போது பின்வரும் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தங்கள் கையில் வந்து சேரும். அதன் பின்னர் வாகனத்தினை பணம் கொடுத்து வாங்குவதா? இல்லையா? என்பதனை முடிவு செய்யலாம்.

- வாகனம் தொடர்பான விபரங்கள் - அதன் தற்போதைய அண்ணளவான விலை (Upto date price)
- வாகனத்தின் முன்னாள் உரிமையாளர்கள் எத்தனைபேர் என்ற விபரங்கள்
- ஏதாவது ஈட்டுக்கடனில் இன்று இவ்வாகனம் இருந்தால் அது பற்றிய விபரங்கள்
- உபயோகிக்கப்பட்டு இறுதியாக பதிவு செய்யப்பட்ட ஓடப்பட்ட தூரங்களை அளவிட்ட மீற்றரின் முடிவுகள் (Odometer Readings)

இதன் மீற்றர் அளவுகளில் ஏதாவது மோசடி செய்யப்பட்டு அது பதிவில் இருந்தால் (Odometer Tempering) அது பற்றிய விபரங்கள்
- திருடப்பட்ட வாகனமாக இருந்தால் அது பற்றிய உண்மைத் தகவல்கள்
- ஏற்கனவே பாரிய விபத்துக்கு உள்ளாகியிருந்தால் அது பற்றிய விபரங்கள்
- வாடகைக்கோ (Rental Car) அல்லது வர்த்தக சேவைகளுக்கு உபயோகிக்கப் பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள்

இப்படி ஒரு வாகனத்தின் வரலாற்றுச் சரித்திரத்தினையே கையில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வரலாற்று சரித்திரத்தினை ஆய்வு செய்த பின்பு இக்குறிப்பிட்ட வாகனத்தினை வாங்குவதா? இல்லையா? என்பதனை இலகுவாக முடிவு செய்யலாம்.

**ஒரு வாகனத்தின் வரலாற்றுப் பதிவுகளை எப்படிப் பெறுவது?**
பின்வரும் நிறுவனங்களினூடாக ஒரு வாகனத்தின் அடையாள குறியீட்டினை வைத்து அவ்வாகனத்தின் வரலாறுகளை பெற்று கொள்ளலாம்.
1. **ஒன்ராரியோ போக்குவரத்து அமைச்சின் அலுவலகங்கள்**

வாகன இலக்கங்கள் (Vehicle License Plate) மற்றும் சாரதி அனுமதி பத்திரங்கள் புதுப்பிக்கும் போக்குவரத்து அமைச்சின் அலுவலகங்களில் நேரடியாக சென்று வாங்கப்போகும் வாகனத்தின் பதினேழு இலக்க குறியீட்டினை வழங்கி இதன் வரலாறுகளை பெற்றுக்கொள்ளலாம். இதனை ஆங்கிலத்தில் 'Used Vehicle Information Package' (UVIP) என குறிப்பிடுவார்கள். $20 டொலர் கட்டணம் அறவிடப்படும். இவ் அலுவலகம் ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் உள்ள நகரங்களில் பல இடங்களிலும் உள்ளது.

(2) மேலே குறிப்பிட்ட இடம் தவிர பின்வரும் இரு நிறுவனங்களில் ஏதாவது ஒன்றின் மூலமும் வரலாற்று பதிவுகளை பெற்று கொள்ளலாம்.

***(a). Carfax inc***
***5860, Trinity Parkway***
***Suit #600, Centreville***
***VA 20120, USA***
இணையதளம்: ***www.carfax.com***
மின்அஞ்சல்: **historyreport@carfax.com**
தொலைநகல்: 1.866.756.0733

அமெரிக்காவிலிருந்து இயங்கி கனடா, அமெரிக்கா முழுவதும் தகவல் வழங்கும் இந்நிறுவனத்திற்கு தொலைபேசியினூடாக தொடர்புகொள்ள முடியாது. மின்அஞ்சல் அல்லது தொலைநகல் அல்லது கடிதமூலமே தகவல்களை பெற்று கொள்ளலாம்.

இந்நிறுவனத்தின் இணையதளத்தினூடாக பரிசீலனை செய்து கொள்ளும்போது வாகனங்களின் வரலாறுகள் மட்டுமல்ல அமெரிக்காவிலும் கனடாவிலும் குறிப்பிட்ட தங்களின் பகுதியில் தாங்கள் விரும்பும் ஒரு கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட வாகனத்தினை வாங்க விரும்பினால் அதற்கான வழிகாட்டல்கள்யாவும் இவ் இணையத்தளத்தினூடாக பெற்று கொள்ளலாம்.

***b. Car proof inc***
***130, Dufferin Ave, Suit #204***
***London, Ontario L6A 5R2***
தொலைபேசி - 1.519.675.1415
தொலைநகல் - 1.519.675.1043
மின்அஞ்சல் - Info@carproof.com
இணையதளம் - www.carproof.com

கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தின் லண்டன் நகரில் இருந்து இயங்கும். இந்நிறுவனம் மின்அஞ்சல் மூலமாக மிக விரைவில் தாங்கள் கேட்கும் வாகனங்களின் தகவல் பதிவுகளை அனுப்பி வைப்பார்கள்.

(1981 ஆம் ஆண்டுக்கு பின்பு உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே இலகுவாக தகவல்களை பெறலாம்)

**அரச அனுமதிப்பத்திரம் பெற்ற வாகன விற்பனையாளரிடமிருந்து** (Licensed car dealer) **உபயோகித்த வாகனத்தினையோ அல்லது நேரடியாக கம்பனியிடமிருந்து** (Manufacturing Company Dealer) **புதிய வாகனத்தையோ அல்லது உபயோகித்த வாகனத்தினையோ வாங்குதல்.**

இவர்களிடமிருந்து வாங்கும்போது விலைகள் என்பது சிலநேரங்களில் வித்தியாசப்படலாம். ஆனால் வாகனம் எழுத்துகள், உடன்படிக்கை களுடன் கைமாற்றப்படுகின்றது.

பாதுகாப்பு என்பது அரச கண்காணிப்பு நிறுவனம் ஒன்றின் உத்தரவாதத்துடன் வழங்கப்படுகின்றது. ஆபத்து என்பதே இருக்க மாட்டாது. வாடிக்கையாளர் ஒருவர் ஏதாவது ஏமாற்றத்தினை இவர்களிடம் இருந்து எதிர் கொண்டால் பின்வரும் விலாசத்தில் இருக்கும், நிறுவனத்தில் முறைப்பாடு செய்யலாம் என்பதனை அறிந்து கொண்டீர்களா? அதன் விபரங்கள் பின்வருமாறு

***Ontario Motor Vehicle Industry Council***
***(OMVIC)***
***789, Donmill Road,***
***Suite #800***
***Toronto, Ontario***
***M3C 1T5***



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

# கருந்துளைகள் -11


சென்ற தடவையில் கருந்துளைகளுக்கு சற்றுத்தள்ளி நின்று கருந்துளைகள் பற்றிப் பார்ப்போம் என்று கூறியிருந்தேன் அல்லவா! அதற்காக கலக்சிகள் பற்றிக் கொஞ்சம் பார்க்கப் போகின்றோம். கலக்சிகள் பற்றிப் பெரிய அளவில் நான் ஒரு இடமும் கூறவில்லை, கூறக் கூடிய வாய்ப்பும் ஏற்படவில்லை. இதிலும் கூட கலக்சிகள் பற்றிய மேலோட்டமான தகவல்களையே பரிமாறிக் கொள்ள இருக்கின்றேன்.

கலக்சிகள் நமது கதிரவன் போன்ற கோடிக் கணக்கான விண்மீன்களையும், பொரும் தூசுக் கூட்டங்களையும் கொண்ட மிகப்பெரிய தொகுதியை கலக்சி என்கின்றார்கள். எமது கதிரவன் இருக்கும் கலக்சி 'பால்வழி' கலக்சி ஆகும். நம்முன்னவர்கள் இதனைத்தான் ஆகாய கங்கை என்றார்கள். ஆங்கிலத்தில் இதனை மில்கிவே (Milky way) என்கின்றார்கள். பேரண்டத்தினுள் குறைந்தது ஐம்பதாயிரம் கோடி (500பில்லியன்) கலக்சிகளாவது இருக்கும் என வானவியலாளர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். ஒவ்வொரு கலக்சியினுள்ளும் பத்தாயிரம் கோடியில் இருந்து ஐம்பதினாயிரம் கோடி விண்கள் இருக்கும் என்பது அவர்களது மதிப்பீடு. கதிரவக் குடும்பத்தினைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். எவ்வளவு பெரியது.! ஆயின் இது போல ஐம்பதாயிரம் மடங்கு பெரியதான கலக்சி விண்வெளியில் எவ்வளவு பகுதியைப் பிடித்திருக்கும் என்று ஒரு தடவை யோசித்துப் பாருங்கள். இதற்கும் மேலே பேரண்டத்தின் பருமனையும் கற்பனை பண்ணிப் பாருங்கள். அப்பாடா! இவ்வ்வ்வ்வளவு பெரியதா எமது பேரண்டம்.

பொதுவாகவே கலக்சிகள் எல்லாம் ஒரு பெரிய தட்டுவடிவில் காணப்படும். இத்தட்டுகள் வெவ்வேறு வடிவினை, அமைப்பினைக் கொண்டவையாக இருக்கும். நமது மில்கிவே கலக்சியின் அமைப்பைப் பார்த்தால், அது ஒரு சுருளி வடிவில் காணப்படுகிறது. இக்கலக்சியின் மத்தியில் எமது கதிரவனின் திணிவினைப் போல் 3 மில்லியன் மடங்கு திணிவுடைய கருந்துளை ஒன்று உள்ளது. அதன் பருமன் ஒரு ஒளியாண்டு விட்டமுடையதாக அல்லது அதனிலும் சிறிது சிறியதாக இருக்கலாம் என்கின்றார்கள், அதனைக் கணித்துப் பார்த்த வல்லுனர்கள், இக்கருந்துளை எவ்விதம் அங்கு தோன்றியிருக்கும் என்பதனை ஆய்வாளர் களினால் சரியாகச் சொல்ல முடியவில்லை. கலக்சி உருவாகுகையில் அந்தக் கருந்துளை யும் தோன்றியிருக்கலாம் என மேலோட்டமாகக் கூறுகின்றார்கள். இக்கருந்துளையை மையமாகக் கொண்டு மில்கிவே கலக்சியின் அத்தனை விண்மீன்களும், அவற்றின் உருப்படிகளும், பெரும் நெபுலாக்களும் (தூசுக் கூட்டங்களும்) வலம் வருகின்றன. சுமாராக 100 ஒளியாண்டுகள் விட்டமுடைய மில்கிவே கலக்சியில் சுமாராக இருபதாயிரம் கோடி விண்மீன்களுக்கும், நானூறாயிரம் கோடி விண்மீன்களுக்கும் இடையிலான எண்ணிக்கையில் விண்மீன்கள் இருக்கலாம் எனக் கூறுகின்றார்கள். எமது கலக்சியில் மட்டும் இவ்வளவு விண்மீன்கள் எனில் பேரண்டம் முழுவதுமான விண்மீன்களின் எண்ணிக்கைக்கு ஒரு மதிப்பீடு செய்து பாருங்களேன்! ம்.. அவ்வளவா!

எங்களது பூமிக்கு ஒரு துணைக் கோள் (சந்திரன்) உள்ளதல்லவா! அதுபோலவே கதிரவனுக்கும் ஒன்பது கோள்கள் அதனைச் சுற்றிவருகின்றன அல்லவா!. அது போலவே கலக்சிகளும் துணை கலக்சிகளைக் கொண்டுள்ளன. எவ்விதம் கதிரவன் தன் ஈர்ப்பின் வல்லமையால் பூமி போன்ற கோள்களை இழுத்து வைத்துக் கொண்டுள்ளதோ, அதே போன்று கலக்சிகளும் சில துணை கலக்சிகளை தமது பெரும் ஈர்ப்பின் துணை கொண்டு தம்மை வலம் வரச் செய்கின்றன. துணை கலக்சிகளிலும் ஏராளமான விண்மீன்கள், அத்துணைக்கலக்சி களின் மையங்களை வலம் வந்து கொண்டிருக்கின்றன.

வான் பரப்பின் ஒரு பகுதியில் இருக்கும் கலக்சிகள் ஒன்றாக. ஒரு தொகுதியை ஆக்கி, அத்தொகுதியில் இருந்து கொண்டு வான் பரப்பில் இயங்குகின்றன. அவையாவும் அத்தொகுதியின் ஈர்ப்பினால் கட்டுண்டு இருக்கும். அதன் காரணமாக அக்கலக்சிகள் அத்தொகுதிக்குள்ளேயே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இத்தொகுதியை உட்கூட்டுத் தொகுதி (local group of galaxies)




பேரண்டம் - 59

என்கின்றார்கள்.

பேரண்டமானது கிட்டத்தட்ட 1450 ஆயிரம் கோடி ஆண்டுகள் முன்னர் பிக் பாக்கில் இருந்து தோன்றியது என்பது இந்நாட்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிபாகும் இந்த பிக் பாங் கொள்கையானது கலக்சிகள் ஒன்றை ஒன்று விலத்தி நகர்வதை அவதானித்ததன் பின்னரே அறியப்பட்டு கணிக்கப்பட்டது. ஆனால் உட் கூட்டுத் தொகுதிக் கலக்சிகள் ஒன்றை விலத்தி இன்னொன்று அசையாத வண்ணமாக அப்பகுதியில் கலக்சிகளுக்கு இடையேயான mutual ஈர்ப்புபானது வலிமையைக் கொண்டிருக்கின்றன.

மில்கிவே கலக்சி உள்ள உட் கூட்டுத் தொகுதி கலக்சிகள் 16 கலக்சிகள் சுமாராக 6 மில்லியன் ஒளியாண்டுப் பகுதியில் உள்ளன. மில்கிவே கலக்சியிற்கு மிக அண்மையில் உள்ள இன்னொரு பெரிய கலக்சி அன்றோமேடா கலச்சியாகும். எமது மில்கிவே யில் இருந்து அன்றோமேடா கலக்சியின் தூரம் கிட்டத்தட்ட 2.5 மில்லியன் ஒளியாண்டுகள் ஆகும். அன்றோமேடா கலக்சியானது எமது மில்கிவே கலக்சியையும் விடப் பெரியது. திணிவு கூடியது. அதன் மையத்திலும் மிகப் பெரிய திணிவுடைய கருந்துளை உள்ளது.

இந்த அன்றோமேடா கலக்சியும், எமது மில்கிவே கலக்சியும் படு வேகமாக ஒன்னை ஒன்று நெருங்கிவருகின்றன. கிட்டத்தட்ட மணித்தியாலத்திற்கு 270,000 மைல் கதியில் (190,000 கிலோமீற்றர்/மணி) ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டு இருக்கின்றன.

என்ன! ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டு வருகின்றனவா? அப்படியாயின் மில்கிவேயும், அன்றோமேடாவும் ஒன்றுடன் ஒன்று மோதப் போகின்றனவா? அப்படியாயின் எமது கதி?

அடுத்த முறை அந்த விபரங்களைப் பற்றிப் பார்ப்போம். என்ன சரிதானே!



- கனி -
416.261.1348




கனடாவிற்கு புதியவரா? உங்கள் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சை மேம்படுத்த தேவையான உதவிகளை பெறுங்கள்.

cic.gc.ca/new 1 800 O-Canada (1-800-622-6232) TTY: 1-800-926-9105

பிரிட்டிஷ் கொலம்பியா, மேனிடோபா மற்றும் கியூபெக்கில் இச்சேவைகள் அந்தந்த மாகாண அரசாங்கங்களால் அளிக்கப்படுகிறது.

Citizenship and Immigration Canada Citoyenneté et Immigration Canada

Canada

# துர்க்காதுரந்தரி

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நாட்டம் அதிகம் இருக்கவில்லை. தங்கம்மா அந்த நிலைமையை மாற்றி அமைத்தார். அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டுச் சுவைக்க மக்கள் திரண்டு எழுந்தனர்.

கோயில்களிலே சிறியவர்களுக்குச் சுண்டல் கொடுத்தும் பெரியவர்களுக்குச் சின்ன மேளங்களைக் காட்டியும் பக்தியை வளர்க்க வேண்டிய நிலையை முற்றாக மாற்றி அமைத்தவர் எங்கள் மங்கையர்க்கரசியார். இதனை 1974ஆம் ஆண்டில் அம்மையாரின் இருபத்தைந்தாண்டு காலச் சமயப் பணிகளைப் பாராட்டித் துர்க்காதேவி ஆலய நிருவாக சபை நடத்திய விழாவிலே நான் இப்படிப் பாடியிருக்கிறேன்:

சின்னமே எங்கள் வேண்டாம்
சிறுகளி யாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம்
வாணவே டிக்கை வேண்டாம்
மன்னுபேர் தங்கம் மாவை
வரவழைத்திடுக என்பார்
இன்னதோர் மாற்றம் நேர
எழுந்தனை வாழி வாழி!

1977ல் இந்த ஆலயத்தின் நிருவாகசபைத் தலைவர் பதவி அம்மையாரை வந்தடைந்தது. பதவி அவரை மாற்றிவிடவில்லை. ஆனால் ஈழத் தமிழர் வரலாற்றில் அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுவரை காலமும் ஆலய நிருவாகத்தை நடத்த ஆண்கள்தாம் தகுந்தவர் என்று கருதிவந்த மக்கள் மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட்டது. அது சாதாரண மாற்றமல்ல, பெரிய வரலாற்றுப் புரட்சி. ஈழத்தில் ஓர் ஆலய நிருவாக சபைக்குத் தலைவராகத் தெரிவுசெய்யப் பெற்ற முதற்பெண்மணி என்ற பெயரை அம்மையார் பெற்றார். அந்த வகையில் அவர் பெண் உலகத்துக்கே பெருமை தேடித்தந்த பெருமாட்டி ஆகின்றார்.

இந்தப் பதவியால் அவர் சில அதிகாரங்களைப் பெற்றார் என்பது உண்மைதான். ஆனால் அவர் அவற்றை எந்தக் கட்டத்திலும் தன்னிச்சையாகப் பயன்படுத்தியது இல்லை என்பதே உண்மை. ஆலயப் பணிகளை மற்றைய நிருவாக சபை உறுப்பினருடன் கலந்து ஆலோசித்தே செய்து வந்தார் என்பதனை இங்குள்ள மூத்த உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

கோயில் வளர்ச்சிக்கு அவரது தலைமைப் பதவியோடு அவரிடத்திலே இயல்பாக அமைந்த பாடறிந்து ஒழுகும் பழக்கமும் முக்கியமான ஒரு காரணமாகும். கோயிலுக்கு வருகின்ற அடியார்களை அன்போடு வரவேற்றல், நலம் விசாரித்தல், ஆலோசனைகள் கூறுதல், உதவிகள் புரிதல் போன்ற பண்புகளால் ஆலயத் தலைவராக மட்டுமன்றி மக்கள் தலைவியாகவும் அவர் விளங்கினார். இந்த நல்லுறவால் துர்க்கை அம்மனை செல்வி தங்கம்மா அவர்களின் வடிவிலே கண்டு அடியார்கள் வணங்கலாயினர். பாண்டிமாதேவியாரை, 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' என்று போற்றினார் சேக்கிழார் பெருமான். பல அடியார்கள் தங்கம்மா அவர்களைத் தங்கள் தெய்வமாகவே, துர்க்காதேவியின் மறு வடிவமாகவே கருதி வணங்கி வருகின்றார்கள்.

சமயத்தை மக்கள் மயப்படுத்துவதில் வெற்றி கண்டவர் அம்மையார் அவர்கள். எமது சமயம் ஏட்டிலே கிடந்து தூங்குகின்ற சமயம் அல்ல. அல்லது வெள்ளிக்கிழமைகளில் அல்லது திருவிழாக் காலங்களில் மட்டும் ஆலயங்களுக்குச் சென்று வருவதோடு மனநிறைவு காணுகின்ற சமயமுமல்ல. அது ஒரு வாழ்க்கைச் சமயம். அன்பையும் பண்பையும் அறத்தையும் நாளாந்தம் வளர்க்கின்ற சமயம். தெய்வத்தை மக்கள் தங்களிலே கண்டு தெய்வீக வாழ்வை மேற்கொள்ளத் தூண்டுகின்ற அனுபவச் சமயம்.

சிலபேர் தத்தம் சமயங்கள்தாம் மேலானவை என்று பரப்புரை செய்து மற்றைய சமயத்தவரைப் பகைமையுணர்ச்சியோடு பார்க்கிறார்கள். காலத்தின் கோலத்தை அறியாதவர்கள் இவர்கள். கனடா நாடு இன்று உலகத்தவரால் சிறந்த பல்கலாச்சார நாடு என்று போற்றப்படுகின்றது. உலகத்தில் எத்தனை இனங்கள் உண்டோ அத்தனை இனங்களும் கனடாவில் வாழ்கின்றன. ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல் கனடியர் போற்றுகின்ற ஒரு பெரிய பண்பாடு. ஒருவரின் சமய நம்பிக்கையையும் கலாச்சாரத்தையும் மற்றவர்களும் மதிக்க வேண்டும் என்பது அங்குள்ள மனித உரிமைச் சாசனத்திற் சொல்லப்பட்டிருக்கும் முக்கியமான ஒரு விடயமாகும். இதற்குப் பரந்த மனப்பான்மை வேண்டும். இந்த மனப்பான்மை உள்ளவர் அம்மையார் அவர்கள். இந்த மனப்பான்மையை மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு அவர் பாடுபட்டார் என்பதனை அவரது பேச்சுக்களும் எழுத்துக்களும் செயற்பாடுகளும் நன்கு நமக்குக் காட்டுகின்றன.

சக்தி வழிபாட்டை அம்மையார் முன்னிலைப்படுத்தினார். ஏன்?

சக்தியை வழிபடுவதன் மூலம் மக்கள் சக்தி படைத்தவர்களாக, வலிமையுடையவர்களாக வருவார்கள் என்ற நம்பிக்கையினாலேதான். சக்தி வழிபாடு எம்மிடத்திலே எவ்வளவு சக்தி இருக்கிறது என்று சிந்திக்கவும் சக்தி குறைவாக இருந்தால் அதனை வளர்த்தெடுக்கும் வழிவகைகளில் ஈடுபடவும் எம்மைத் தூண்டிவிடுகிறது. அதுமட்டுமன்றி எமது சக்தியை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம், எப்படிப் பயன்படுத்தலாம் என்றும் திட்டமிட வைக்கின்றது.

அப்படி அவரே திட்டமிட்டுத்தான் படிப்படியாகப் பல பணிகளைச் செய்தார். முதலிற் கோயிற் கட்டிடப் பணிகளிற் கவனஞ் செலுத்தினர். கோயிற் கட்டிடப் பணிகள் நிறைவுபெற்றதும் தனது கவனத்தை மக்களுக்குத் தொண்டு செய்வதில் முழுமையாகச் செலுத்தத் தொடங்கினர்.

எமது சமயம் தொண்டுச் சமயம் என்று எல்லோருக்கும் தெரியும். அப்பர் சுவாமிகள்,

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

என்று பாடி, உழவாரத் தொண்டு புரிந்து சைவசமயத்தை ஒரு தொண்டுச் சமயமாக முன்னிலைப்படுத்திய மதிப்புக்குரியவர். அவரைப்போன்று தொண்டுகள் செய்த நாயன்மார்களின் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் விரிவாக விளக்குகின்றது. திருத்தொண்டர் புராணத்தில் அம்மையார் ஊறித் திளைத்தவர். அது பற்றிப் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பேசுவார்.

எங்கள் காலத்தில் சைவ சமயத்தைத் தொண்டுச் சமயமாக்கிய திருத்தொண்டர் அம்மையார் அவர்கள். என்னென்ன தொண்டுகள் செய்தார் என்பதை நீங்கள் நன்கு அறிந்தவர்கள். அதனால் அவற்றை நான் இங்கு பட்டியற்படுத்த முயல்வது கொல்லர் தெருவில் ஊசி விற்பதாகிவிடும் என்பதால் விட்டுவிடுகின்றேன்.

ஒன்றை இந்த இடத்திலே சொல்ல வேண்டும். அம்மையாரின் பணிகளைத் தொடர்ந்து செய்யச் செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் இந்த ஆலயத்தின் தலைமைப் பதவியை ஏற்றிருப்பது நாம் செய்த தவப்பயனேயாகும், அன்னை துர்க்கா தேவியின் அருள் திறனேயாகும்.

ஆறு திருமுருகன் அவர்கள் தனது வாழ்க்கையையே சமயத்துக்கும் மக்கள் பணிக்கும் அர்ப்பணித்து நடக்கும் ஒரு தியாகச் செம்மல். சிறந்த பேச்சாளர். அம்மையார் வழி உலகெங்கும் சென்று சிந்தனைத் திறம் மிக்கச் சொற்பொழிவுகளால் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வருகின்றார்.

அம்மையார் வாழ்ந்த காலத்திலேயே அவரது ஆசீர்வாதத்துடன் மக்கள் பணியைச் சிவபூமி என்ற பெயரில் செய்யத் தொடங்கிய சிவதொண்டர். அவர் அம்மையார் வழி தொடரும் பணிகளுக்கு உலகளாவிய மட்டத்தில் பெரும் ஆதரவு கிடைத்து வருவது அவருக்கு இருக்கின்ற செல்வாக்கை நன்கு காட்டுகின்றது. நாமும் அவருக்கு வேண்டிய ஒத்துழைப்பையும் உதவிகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.


எல்லாம் வல்ல துர்க்காதேவி உங்கள் எல்லோருக்கும் எல்லா நலன்களையும் வளங்களையும் தந்தருள வேண்டி அமைகின்றேன், வணக்கம்.

# தைரோயிட் சுரப்பி...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

சுரப்பியில் தாக்கம் ஏற்பட்டு கட்டி உருவம் பெரிதாக காட்சி அளிக்கும். இதனை ஒருவித கழலை எனவும் கூறுவர். இக்கழலை அதிக அளவில் தைரோயிட் சுரப்பியில் இருந்து இயக்கு நீரை அதிகரிக்கும் என்றும், நச்சுத்தன்மையாகவும் வரலாம் எனவும் கூறப்படுகின்றது.

சிலவேளையில் தைரோயிட் சுரப்பியில் இருந்து பல்வேறு கழலைகளை உருவாகி நாட்கள் செல்ல செல்ல புற்று நோயாகவும் மாறலாம் எனவும் அறிய முடிகின்றது. தைரோயிட் சுரப்பில் இருந்து சுரக்கப்படுகின்ற இயக்கு நீர் சிறுவர்களுக்கு குறைந்தால் ஏற்படும் நோயை கிரிட்டினிசம் (Cretinism) எனவும் பெரியவர்களுக்கு ஏற்படும் போது




இவ்வியாதியை மைக்ஸிடிமா (Myxedema) எனவும் கூறப்படுகின்றது.

கிரிட்டினிசம் நிலையில் உள்ள சிறுவர்களுக்கு உடல் உள்ள வளர்ச்சி குன்றும். சருமம், உதடு, நாக்குப்பகுதிகள் தடிப்பான நிலையில் காணப்படும். உடல் வெப்பு குறைவதுடன் மூக்கு உறுப்புப்பகுதி சப்பையாக இருக்கும். அத்துடன் குரல் மாற்றம் அடைவதுடன் காதுப்பகுதி அழகற்ற தோற்றத்தில் காணப்படும் எனவும் அறியக்கிடக்கின்றது.

எனவே தைரோயிட் சுரப்பு இயக்கு நீர் குறைவான குழந்தைகள் பிறந்து 6 வாரங்களுக்குள் உரிய வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த பரீட்சைகள் செய்து உரிய மருந்துகளைப் பெற்று சுகம் பெற முடியும் எனவும் கூறப்படுகின்றது. ஆகையினால் தங்கள் குழந்தைகளை வாழ வழியமைத்துக் கொள்ளுங்கள். தவறின் குழந்தை செவிப்புலனற்று வாய் பேச முடியாத கவலைக்குரிய குழந்தையாக அமைந்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

பெரியவர்களைக் கவனிக்கும்போது தைரோயிட் சுரப்பி குறைவாகச் சுரப்பதினால் மைக்ஸிடிமா (Myxedema) என்ற நோய் ஏற்படும் என அறிந்தோம். இந்நிலையில் உள்ளோருக்கு கொழுப்பும் நீரும் சேர்ந்து கொள்ளும். பசி இல்லாமல் உணவு அற்று உடலும் உள்ளமும் சோர்வு அடைந்துவிடும். குளிர் நிலை அதிகரிக்கும். உடலின் வெப்பம் மந்தமாகிவிடும். தோல்பகுதி உலர்ந்து காணப்படும். தோலில் உள்ள உரோமங்கள் (மயிர்கள்) செம்மை பொருந்திய நிறத்துடன் காணப்படும். இருதயத்தின் இயக்கம் குறைந்து நெஞ்சு வலியும் தென்படும். தூக்கம் குறைவாகவும் குரல் மாற்றமும் மாறுபட்டு காணப்படும். பேச்சில் தளர்ச்சி காணப்படும்.

தைரோயிட் சுரப்பி இயக்கு நீர் அதிகம் சுரப்பதை தைரோடாக்ஸிகோஸிஸ் (Thyrotoxicosis) என அழைக்கப்படும். இந்நிலையில் தைரோயிட் சுரப்பி பெரிதாகக் காணப்படும். நாடித்துடிப்பு அதிகரிக்கும். நரம்புகளில் மாற்றம் ஏற்படும். இவர்களுக்குப் பசியிருந்தும் உணவு எடுத்தாலும் உடம்பு மெலிந்து காணப்படும். இரத்த அழுத்தமும் கூடிக்காணப்படும். நாடித்துடிப்பு வேகமாக இருக்கும். மூச்சு முட்டு ஏற்படும். எதற்கும் உணர்ச்சியடைவர். அத்துடன் பதட்ட நிலையும் இருக்கும். கை கால்களில் மாற்றம் தென்படும். தோல் பகுதியில் இடையிடையே கரும்புள்ளிகள் காணப்படும். எனவே இவற்றையிட்டு கவலையோ கலக்கமோ அடைய வேண்டாம். தற்காலத்தில் தகுந்த சிகிச்சை முறைகளும் மருந்து வகைகளும் உண்டு. தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த பரீட்சைகள் மூலம் கண்டறிந்து சிகிச்சை பெற்றுச் சுகம் பெற முடியும்.

பெரும்பாலும் இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் மழைக்காலத்தில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்வது மிக நன்று. ஓய்வு முக்கியம். இவை அனைத்தையும் தங்கள் வைத்தியர் கூறிக்கொள்வார். தைரோயிட் வீக்கத்திற்கு கதிர் வீச்சும், அறுவைச் சிகிச்சையும் செய்வதும் உண்டு. மேலும் தைரோயிட் சுரப்பி இயக்கு நீர் பற்றாக்குறைவினால் ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கே பாதிப்பு அதிமாகின்றது. இவர்களைப் பார்க்கும்போது உடல்நிலை எந்நேரமும் குளிர்ந்தபடி இருக்கும். வெப்பநிலை உடலில் குறைந்து காணப்படும். கண்களின் கீழ்ப்பகுதியும், இமையும் புடைப்பாக முன்தள்ளிக் காணப்படும். உரோமம் உதிர்ந்தபடியிருக்கும். மலச்சிக்கல், உடல் எடை கூடி உருவம் ஊதிக் (பருத்து) காணப்படும். கொலஸ்ரோல் அதிகரித்திருக்கும். மந்தமான செயலும், களைப்பும் காணப்படும். மாத விலக்கு (தீட்டு) சிக்கல் தென்படும். உதிரம் அளவை மீறிச் செல்லும். நாடித்துடிப்பு குறைந்து சோர்வுடன் காணப்படும். நெஞ்சு வலி, முட்டு மூச்சு இருக்கும். நீண்ட நேரம் தூங்கினாலும் எழுந்த பின் களைப்பு, சோர்வு, தடுமாற்ற நிலை காணப்படும். காது கேட்பது குறைவதுடன் குரல் மாற்றமும் தென்படும். கழுத்து வீக்கம் முன் நோக்கி நன்கு தெரியும். எனவே எதற்கும் கடுமையாகச் சிந்திக்க வேண்டாம். உரிய வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த பயன் கிடைத்து சுகம் பெற்று வாழ முடியும் என்பதை கூற விரும்புகின்றேன்.


# ஆரோக்கியத்தின் அடிப்படை முதுகுத்தண்டு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனிதனின் உடல் மனம் என்பனவற்றின் ஆரோக்கியத்தின் அடிப்படை என்பது முதுகுத்தணடு மற்றும் ஆதாரச்சக்கரங்கள் என்று அழைக்கப்படும். நாளமில்லா சுரப்பிகள் என்பனவற்றின் செயல்திறனைப் பொறுத்தே அமைகின்றது. இதைத்தான் இன்றைய விஞ்ஞானமும் விளக்குகின்றது. ஒவ்வொரு யோகாசனமும் முதுகுத்தண்டு மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளைச் தூண்டி செம்மையாகச் செயல்பட வைக்கின்றது. இதனால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகி நோய் என்பது நெருங்குவதில்லை.

## முதுகுத்தண்டு

இது மூளையின் அடிப்பகுதியில் இருந்து ஆரம்பமாகி முதுகுப்பகுதி பின் எலும்பு வளையங்களுக்கு ஊடாக முதுகின் கீழ்பகுதிவரை நீண்டிருக்கின்றது. இதனுடைய நீளம் பதினாறரை அங்குலமாகும். இது நரம்பு நாளங்களால் ஆனது. இதிலிருந்து 12 இணை நரம்புகள் மூளைக்குச் செல்கின்றது. மற்றும் 31 இணை நரம்புகள் உடலில் எல்லாப் பகுதிகளுக்கும் செல்கின்றது. அதனால் இது மனிதனின் இரண்டாவது மூளை எனப்படு




கின்றது. உதாரணமாக நடந்து செல்லும் போது காலில் ஒரு முள் குத்திவிட்டால் உடனே காலைத் தூக்குகின்றோம். இந்த உத்தரவு மூளையிலிருந்து கிடைப்பதில்லை. முதுகுத்தண்டு உடன் செயல்பட்டு நரம்பு களுக்கு உத்தரவிட்டு உடன் செயல்பட வைக்கின்றது.

## முதுகுத்தண்டு ஒரு சந்திப்பு நிலையம்

மூளையும் தண்டுவடத்தையும் நரம்புகள் இணைக்கின்றன. அதுபோன்று நரம்புகள் தண்டு வடத்திலிருந்து தொடங்கி பல கிளைகளாகப் பிரிந்து உடலின் தசைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாட்டால் உடலில் ஏற்படும் எல்லா உணர்ச்சிகளும் தண்டுவடத்தின் வழியாகத்தான் முனையை அடையவேண்டும். அதைப்போன்று முனை இடும் கட்டளைகளும் தண்டுவடத்தின் வழியாகத்தான் உடலின் எல்லா தசைகளுக்கும் செல்ல வேண்டும். மூளைக்கும் உடலின் உறுப்புக்களும் இணைப்பு நிலையமாகக் திகழ்வது இந்த முதுகுத் தண்டுதான். அத்துடன் இருதயம், நுரையீரல், இரப்பை, கல்லீரல் முதலிய உறுப்புக்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதும் இந்த முதுகுத்தண்டுதான்.

உலகத்தில் மனிதன் மட்டுமே முதுகுத்தண்டை தரையில் வைத்துப் படுக்க முடியும். மற்ற உயிரினங்களால் அப்படி முடியாது. இது இயற்கையின் அதிசயம்.

## முதுகுத் தண் டும் யோகாசனங்களும்.

யோகாசனங்களில் அனைத்தும் முதுகுத் தண்டுடன் சம்பந்தப்பட்டவையாவே இருக்கின்றன. யோகாசனங்கள் அதனை செம்மைப்படுத்தி சிறப்பாக இயங்குகின்றது. முதுகுத்தண்டு இளமையாக இருக்கும் வரைதான் மனிதன் இளமையாக இருக்க முடியும். சாதாரணமாக மனிதன் முதுமை அடையும்போது முதுகுத்தண்டானது இறுகிப் போய் வளையும்தன்மை குறைந்துவிடும். ஆனால் யோகாசனங்கள் இந்த நிலையை மாற்றி அமைத்து முதுமையிலும் இளமைத் துடிப்புடன் மனிதனின் இயக்கத்தை நெறிப்படுத்துகின்றது.


## நாளமில்லா சுரப்பிகளும் அவற்றை சமநிலைப்படுத்தும் யோகாசனங்களும்.

நமது உடலில் சில சுரப்பிகள் உள்ளன. இவைகளுக்கு இரத்தகுழாய்கள் போல் தனிக் குழாய்கள் கிடையாது. ஆகையால் சுரக்கும் திரவம் நேரடியாக இரத்தத்தில் கலந்து உடல், மன ஆரோக்கியத்தைப் பாதுகாத்து வருகின்றது. இதனால் இவைகள் நாளமில்லா சுரப்பிகள் எனப்படுகின்றது. இவைகள்தான் மனிதனின் அறிவையும் ஆளுமையையும் கட்டுப்படுத்துகின்றது. இவற்றின் தொழில்பாடு களையும் பொறுத்துத்தான் மனிதனின் ஆயுட்காலம், ஆரோக்கியம் என்பன தீர்மானிக்கப்படுகின்றது.

எனவே இந்த நாளமில்லா சுரப்பிகளை திறம்பட இயங்கச் செய்யும் சில குறிப்பிட்ட யோகாசனங்களையுப் பழகும்போது மனிதனின் முதுமையும் மரணத்தையும் தள்ளிப்போட்டுக் கொண்டுபோக முடியுமென்பது உறுதி.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

நீரிழிவு நோய் வெறும் சக்கரையைப்பற்றி மற்றும் அல்ல.
உங்கள் குடும்பத்தை உயர்ந்த ஆபத்துக்கு ஆளாக்கும் சாதாரணவற்றை தடுக்க உங்களுக்கு நாங்கள் உதவக்கூடும்.
ஒரு பதிவு செய்யப்பட்ட நல உணவு வல்லுநரை இலவசமாக அழையுங்கள்.
EatRight Ontario 1-877-510-510-2

ontario.ca/eatright
Ontario
இது ஒரு ஒன்ராறியோ மாகாண அரச விளம்பரம்

# நல்ல தருணம் இது... நழுவ விடலாமோ?

மிகக்குறைந்த வட்டி வீதம்
கட்டுபடியாகும் அடமானக் கட்டணங்கள்
புதிய வீடு வாங்கவும்,
ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள் கடன் பழுவைக் குறைத்துக் கொள்ளவும்

**நல்ல தருணம் இது... நழுவ விடாதீர்கள்...**



- digi Media -

**Veriable Rate • Fixed Rate • Closed Mortgage • Open Mortgage • Short Term • Long Term • Cash Back Mortgage**

எதைத் தேர்ந்தெடுப்பது என்று குழப்பமாக இருக்கிறதா?

ஒவ்வோருவருடைய அடமானத் தேவைகளும், சூழ்நிலைகளும் வேறுபட்டவை. தனித்துவமானவை. உங்களுக்குப் பொருத்தமான அடமான வகையைத் தேர்ந்தெடுக்க அனுபவமும், நம்பிக்கையும் நிறைந்த ஒரு முகவரை நாடுங்கள்

## Das Narayanasamy

Mortgage Broker

**416-543-6614**

Fax: 1-888-511-8960
E-mail: das@centumoptima.com

Lic# M08007147



CENTUM™
Optima Mortgages Inc.
Lic# 10894

என் பணி கடன் செய்து கொடுப்பதே!

# தேக்கடி - இயற்கை சரணாலயம்

சுற்றுலாப் பயணிகளில் பல வகையினர் இருக்கிறார்கள். விடுமுறை தினங்களில் அல்லது ஓய்வு நேரங்களில் வழக்கமான பணிகளிலிருந்து விடுபட்டு மகழ்ச்சியாக நேரத்தைச் செலவிடுவதும் சந்தோஷமாக பொழுதைபோக்குவதும் மட்டும்தான் சிலரது நோக்கமாக இருக்கும். இவர்கள், இயற்கையாக அமைந்த இடங்களுக்கு, குறிப்பாக மலைப்பகுதிகளுக்கும் கடற்கரை போன்ற இடங்களுக்கும் செல்வதில் ஆர்வமுடன் இருப்பார்கள். வேறு சிலருக்கு, வரலாறு மற்றும் சமயத்துடன் தொடர்புடைய நினைவுச் சின்னங்களைக் கண்டு அவற்றின் தொன்மையையும் அழகினையும் வியப்பது, பிற நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகளை நேரில் கண்டறிவதும்தான் தங்கள் பயண விருப்பமாக இருக்கும். இன்னும் சிலருக்கு, சூரியக் கிரணங்கள் மெல்லத் தழுவும் மணற்பாங்கான கடற்கரைகள், வெந்நீர் ஊற்றுகள், அருவிகள், புனித நதிகள், மலை வாசஸ்தலங்கள் போன்ற இடங்களுக்கு உடல்நலம் பேணும் பொருட்டு பயணம் செய்வதுதான் எண்ணமாக இருக்கும். இவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் விருப்பத்தையொட்டி ஒவ்வொரு இடங்கள் ஈர்க்கும். ஆனால், இவர்கள் அனைவரையும் ஈர்க்கும் ஒரே இடம், தேக்கடி.



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 73

வழிப்போக்கன்

தமிழக எல்லையில் கேரளப் பகுதியில் அமைந்திருக்கும் அழகான இடம், தேக்கடி. தமிழகத்தின் தேனீ மாவட்டத்தின் எல்லையில் குமுளியையொட்டி, கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில், பெரியாறு தேசியப் பூங்காவின் ஒரு பகுதியாக தேக்கடி அமைந்துள்ளது. இயற்கையுடன் இயைந்து கொஞ்சம் பொழுதைக் கழித்துவிட்டு வரலாமே என நினைப்பவர்களுக்கு எழில் கொஞ்சும் தேக்கடி நல்லத் தேர்வு.

பெரியாறு அணையின் எட்டாயிரம் ஏக்கர் நீர்தேக்க பரப்பில் அமைந்துள்ள தேக்கடி ஏரிக்காகவும் பசுமைமாறாக் காடுகளுக்காகவும் சவான்னாப் புல்வெளிகளுக்காகவும் தேக்கடி புகழ்பெற்றது.

தேக்கடி ஏரியில் செயல்பட்டு வரும் படகு சவாரி மிகப் பிரசித்தமானது. இந்தியாவில் உள்ளவர்களை மட்டுமல்லாமல், உலகம் முழுக்க இருந்து இந்தியா வரும் ஏராளமான சுற்றுப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. இதனால் மட்டும் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.21 கோடி வருமானம் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். தேக்கடி ஏரியில் சுற்றுலா துறைக்கு சொந்தமான ஐந்து படகுகள், வனத்துறைக்கு சொந்தமான ஐந்து படகுகள், தமிழக பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இரண்டு படகுகள், கேரள காவல்துறைக்கு சொந்தமான அதி விரைவு படகு ஒன்றும் உள்ளன. வனத்துறைக்கு சொந்தமான ஐந்து படகுகளிலும் ஒரு சவாரிக்கு 88 பேர் செல்ல முடியும். இந்தப் பயணத்தில் ஏரி படகு சவாரி த்ரில்லை அனுபவித்துக் கொண்டே எழில் கொஞ்சும் தேக்கடி சரணாலயத்தின் அழகையும் பலவகையான காட்டு விலங்குகளையும் பறவைகளையும் பார்த்துக்கொண்டே செல்லலாம். அந்த ஏரியின் குளிர்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது,

தேக்கடி வனவிலங்கு சரணாலயம் 673 சதுர கி.மீ பரப்பளவில் பச்சைப் பசேலென பரந்து விரிந்து கிடக்கிறது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இப்பகுதியில் யானைகள், பைசன்கள், மான்கள், குரங்குகள், காட்டெருமைகள் முதலான பல காட்டுயிர்கள் வாழ்கின்றன. அவை கூட்டம் கூட்டமாய் திரிவதை பார்த்து ரசிக்கலாம். உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் புலிகளும் மலைப்பாம்பும்கூட கண்களில் தென்படலாம். தேக்கடி வனப்பகுதியில்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


உங்களிடம் திறன்கள் உள்ளன. அவற்றைக் கனடாவில் பயன்படுத்துங்கள்.





கனடாவில் தமது திறன்களைப் பயன்படுத்த வரும் புதியவர்களுக்கு கனடா அரசின் புதிய நற்சான்று பரிந்துரை அலுவலகம் உதவுகிறது. அயல்நாட்டுக் கல்வித் தகுதிகளை மதிப்பீடு செய்தல் அங்கீகரித்தல் ஆகியவற்றை விரைவுபடுத்த, கூட்டாட்சி அரசு மாகாணங்களுடனும் பிரதேசங்களுடனும் முன் எப்போதும் இல்லாத வகையில் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

**உங்கள் பயிற்சி மற்றும் அறிவைப் பணியில் ஈடுபடுத்துவது எவ்வாறு என்பதற்கான தகவல்களை அறிந்திடுக**

www.credentials.gc.ca 1-888-854-1805 (TTY: 1-800-926-9105) .

அல்லது நாடெங்குமுள்ள 300க்கும் மேற்பட்ட சேவை கனடா மையங்களுள் ஒன்றைப் பார்வையிடுக

Government of Canada Gouvernement du Canada

Canada

# The Hurt Locker

## தூறல்

**வானரன்**

ஈராக் போர் எமக்கு புதிதல்ல. அமெரிக்காவின் நாடுகளுக்கெதிரான யுத்தமும் எமக்கு புதிதல்ல. ஆப்கான் போரில் மடியும் இராணுவ வீரர்கள் நாள் தோறும் கனடிய மண்ணில் புதைக்கப்படுவதும் எமக்கு புதிதல்ல. போர்க் களமும், குண்டுகளும், இரத்தமும், இறந்த உடல்களும் எமக்கு புதிதல்ல. இப்படமும்



எமக்கு புதிதல்ல. சொல்லப்படும் முறையும், போர் மீதான பார்வையும் எமக்கு புதிதே.

குண்டுகள், கண்ணி வெடிகளை அகற்றும் Explosive Ordnance Disposal (EOD) பிரிவின் நிபுணத் தலைவன் சார்ஜன்ட் வில்லியம் ஜேம்ஸ். ஏற்கனவே கண்ணிவெடி அகற்றும் போது கொல்லப்பட்ட சார்ஜன்ட் தொம்சனின் இடத்துக்கு பாக்தாத் வருகின்றார். இக்குழு குண்டுகளை அகற்றும் பொழுது இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பிரிவுத் தலைவர் சார்ஜன்ட் சன்போன். இவர்களது பணி வீதியோர காரில் உள்ள குண்டுகளை அகற்றுவது, மனித குண்டுகளை அகற்றுவது போன்றவை. உயிரை துச்சமாக மதித்து மயிரிழையில் செயல்படுகின்றது இக்குழு. இவர்களது முகாமிற்கருகில் ஒரு சிறுவன் ஆங்கில வீடியோ பிரதிகள் விற்கின்றான். சில சமயங்களில் உதைபந்தாட்டமும் விளையாடுவதுண்டு. இச்சிறுவனுக்கும் சார்ஜன்ட் வில்லியத்துக்கும் நட்பு மலர்கின்றது. இவன் தனது பெயரை பெக்காம் எனக் கூறுகின்றான்.

ஒரு பொருட்களஞ்சியத்தில் குண்டுகளை அகற்றும் பணியில் ஈடுபட்ட பொழுது சிறுவன் பெக்காமின் இறந்த உடலை காண்கின்றார் சார்ஜன்ட் வில்லியம் ஜேம்ஸ். அவனின் உடலினுள் வெடிக்காத குண்டுகளை வில்லியம் ஜேம்ஸ் கண்டுபிடிக்கின்றார். இச்சிறுவனின் உடலை வெளியில் நின்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறும் போது வீதியில் கவனிப்பாரற்று நிலத்தில் இருந்த பை ஒன்றில் அமெரிக்க வீரரின் காலடிபட்ட பொழுது குண்டு வெடிக்கின்றது. சற்று முன்னர் தங்களுடன் இருந்த வீரர் இப்பொழுது இல்லை என கலங்குகின்றனர்.

மறு நாள் பெக்கம் வீடியோ விற்கும் கடையில் நின்றவரை மிரட்டி பெக்கமின் வீட்டை அடைகின்றார் சார்ஜன்ட் வில்லியம் ஜேம்ஸ். அங்குள்ளவர் தான் ஒரு பேராசிரியர் எனக் கூறுகின்றார். பேராசிரியர் இவரை ஒரு சி.ஐ.ஏ என அடையாளம் காண்கின்றார். அங்கு வந்த பெண்மணி இவரை வெளியே துரத்துகின்றார். இதன்பின்னர் முகாமிற்கு வி.டி.யோ விற்க வரும் சிறுவனை சார்ஜன்ட் கண்டுகொள்ளவேயில்லை. மறு நாள் பச்சை வலயத்துக்கு வருமாறு திடீர் அழைப்பு வருகின்றது. மீண்டும் தேடுதல் தொடர்கின்றது. இவர்களது சுற்றுக் காலம் முடிந்து அமெரிக்கா திரும்ப இருக்க இரண்டு நாட்கள் முன்பு இவர்களுக்கு அழைப்பு வருகின்றது. ஒரு சோதனைப் புள்ளியில் ஒரு ஈராக்கியர் நேரக் குண்டணிந்து வந்துள்ளார். வழமை போல் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு ஒருவரும் நிற்க அனுமதிக்கப்படவில்லை. வில்லியம் ஜேம்ஸ் ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் குண்டுதாரியுடன் உரையாடுகின்றார். குண்டுதாரி ஒரு குடும்பஸ்தர். கட்டாயப்படுத்தப்பட்டு குண்டுகள் அவரது உடலில் அணிவிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. குண்டுதாரியின் சட்டையை கழற்றுமாறு உத்தவிரப்படுகின்றது. சட்டையைக் திறந்து காட்டிய உடலில் பல குண்டுகளைக் கொண்ட சட்டையை அணிந்துள்ளார். வில்லியம் ஜேம்ஸ் தமது பாதுகாப்பு கவசங்களை அணிந்து கொண்டு குண்டினை நீக்க குண்டுதாரியினை நோக்கி செல்கின்றார். இரண்டு நிமிடங்களுக்கு குறைவாக உள்ளது. குண்டுகள் பல பூட்டுகளுடன் சிக்கலான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. குண்டுதாரி கடவுளை பிரார்த்தித்துக் கொண்டே இருக்கின்றான். மன்னிக்கவும் எனக் கூறிவிட்டு வில்லியம் ஜேம்ஸ் திரும்பிவிடுகின்றார். ஒரு சில செக்கனுக்குள் குண்டு வெடித்து உடல் சிதறுகின்றது.

இவர்கள் அமெரிக்கா திரும்பும் நாளும் வந்து விடுகின்றது. சார்ஜன்ட் சன்போன் மீண்டும் பாக்தாத் திரும்ப முடியாது எனக் கூறுகின்றான். வீடு திரும்பிய பின் ஒரு நாள் இரவு தனது சிறு குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது குழந்தையிடம் கூறுகின்றான் "நான் ஒரேயொரு

தொடர்ச்சி 28ஆம் பக்கம்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough






# கனடா செய்திகள் பக்கம்

## ரொறொன்ரோ வாகன கம்பனி எதிர்கொள்ளும் மேலதிக பிரச்சனைகள்

2009 & 2010 வருடத்திற்குரிய ரொயோற்றா கம்பனி வாகனங்களில் திருப்பு வளையம் (Steering) பூரணமாக திருப்தியற்ற நிலையில் இருப்பதாகவும் இதனால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்களை மீண்டும் திருப்பி எடுத்து இத்திருத்த வேலைகளை சரிப்படுத்தி கொடுக்க வேண்டிய ஒரு பெரும் தலையிடியினை எதிர்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே வேகத்தினை கூட்டி குறைத்து பாதத்தினால் மிதிக்கும் உபகரணம் (Accelerator pedal) சரியில்லாதது ஆபத்தாகவுள்ளது என குறிப்பிட்டு பல ஆயிரம் வாகனங்களை திருப்பி எடுத்து திருத்திக் கொடுக்கும் வேலை தொடர்ந்து கொண்டேயுள்ளது. (ரொரன்ரோ ஸ்ரார் Feb. 19, 2010)

## எதற்கும் அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக தீயணைக்கும் படையினரை அழைத்தால்?

அர்த்தமில்லாத அபாய ஒலிகள் வீடுகளில் எழுவதனை வைத்து ஆபத்து என கருதி தீயணைக்கும் படையினரை வீட்டுக்கு அழைத்தால் $350 டொலர் கட்டணம் ரொறொன்ரோ நகரில் அறவிடப்படும்.

ஒவ்வொரு வருடமும் சுமார் பத்தாயிரம் அழைப்புக்கள் இவ்வாறு இருப்பதாக இங்கு புள்ளவிபரங்கள் தெரிவிக்கின்றன. (By the Canadian Press Feb. 17, 2010)

## தப்பி ஓட முயற்சித்த வாகன சாரதிக்கு பிணை வழங்கமுடியாது என தீர்ப்பு

கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவின் சாலற்ரவுண் மாகாணத்தின் தலைநகரில் வாகனமோட்டிய 20 வயது பெண் ஒருத்தி சக்கர நாற்காலி மோட்டார் வாகனத்தில் வீதியினை கடக்க முயற்சித்த போது மோதிவிட்டு தப்பி ஓட முயற்சித்தார். பின்னர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் இருக்கும் இவருக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை பிணை வழங்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.
(By Canadian Press Feb. 17, 2010)

## துர்மணம் தாங்கமுடியாத காரணதினால் விமானத்திலிருந்து அகற்றப்பட்ட பிரயாணி

கனடாவில் சாலற்ரவுண் என்னும் நகரிலிருந்து மொன்றியல் சென்ற எயர் கனடா விமானத்தில் பிரயாணம் செய்யலாமென விமானத்தில் ஏறிய பிரயாணி ஒருவரை சக பிரயாணிகள் அவரிடமிருந்து துர்மணம் வீசுவதாக அறிவித்ததை தொடர்ந்து விமானம் புறப்பட முன்னரே விமானத்திலிருந்து இறக்கப்பட்டார். (Feb. 17, 2010 CBC News)


**"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"**
எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்





**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**
***GTA Square - 5215 Finch Ave. E., #201***
***Middlefield & Finch***



**15** *Years of* EXPERIENCE

**Maths - Science English**



*Classes in* **Progress**
*For All Grades*
*K.G, Gr.1 to Gr 12*

**Scarborough / Markham**



***Mr & Mrs Sharma - 416-666-5515 / 416.724.9996***

# BASEMENT RENT

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

**BELLAMY & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. Anytime.
416.439.1570/416.431.5195

**KENNEDY & LAWERENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.879.7881

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen, full washroom, parking, TV cable, high speed internet. Close to TTC, school, all amenities & quiet place. Avail. April 01, 2010.
416.265.9138 / 416.271.8467

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to school.
தொடர்புகளுக்கு: 905.554.6929

**MCCOWAN & MCNICOLLE**
2 Bedroom walkout bsmt for rent. living room, kitchen, sep. entrance. Close to school, Alton tower. Small family or single female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.1401

**MORNINGSIDE & McLEVIN**
New One Bedroom walk-out bsmt. apt for rent. Laundry & Cable. Close to TTC, school. Wal-Mart & many malls. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.519.2899

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.899.4823

HWY **401 & KINGSTON**
Bachelor walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, 401. Avail. immediately. Rent negotiable.
தொடர்புகளுக்கு: 416.422.0691

**MCCOWAN & HIGHGLEN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, bank. Avail. immediately. No smoking. Single or couple preferred.
905.201.8922 / 647.286.8922

**BIRCHMOUNT & SHEPPARD**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவோ அல்லது முழுமையாவோ கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416.804.8435

**NEILSON & MCLEVIN**
1 Bedroom furnished bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.206.3436

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801/416.293.6253

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450/416.459.3006

**MIDDLEFIELD & FINCH**
2 அறைகள் கொண்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable & laundry. Close to mall, school, Aiyappan temple & tamil stores. Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.328.1545

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 24 hrs. bus service, school. Avail. May 01, 10.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, high-school, library, TTC, bank. Available immediately.
416.546.2937/647.402.2937

**BRICHMOUNT & FINCH**
2 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.568.0686 / 647.864.7426

**KENNEDY & EGLINTON**
2 Rooms available for rent. Sep. entrance. Cooking facilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**OLDFINCH & MORNINGSIDE**
3 bedrooms Bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to mall, TTC, school. Avail. immediately.
647.388.5295/416.724.7653

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, bakery, mall, sneha college. Ladies preferred. Avail. immediatelty.
தொடர்புகளுக்கு: 416.894.1187

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school, temple. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.291.2796

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. November 01, 09.
தொடர்புகளுக்கு: 905.471.8615

**McCOWAN & DENISON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, cable, parking, laundry. Close to TTC, mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# CONDO FOR RENT

**MIDDLEFIELD & FINCH (SCARBOROUGH)**
1 Bedroom + den for rent. Laundry, parking. 3 Years old. 24 hrs. TTC, security. Avail. immediately.
416.554.9689 / 416.910.1303

# HOUSE FOR RENT

**FINCH & NEILSON**
3 Bedroom house for rent. Rent $1200 + utilities. Bsmt for rent $650 including utilities.
தொடர்புகளுக்கு: 416.786.2463

**DONMILLS & SHEPPARD**
3 Bedrooms house for rent. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 404, Fairview mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.502.8053

# HOUSE FOR SALE

வெள்ளவத்தையில் 3 படுக்கையறைகள் கொண்ட தொடர்மாடிவீடு ஒன்று விற்பனைக்குள்ளது. சகலவசதிகளும் கொண்ட வீடு.
தொடர்புகளுக்கு: 416.629.9601

**EGLINTON & DANFORTH NEW TOWN HOUSE**
4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

மேலும் பக்கங்கம் 23, 25

# BASEMENT FOR RENT

**MEADOWVALE & SHEPPARD ROUGH RIVER**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, stove, fridge, kitchen. Close to TTC, mall. Single couple or students preferred. Avail. immediately. ***416.629.4013 (Call after 6.00pm) / 416.457.4921 / 416.286.4664***

# BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
Very convenient location with all facilities. 2 bedrooms, living / dining, kitchen with stove and fridge, sep. entrance, laundry, Parking. Very good for working couple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.264.3899***

# HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**
3 Bedroom + bsmt house for rent. 4 Car parking with all facilities. Close to TTC, mall, school. Avail. March 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.830.4644.

# HOUSE FOR RENT

**LAWRENCE & EGLINTON ON KENNEDY RD**
3 Rooms with all facilities. Parking, front & backyard with balcony. Avail. April 01, 2010.
தொடர்புகளுக்கு: ***416.264.3899***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM RENT

**MARKHAM & ELLESMERE**
10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping. தமிழ்கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0140

---

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு May 1st, 2010 இல் இருந்து உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. அழையுங்கள்
416.299.4895 / 416.201.1222

---

**BIRCHMOUNT & MCNICOLE**
Upper level 3 broom for rent. 2Washrooms, kitchen, living room, parking, laundry. Close to TTC, hospital. Avail.immediately
தொடர்புகளுக்கு: 416.335.8055

---

**WARDEN & FINCH**
1 Room for rent. Close to TTC, mall, school. Ladies preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.491.9564 after 4:00pm

---

**MCLEVIN & TAPSCOTT**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு:416.716.4250

---

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. No alcohol, no smoking. Avail. anytime. Rent $375. Close to bus, Kennedy subway, stores, etc.
647.290.8636 / leave message

---

**NEILSON & FINCH**
வீட்டின் மேல்தளத்தில் ஒரு அறையும், One bedroom bsmt apt. உம் வாடகைக்கு உண்டு. Full bath, kitchen, sep.entrance.
தொடர்புகளுக்கு: 416.412.7468

---

**BIRCHMOUNT & MCNICOLL**
2 Bedroom upper level for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.335.8055

---

**PHARMACY & FINCH**
1 Bedroom in condo. for rent. Laundry, kitchen, living room. Close to TTC, mall, college, school. Cable & internet free. Avail. immediately. Students preferred.
647.221.2252 / 416.496.8488

---

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

---

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

---

**MARKHAM & STEELES**
4 படுக்கை அறை கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to TTC, YRT, walmart. வயதானவர்கள் அல்லது மாணவர்கள் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.726.0897

---

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

---

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

---

**WARDEN & FINCH**
Condo. இல் 1 அறை வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 416.855.9232

# CONDO FOR SALE

**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom condo. for sale. Close to TTC, GTA Square mall, temple, school, hwy 401. Avail. July 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.497.5337

# MYT TAX SERVICEs

***Personal & Business***
$15 Per Personal Return
Discounts for Low income
Pick up and drop off
Call: ***905 272 7160***

# VAN FOR SALE

**Van விற்பனைக்கு**
Toyota Zeina Van ஒன்று விற்பனைக்கு உண்டு. 217,000km ஓடியது.
416.498.0895 / 647.505.0895

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil.
(JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. 31, 12th district, Kadukkaiadi Lane, Nallur, Jaffna. The extend of the land is 4.5 Parappu. Within Jaffna Municipality limits.
This is the 3rd piece of land behind a land with an old house on the main rd ,that is 122, Chemmani Road. Opposite to Old education department and a church and very closer to Nallur Temple( about 3/4 mile). It has some producing coconut trees and a well.Education Department) முன்பாக உள்ளது.
மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 22, 25

# NEW STYLE TAILORING



விஷேடமாக சாறி Blous, சுடிதார் அனைத்தும் குறைந்த செலவில் குறித்த நேரத்தில் தைத்துக் கொடுக்கப்படும். மற்றும் தையலும் கற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***647.885.7843***

# OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

---

# OFFICE SPACE FOR RENT

**2370 MIDLAND AVE. & SHEPPARD**
Law, Insurance, Realestate, Accident claim, school, College, Tuition Center போடக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. Tamil one தொலைக் காட்சி நிறுவனத்திற்கு அருகாமையில் உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.744.4357

# SPACE FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
Finch & Middlefield சந்திப்பில் அமைந்துள்ள GTA square mall இல் கடை வாடகைக்கு உண்டு. 2ஆவது மாடியில் #230. எல்லா விதமான வியாபாரங்களும் செய்ய வசதியான இடம்.
416.889.3191/416.497.7660

# மணமகன் தேவை



யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த கொழும்பில் தொழில்புரியும் 36 வயதுடைய மணமகளுக்கு தாயார் தகுந்த வரனை தேடுகிறார்.
தொடர்புகளுக்கு: 416.562.1573

# JOB JOB JOB

வாகனங்கள் திருத்துவதற்கு அனுபவமுள்ள மெக்கானிக் (Mechanic) தேவை.
416.285.8700 / 647.402.1980

---

Looking for a elder woman who can help in baby sitting. 10am - 4pm. Cash Payment.
தொடர்புகளுக்கு: 416.293.1401

---

**PART TIME COOK** (பகுதிநேர cook)
**YOUNG & EGLINTON**
இத்தாலியன் உணவு (Italian food), Pizza செய்யத்தெரிந்தவர் (Pizza Maker) வேலைக்குத்தேவை. வேதனம் $10.
தொடர்புகளுக்கு: Selva
***416.305.8738 / 416.932.2837***

---

Scarborough வில் உள்ள Pub Restaurant க்கு waitress வேலைக்கு பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு: ***416.414.5562***

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

# CARS FOR SALE

2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
2007 Acura CSX, 5 speed $15,900.
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

# மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த நன்கு படித்து பட்டதாரியான( M.A பொது நிர்வாகம்) தற்பொழுது நூலகராக பணிபுரியும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த நல்ல வரனை பெற்றோர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேடுகின்றார்கள். (வெளிநாடு விரும்பத்தக்கது)
உள்நாட்டில் - 011.94.021.3214223
வெளிநாட்டில் - 416.710.2686

# மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.284.8757

# JOB JOB JOB

***Office Assistant Wanted for Personal Injury Firm in North York***

Duties include faxing, photocopying and other duties as required. Salary plus benefits.

***Fax Resume to 905-803-9002***

# JOB JOB JOB



Roti செய்யத் தெரிந்தவர்கள் முழுநேர வேலைக்குத் தேவை.
***416.799.4528 /416.276.8168 / 289.400.3434***
Cook position also available.



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490/647.831.0070

**Tutorial 255** ***Answers to Tutorial 255***


(1) suppose the father's age is x years. Then the son's age is (33 - x) years.
In t years the ages will be x + t and t + 33 - x. x + t = 4 (T + 33 - x)
5x - 3t = 132 sure we want the smallest value for T, starting with t =1.
x = 27 present ages are 27+ 6 years. In One year 28 and 7 years.

(2) The number of One digit numbers from 1 to 9 is 9. The number of two digits numbers from 10 to 99 is 90. The number of three = digit numbers from 100 to 250 is 151.
The number of digits required is (9 x 1) + (90 x 2) +(151 x 2) = 642

(3) $x^2 - k = 2x - 1$ $x^2 - 2x - (k + 1) = 0$. For to be coninuous
$x = -1$ $1 + 2 - k + 1 = 0$ $k = 4$

(4) $N^1\ t = 20 - 2t$ $N^1(2) = 20 - 4 = 16$
At t = 2, the student in learning at a rate of 16 terms/hour.

(5) $|x + y|^2 = |x|^2 + |y|^2 + 2\ |x|\ |y| \cos ø$
$|x - y|^2 = |x|^2 + |y|^2 - 2\ |x|\ |y| \cos ø$
$|x + y|^2 + 30^2 = 2(11)^2 + 2(23)^2$
$|x + y| = 20$




***Tutorial 256*** **Questions**

(1) Five dozen oranges were purchased at $1.32 per dozen and sold at 3 oranges for 35 cents. What was the total profit? (For Grade 6 to 7)

(2) 900 People attended a dance. The cost of admission was $2.00 per person or $3.50 per couple. Twice as many $2.00 tickets as $3.50 tickets were sold. Find the amount of money obtained from ticket sales? (For Grade 7 to 8)

(3) A lawn roller with a mass of 50 kg is being pulled with a force of 320N. If the handle of the roller makes an angle of 42° with the ground, what horizontal componet of the force is causing the roller to move? (For Grade 12)

(4) For what values of K in $|(K - 2)V| < |4V|$, $V \neq 0$?

(5) Determine the real values of a, b and c for the quadrati c function $F(X) = ax^2 + bx + c$, $a \neq 0$, that satisfy the conditions F(0) = 0, Lim F(x) = 5. and lim f(x) = 8 x ——> -2 (For Grde 11 to 12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

**Tutoring**

***Tutoring for students from grade 3 to 12.***

Courses include: **Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English.** **Also tutoring available for University student.**



***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***

Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month **Location:** Near **Birchmount & Sheppard.**

For more information contact ***Kula*** (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at

**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

***Tutoring***

*(Markham & Lawrence, Scarborough)*

**Grade 1-12, College & University**

*English, French, Math, Science*

***High School:*** *English, French, Physics, Chemistry, Biology, Math (Data Management, Calculus, & Advanced Functions included)*

***College (all Years):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*

***University (1st Year):*** *English, French, Math, Physics, Chemistry, & Engineering Subjects*

**Call Liz/Beena at: *416 859 4492***

## கொழும்பில் நடைபெற்ற படுகொலைகளுக்கு கோட்டபாய ராஜபக்சதான் பொறுப்பு

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு படுகொலைகளுக்கும் பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்சதான் பொறுப்பென மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை பயங்கரத்தின் உண்மையான முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. படுகொலையாளிகள் பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்சவின் கீழேயே செயற்பட்டு வந்துள்ளனர் என்பதை தமக்கு கிடைத்த தகவல்கள் உறுதியாகத் தெரிவிப்பதாகவும் அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. தமக்குக் கிடைத்த உறுதியான தகவல்களை இன்னொரு சுயாதீனமான தகவல் மூலத்தின் மூலம் தாம் உறுதிப்படுத்தியதாகவும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. உதாரணமாக புலனாய்வுத்துறையில் உள்ள வசந்தவுடன் பிள்ளையான் குழுவினருக்கு இருந்த தொடர்பு, அவர்களுடைய பி.என்.எம். தொடர்பு போன்றன.

புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இரண்டு முக்கியமான உறுப்பினர்கள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்சவுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணிச் செயற்பட்டு வந்துள்ளனர். ஒருவர் திருகோணமலையைத் தளமாகக் கொண்ட கடற்படையைச் சேர்ந்த கமால்தீன். மற்றவர் இராணுவத்தின் கெமுனுபடைப்பிரிவின் கட்டளை அதிகாரி தென்னக்கோன். இவர் வெலிக்கந்தவைத் தளமாகக் கொண்டவர்.

கருணா குழு, ஈ,பிடிபி ஆகியவற்றிலிருந்த கொலையாளிகளுடன் தொடர்பையும், அவர்களுக்கான உத்தரவுகளையும் பிறப்பித்து வந்தவர் சம்பத் எனப்படும் முன்னாள் கடற்படை புலனாய்வு அதிகாரி. இவர் கமால்தீன் மற்றும் வசந்த ஆகியோரின் கீழ் செயற்பட்டு வந்தார்.

இந்தப் பயங்கரம் மூன்று தளங்களில் இடம்பெற்றுள்ளதாக நாம் வகைப்படுத்தலாம். மிகக் கீழ் மட்டத்தில் கருணா குழுவினர், ஈபிடிபி உறுப்பினர்கள், முஸ்லிம் துணை இராணுவக்குழுக்கள், மற்றும் விடுதலைப் புலிகளிலிருந்து வெளியேறியோர் ஆகியோரைக் கொண்டு நடாத்தப்பட்டது.

இரண்டாவது தளத்தில் ஜாதிக ஹெல உருமய, பி என் எம் எனப்படும் தாய்நாட்டைப் பாதுகாக்கும் இயக்கம், மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டவை. மூன்றாவது இவர்களுடன் தொடர்புபட்ட ஒரு மூன்றாவது அணியால் நடாத்தப்பட்டவை. இதனை தேவைக்கெற்ப இரண்டாவது அணியினர் கையாண்டு கொண்டனர்.

கோட்டபாய ராஜபக்சதான் ரவிராஜ், கொல்லப்படக் காரணமாக இருந்திருக்கிறார் என்பதை மேற்படி சூழ்நிலைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மக்கள் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளை முடக்குவதே அதன் உடனடியான இலக்காக இருந்தது. கடத்தல்கள், காணாமல் போதல்கள், படுகொலைகள், கப்பம் வாங்குதல் என்பன கோட்டபாய ராஜபக்சவின் கோஸ்டியினரால் மூடி மறைக்கப்படுவதை கண்காணிப்புக்குழுவின் அறிக்கை வெளிப்படுத்தி இருந்தது. அது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நாற்றமெடுப்பதை அம்பலப்படுத்தியது. கண்காணிப்பக்குழுவின் இந்நடவடிக்கைகள் ஜனாதிபதிக்குப் பொறுக்க முடியாதவையாக இருந்தன. ஜனாதிபதியின் கீழ் இருந்த பாதுகாப்பு அமைச்சை அவருடைய இளைய சகோதரரான கோட்டபாயவே நடாத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் இலக்கு வைத்துக் கடத்தப்பட்டுப் பின்னர் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு காணாமல் போனவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டிக் கொண்டிருக்கிறது. கொலையாளிகள் பாதுகாப்பு அமைச்சுடன் மிக நெருக்கமாகவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஊடகப் பணியாளர்கள் பலரைக் கொன்றிருக்கிறார்கள்.

முக்கியமான பத்திரிகையின் பெண் ஆசிரியாரை கருணா குழுவினரைக் கொண்டு அச்சுறுத்திய பாதுகாப்பு செயலாளரை ஜனாதிபதி விடாப்பிடியாக தொடர்ந்து பணியில் வைத்திருக்கிறார்.

ஏற்கெனவே சொல்லப்பட்ட மோசமான நிலைமைகைளில் இருந்து பாதுகாப்பு அளிக்கக்கூடிய உண்மையான அர்த்தத்திலான பாதுகாப்பு செயலாளர் அல்ல அவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியாபார நிறுவனம்....

**05ஆம் பக்கத்தொடர்ச்சி**

மதிப்பீடு செய்யும் ஆற்றலையும், வேலை தொடர்பாக தேவையான மாற்றங்களை புகுத்தவும் அனுமதியளிக்கப்படு கின்றது. இதன்மூலம் வேலைதொடர்பான திருப்தி, ஊக்கம் என்பன அதிகரிக்கப்படுகின்றது.

வேலையினை விரிவாக்கல் (Job Enlargement) - அதாவது ஊழியர் ஒருவர் தனது வேலை தொடர்பாக பல்வேறு வகையான தொடர்புடைய செயற்பாடுகளை அதிகரிப்பதாகும். அதன் மூலம் தனது வேலை தொடர்பாக கூடியளவு முதிர்ச்சியி னை (Job Maturity) பெற்றுக் கொள்வதுடன் திருப்தியினையும், ஊக்கத்தினையும் அதிகரிக்கக்கூடியதாக விருக்கும்.

வேலைச் சுழற்சி (Job Rotation) - அதாவது ஒரே வேலையினை தொடர்ந்து மேற்கொள்ளும் போது சலிப்பு ஏற்படுகின்றது. இக்குறைபாட்டை நீக்கும் பொருட்டு குறிப்பிட்ட கால இடைவெளி களில் ஒரு ஊழியரை ஒரு வேலையில் இருந்து இன்னொரு வேலைக்கு மாற்றுவதனைக்குறிக்கும். இதன் மூலம் சலிப்பினை நீக்கி வேலைத்திருப்தி, ஊக்கம் என்பவற்றை அதிகரிக்கமுடிகின்றது.

ஆனால் வேலைச் சுழற்சியின்போது சகல செயற்பாடுகளிற்கும் வேண்டப்படும் திறன்கள் (Skills) ஊழியர்களிடத்தில் ஒத்ததாகக் காணப்படுதல் அவசியமாகும். வேறுபட்ட திறன்களில் வேலைச்சுழற்சியை நடைமுறைப்படுத்த முடியாது.

வேலை நேரத்தில் நெகிழ்வுத்தன்மை (Flexible Working Hours) - அதாவது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நேரவரையறைக்குள் ஊழியர் தாமாகவே தமது வேலையினை ஆரம்பித்து முடிக்கும் நேரத்தை தீர்மானித்துக் கொள்வதைக் குறிக்கும். இதன் போதும் வேலைத்திருப்தி, ஊக்கம் அதிகரிப்பதுடன் நிறுவனத்தின் உற்பத்தியும் அதிகரிக்கின்றது.

செயற்றிறன் அடிப்படையிலான சம்பளம் (Performance Based Remuneration) - அதாவது குறிப்பிட்ட காலஇடைவெளிகளில் ஊழியர்களின் செயற்றிறனை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதைக் குறிக்கின்றது. இதனால் திறமையான ஊழியர் கூடுதலான சம்பளத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படுவதுடன், வினைத்திறனும் அதிகரிக்கப்படுகின்றது.

ஊழியர்களை உடமையாக்கல் (Employee Ownership) - ஊழியர்களை நிறுவனம் உடமையாளராக்குவதன் மூலம் உரிமையாளர் என்ற உணர்வை ஏற்படுத்தி அதனூடாக திருப்தி, ஊக்கம் என்பவற்றை அதிகரிக்கலாம். உடமையாளர் என்ற அந்தஸ்தினைப் பெறுவதால் இலாபத்தில் பங்கு கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இலாபம் பெறும் பொருட்டு ஊழியர் கடுமையாக உழைப்பார்கள். ஊழியர்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலம் நிறுவனம் ஊழியர்களை தனது உடமையாக்கிக்கொள்கின்றது.

பொதுவாக நிறுவனங்கள் வேலை தொடர்பான இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் ஊழியர்களை ஊக்கப்படுத்துகின்றது. வேலை தொடர்பான இலக்குகள் முகாமையாளர் அல்லது உரிமை யாளரால் நிர்ணயிக்கப்படலாம். அது மாத்திரமன்றி முகாமையாளருடன் அல்லது உரிமையாளருடன் ஊழியர்களை இணைத்தும் வேலை இலக்குகளை நிர்ணயித்துக்கொள்ளலாம். இலக்குகள் நிர்ணயித்துக் கொள்ளப்பட்டதும் ஊழியர்கள் கடுமையாக உழைப்பர். இது அவர்களுடைய ஊக்கத்தினை அதிகரிப்பதுடன் இலக்குகள் அடையப்படும் போது திருப்தியும் அடைவர்.

ஊழியர்களை ஊக்குவிப்பது தொடர்பாக நிறுவன உரிமையாளர் அல்லது முகாமையாளர் பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளவேண்டும்.

- ஊழியர்கள் ஒவ்வொருவரும் பௌதீகரீதியாகவும், உளரீதியாகவும் வேறுபட்டவர்கள். அவர்களுடைய தேவையினை அறிதல்.
- ஊழியர்கள் ஒவ்வொருவரும் நிறுவனத்தைப் பொறுத்து முக்கியமானவர்கள் என்பதனை அவர்களுக்கு உணர வைத்தல் வேண்டும். நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு ஊழியர் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு அவசியம் என்பதனை உணரவைத்தல் வேண்டும்.
- ஊழியர்களையும் தீர்மானம் எடுப்பதில் பங்குகொள்ள வைத்தல் வேண்டும்.
- ஊழியர்கள் வேலையைச் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு போதியளவு சுதந்திரம் மற்றும் அதிகாரக் கையளிப்பினை வழங்குதல் வேண்டும்.
- ஊழியர்களுக்கு கட்டளை இடுவதனைக்காட்டிலும் அவர்களை வழிநடத்தல் வேண்டும்.
- ஊழியர்களின் கருத்துக்களை அவதானமாகக் கேட்டல் வேண்டும்.
- ஊழியரின் செயற்றிறனை அளவீடுசெய்து பின்னூட்டியினை வழங்குதல் வேண்டும்.
- ஊழியர்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுதல் வேண்டும்.
- ஊழியர்களிடத்தில் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.
- தங்கள் கீழ் பணிபரிபவர்களுக்கு தாம் ஓர் முன் உதாரணமாக விளங்குதல் வேண்டும்.

முடிவாக நிறுவனங்களில் ஏற்படும் பல்வேறு வகையான முகாமைத்துவப் பிரச்சனைகளுக்கு ஊழியர்களின் ஊக்கமின்மையும் ஒரு காரணமாக அமைகின்றது. உரிமையாளர் அல்லது முகாமையாளர் ஊழியர்களை சரியான முறையில் ஊக்கப்படுத்துவதன் மூலம் ஊழியர்களது வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதுடன் நிறுவனத்தின் இலாபமீட்டும் நோக்கத்தினையும் இலகுவாக அடைந்து கொள்ள முடிகின்றது.

சிறு முதலீட்டுடன் கூடிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் எம்மவர்கள் தமது நிறுவனங்களில் கடமைபுரியும் ஊழியர்களின் ஊக்குவிப்புத் தொடர்பாக சகல முகாமைத்துவக் கோட்பாடுகளையும் நன்கு விளங்கிக்கொள்வதனூடாக ஊழியர்களை சரியான முறையில் ஊக்குவித்து அதன் மூலம் தமது இலாபத்தை ஈட்டிக் கொள்வதுடன், போட்டி மிகுந்த வியாபார சந்தை நடவடிக்கையில் நீடித்து நிலைத்திருக்கவும் முடியும்.


**VM CAKE HOUSE ALL YOUR CAKE ORDER**

உங்கள் மகிழ்ச்சியில் எங்களையும் இணைத்திட உங்கள் சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்றவகையில் Birthday cake, wedding cake, rich cake with box மற்றும் பலவிதமான cake வகைகள் செய்து தரப்படும். Short eats, sweets with delivery.

**416.854.8354 / 416.686.3955**



**Guitar Lesson Classes**
**கிட்டார் வகுப்புக்கள்**

பாடசாலைக்கு போய் வந்த பின்பும் விடுமுறை நாட்களிலும் உங்கள் பிள்ளைகள் தங்கள் பொழுதை பயனுள்ளதாக செலவிட அழையுங்கள். திறமை வாய்ந்த ஆசிரியர் வினோத்: **416.444.3402**

*After school & On weekends let your children enjoy their time effectively & wisely call for guitar classes. vinoth: 416.444.3402*



**APARTMENTS FOR RENT**



**$250 Move In Bonus**

*Best Building in Scarborough!*
*Clean, family building, FREE parking.*
*Close to schools, bus stop, Tamil store in building.*

**Pl. Call: 416.264.2818**



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# திரை விமர்சனம் - தமிழ்ப்படம்

ஹாலிவுட்டில் வெற்றி பெற்ற பெரிய நடிகர்களின் திரைப்படங்களை, அதன் நடைமுறைக்கு ஒவ்வாத காட்சிகளை நையாண்டி செய்து உருவாக்கப்படும் படைப்புகள் என்று ஒரு தனி வகை இருக்கிறது. உலகம் முழுக்க அந்த வகை பகடி திரைப்படங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அந்த அம்சத்தை, தமிழிலும் அவ்வப்போது சில திரைப்படங்களில் நகைச்சுவை காட்சிகளில் புகுத்தியிருக்கிறார்கள். 'கஜினி' தோற்றத்தில் நடிகர் சத்யராஜ் வருவது போன்ற சில காட்சிகளைச் சொல்லலாம். இதையே ஒரு முழுமையான தொலைக்காட்சித் தொடராக செய்த, 'விஜய் டிவியின் 'லொள்ளு சபா'வுக்கு மகத்தான வரவேற்பு கிடைத்தது. ஆனால், முழுக்க முழுக்க தமிழ் திரைப்படங்களை நையாண்டி செய்து எடுக்கப்பட்ட ஒரு முழு நீள திரைப்படம் என்று எதுவும் கிடையாது. அந்த வகையில் 'தமிழ்படம்' தமிழின் முதல் பகடி திரைப்படம்.

பகடி திரைப்படங்களின் முக்கிய அம்சமே, ரசிகர்களை மட்டுமல்ல, எந்தத் திரைப்படத்தை அல்லது நடிகரை நையாண்டி செய்கிறோமோ அந்தப் படத்தின் படைப்பாளி, நடிகர் பார்த்தாலும், அவரையும் மனதாரா சிரிக்க வைக்கவேண்டும். மாறாக, அவர்களை வருத்தப்பட வைக்கக்கூடாது. அதை இதில் சரியாகவே செய்திருக்கிறார்கள். ரஜினி, கமல், விஜய், சிம்பு, விஜயகாந்த் இப்படி தமிழ் திரையுலகின் எல்லா பெரிய நடிகர்களையும் வகைதொகையில்லாமல் சகட்டு மேனிக்கு நக்கல் செய்திருந்தாலும் எதுவுமே புண்படுத்தும் வகையில் இல்லாமலிருக்கிறது.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

தமிழ் திரைப்படங்களின் வழக்கமான '.'.பார்மூலா'தான். ஒரு அறிமுக 'போற்றி போற்றி' பாடல், இரண்டு டூயட், ஒரு குத்துப் பாட்டு, ஒரு எழுச்சிப் பாடல், ஆங்காங்கே குறிப்பிட்ட இடைவெளியில் சண்டை காட்சிகள், நகைச்சுவை, தமிழ் தெரியாத கதாநாயகி, கதாநாயகனின் வயதான 'இளம் புதிய தலைமுறை' நண்பர்கள், நாயகியின் வில்லன் அப்பா... ஆனால், இதை எடுத்திருக்கும் விதத்தில் படம் முழுக்க சிரிச்சு கைதட்டி பார்க்க வைத்திருக்கிறார்கள்.

சினிமாபட்டி கிராமத்து இளைஞர்கள் பட்டினத்துக்கு போய் நடிகராகி, அடுத்த முதல்வர் நான்தான் என அறிக்கை விடுவதால் அந்த கிராமத்தை ஆட்சியாளர்கள் ஒதுக்குகின்றனர். இதனால் பஞ்சாயத்தை கூட்டி ஆண் குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் ஊற்றி கொல்லும்படி நாட்டாமை தீர்ப்பு சொல்கிறார். கள்ளிப்பாலில் இருந்தும் தப்பினால், அவர்களை 'விரல்' நடிகர் (சிம்பு?) நடித்த படத்தை நூறு தடவை பார்க்க வைக்குறது தான் தண்டனை. அது மட்டுமில்லாமல் அவர்கள் கூட யார் பேசினாலும் அவங்களை தமிழ்நாட்டை விட்டே ஒதுக்கி வைக்கவேண்டும். நாட்டாமைக்காரரான பெரியார்தாசனுக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அதற்கும் கள்ளிப்பால் கொடுக்கும்படி தீர்ப்பு சொல்லுகிறார். அந்தக் குழந்தைக்கு கள்ளிப்பால் கொடுத்து கொல்லப்போகும் பாட்டி பறவை முனியம்மாவிடம், அந்த குழந்தை, "பாட்டி பாட்டி என்ன கொன்னுடாத என்ன நீ கூட்ஸ் வண்டியில எத்தி விட்டுடு... நான் சென்னைக்கு போயி பெரிய ஹீரோவா ஆயிடுறேன்" என்று சொல்கிறது. உடனே பாட்டி, "ஏப்பா கூட்ஸ் வண்டி சென்னைக்கு தான் போகும்னு உனக்கு எப்படி தெரியும்?"னு கேட்கிறாள். அந்த குழந்தை, "அட எத்தனை படத்துல காட்டுறாங்க கிராமத்துல இருந்து போற எல்லா கூட்ஸ் வண்டியும் சென்னைக்கு தான் போகுதுன்னு..." என்கிறது.

குழந்தையின் வேண்டுகோளை ஏற்று அதனை பட்டினத்துக்கு கடத்தி வந்து வளர்க்கிறார் பாட்டி. சென்னைக்கு வந்ததும், மார்க்கெட்டில் மாமூல் வாங்கும் ஒரு கும்பலின் அக்கிரமத்தைப் பார்க்கிறான். அவனால் தாங்க முடியவில்லை. ரவுடிகளை பார்த்து ஆவேசமாகும் சிறுவன், "பாட்டி நான் எப்ப பெரியவன் ஆகி இவர்களை தட்டிக் கேட்பது" எனகிறான். உடனே பாட்டி, "சைக்கிளில் ஏறி பெடல்போடு" எனச் சொல்ல, பெடலை சுற்றி முடிப்பதற்குள் சிறுவன் வளர்ந்து சிவாவாகிறார். அந்த அக்கிரமக்காரர்களை அடித்து நொறுக்குகிறான். அதுவரை அதே டிரஸ்ஸுடன் லூட்டி அடித்தபடி இருக்கும் ரவுடிகளிடம் இருந்து சிறு வியாபாரிகளை காப்பாற்றுகிறார். உடனே பாடல். தொடர்ந்து அநீதிகளை தட்டிக்கேட்டு மக்கள் மத்தியில் பெரிய கதாநாயகனாகிறார். அவருக்கு கட்-அவுட் வைத்து அடுத்த முதல்வர் என்று கொண்டாடுகிறார்கள். வில்லன்களை தேடிப்பிடித்து தீர்த்துக் கட்டுகிறார்.

இடையிடையே காதல். ஆனால், "நீ வெறும்பய, நான் கோடீஸ்வரன். அதனால எம் பொண்ணை உனக்கு கட்டி குடுக்க முடியாது" என்று கதா நாயகின் அப்பா சொல்ல, உடனே கதாநாயகன், "நானும் நெறைய சம்பாதிச்சி உங்க பொண்ணை கட்டிக்கிறேன"னு சவால் விட்டுட்டு, பால் பாக்கெட் போடுறது, பேப்பர் போடுறது, துணி அயன் பண்ணுவது, கோவில் தேங்காய் உடைக்கும் போது சில்லறை பொறக்குறது... இப்படி எல்லா வேலையும் செய்து பெரிய பணக்காரன் ஆகி, கூகிள் மேப்புல அவரோட சொத்துகளை காட்டுகிறார்.

ஒரு கட்டத்தில் சிவா போலீஸ் அதிகாரி என்பதும், அவர் நடத்திய கொலைகள் திட்டமிட்ட என்கவுண்டர் என்றும் முடிச்சு அவிழ்கிறது. படம் முடிகிறது



முழு திரைப்படமும், ஏற்கெனவே தமிழ்த் திரைப்படங்களில் நாம் பார்த்து ரசித்த காட்சிகள்தான். ஆனால், அதை அவர்கள் காட்டியிருக்கும் விதம் அருமை. ஒவ்வொரு காட்சியிலும் இது எந்தப் படத்திற்கான கிண்டல் என்று நம்மைத் தேட வைத்துவிடுகிறார்கள். அவ்வளவு சுவாரஸ்யம். பக்காவான ஒரு காமெடி படம்னா அது இதுதான் என்று தைரியமாகச் சொல்லலாம். முதல் காட்சி தொடங்கி, கடைசிக் காட்சி வரைக்கும் உங்க வயிறு குலுங்க சிரிக்க வைத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் தமிழ்ப் படங்களில் சென்னை வந்துவிட்டது என்பதைக் காட்டுவதற்கு, சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனை காட்டுவார்கள். இதில், கதாநாயகன் சென்னைக்கு வந்ததைக் காட்ட - எழும்பூர் ரயில் நிலையத்தைக் காட்டுகிறார்கள். அப்போது கேமரா முன் ஒரு ஆட்டோக்காரர் வந்து, "ஆ... ஊ... ன்னா சென்ட்ரலுக்கு முன்னாடி கேமிராவ வச்சிருவியே, மெட்ராச காமிக்கணும்னா என் வூடு இல்லீயா, கூவம் இல்லீயா, மொதல்ல அத காட்டு..." என்று கத்துகிறார். இனி இயக்குநர்கள் அந்த இடத்தில் கேமரா வைப்பார்களா என்பது சந்தேகமே!

வில்லனின் ஆட்கள் விரட்டி வர சுரங்க பாதை யில் சிக்கிக் கொள்ளும் கதாநாயகன் சிவா, எப்படி தப்பிப்பாரோ என்று நாம் எதிர்பார்த்திருக்க, இடைவேளை வந்துவிடுகிறது. மீண்டும் படம் தொடங்கும்போது சட்டைப் பையில் வைத்திருக்கும் ஒரு சின்ன மருவை எடுத்து முகத்தில் ஒட்டிக்கொண்டு எதிர்திசையில் நடந்து, வில்லன் ஆட்களை கடந்து செல்கிறார் சிவா. வில்லன் கோஷ்டிக்கும் தெரியவில்லை, வேண்டப்பட்ட காதலிக்கும் தெரியவில்லை. இது சிவாதான் என்று.

தன் அப்பாவை தேடி சொந்த ஊருக்கு போகும் சிவாவிடம், "பெத்த அப்பனே புள்ளைகிட்டே இப்படி கேட்க கூடாது. உன் பேரு என்னப்பா?" என்கிற பெரியார் தாசனிடம், "என் பேரு சிவா. ஆனா என்னை வைஸ் கேப்டன், அகில உலக சூப்பர் ஸ்டார், புதிய தளபதின்னெல்லாம் கூப்பிடுவாங்க" என்று சொல்கிறார் சிவா. உடனே, "அதுக்காகதான் உனக்கு அப்பவே கள்ளிப்பால் கொடுத்து கொல்ல சொன்னேன்" என்கிறார் பெரியார்தாசன்.


இப்படி படம் முழுக்க தமிழ் திரைப்படங்களின் 'நடைமுறைக்கு ஒவ்வாத' சமாசாரங்களை பகடி செய்யும் வேலை முதல் காட்சி தொடங்கி கடைசி காட்சி வரைக்கும் நீடிக்கிறது. அப்பாவைத் தேடிப்போகும் கதாநாயகனின் குடும்பப் பாடலாய் ஒரு பாடலைப் போடுகிறார்கள். திரையரங்கம் அடங்க மறுக்கிறது. அவ்வளவு கைதட்டல், விசில் சத்தம்.

கதாநாயகனாக ரேடியோ மிர்ச்சி ஜாக்கி சிவா நடித்திருக்கிறார். திரைக்கதை அவருக்காகவே எழுதின மாதிரி அவ்வளவு பொருத்தம். சிவாவைத் தவிர வேறு யாரும் இந்த பாத்திரத்துக்கு பொருந்துவார்களா என்பது சந்தேகமே. பெரிய நடிகர்களின் அலட்டலை தன் அலட்டாத நடிப்பில் காண்பித்து பின்னி எடுத்திருக்கிறார். அத்தனை நடிகர்களையும் துணிச்சலாக வாரியுள்ளார். வெண்ணிற ஆடை மூர்த்தி, எம்.எஸ்.பாஸ்கர், மனோபாலா இவர்கள் மூவரும்தான் கதாநாயகனின் 'இளம்' நண்பர்களாம், யூத்தாம்! இவர்களுக்கு அதிகம் வசனங்கள் இல்லாவிட்டாலும், இவர்கள் சும்மா வந்து நின்னாலே அரங்கம் களேபரமாகிறது. அதிலும் மூர்த்தி வாயை திறக்கும் போதெல்லாம் ஒரு கிராபிக்ஸ் காகம் எச்சமாபிஷேகம் செய்வது நல்ல தமாஷ்.

இயக்கம் அமுதன். இவரிடம் இருந்து எதிர்காலத்தில் தமிழ் திரையுலகம் நிறைய எதிர்பார்க்கலாம். அவ்வளவு நிறைவாக செய்திருக்கிறார். வசனம். கே. சந்துரு, மிகுந்த சிரத்தையோடு எழுதியிருக்கிறார். கண்ணனோட பின்னணி இசையும் சரி பாட்டுகளும் சரி ரொம்ப அழகாக வந்திருக்கின்றன. பல பாடல்களில் இடம் பெற்ற அர்த்தமில்லாத வார்த்தைகளை கொண்டே அற்புதமான பாடல் ஒன்றை உருவாக்கியிருக்கிறார். 'ஒ மகசியா...' என்பதற்கு ஏதோ அர்த்தம் இருப்பது போல சிவா - தீபா பாண்டே ஜோடி கொடுக்கும் பாவனைகள் அற்புதம்.

முதலில் இந்தப்படத்துக்கு 'தமிழ்படம்'னு பெயர் வைத்திருந்தார்கள். இந்தப் படத்தின் பத்திரிகையாளர்கள் அறிமுக கூட்டத்தில், தயாரிப்பாளர் தயாநிதி அழகிரியிடம், "உங்க தாத்தாவை எல்லாரும் தமிழினத் தலைவருன்னு கூப்புடுறாங்க. அவரோட பேரன் நீங்க படத்தோட தலைப்பை தப்பா வெச்சிருக்கீங்களே" என்று நிருபர் கேட்க, அதன்பிறகு 'ப்' சேர்த்து 'தமிழ்ப்படம்' என்று வைத்திருக்கிறார்கள்.

தமிழ்ப்படம் - நக்கல் வெடி, நையாண்டி திருவிழா.




# ஆசையை விட்டால் ஆனந்தம் பெருகும்

**ஆசையே அலைபோல நாமெலாம் அதன்மேலே ஓடம் போல ஆடிடுவோமே வாழ்நாளிலே.**

ஆசைகள் அலைபோல அடுத்தடுத்து ஏற்படும். அவற்றிலே சிக்கி, ஆழ்ந்து தவித்து மனிதன் அல்லல் படுகின்றான். ஆசை ஒன்று நிறைவேற மற்றொரு ஆசை உடனடியாக ஏற்படும். அது சங்கிலித் தொடர் போன்றது. மனிதன் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணம் ஆசையேயாகும். ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம் என்பது திருமூலர் திருவாக்கு. எனவே துன்பத்திற்குக் காரணம் ஆசையேயாகும். மனது தான் ஆசைக்கு காரணம். மன்மதன் ஆசைகளின் தெய்வம். மனதில் ஜனிப்பவன் ஆனதால் அவனுக்கு மன்மதன் என்று பெயர். அவனுக்கு காமன் என்ற பெயரும் உளது. ஆசைதான் பிறப்பின் வித்து. எனவேதான் 'ஆசை பிறப்பீனும் வித்து' என்றார் வள்ளுவர்.

மன்மதனுடைய ஆயுதங்களான கரும்பு வில், தாழம்பூ, உடைவாள், மலர்களான பஞ்சபாணங்கள் இவையாவும் மிகவும் பலவீனமானவை. இந்தப் பலவீனமான ஆயுதங்கள் எத்துணை பலசாலிகளையும் வீழ்த்திவிடும். அரசர்கள், அரசியல் தலைவர்கள் விளையாட்டு வீரர்கள், குத்துச்சண்டை பயில்வான்கள், சாதனையாளர்கள், சாதாரணமனிதர்கள் எல்லோரையும் கவிழ்த்தது காமமேயாகும். மன்மத லீலையை வென்றார் யாருளர்? மாயமான் மீது சீதை கொண்ட ஆசையினால் தான் இராமாயணம் உருவானது. சீதை மீது கொண்ட மோகத்தால் இராவணன் அழிந்தான். நமக்குள் ஆசை இருக்கலாம். ஆனால் நாம் ஆசைக்குள் சிக்கிவிடக்கூடாது. இதையே பகவான் இராமகிருஷ்ணர் 'தண்ணீரில் படகு இருக்கலாம். ஆனால் படகில் தண்ணீர் இருக்கக் கூடாது' என்று வற்புறுத்தினார். ஆசைக்கு நாம் அடங்கி இருந்தால் கதை முடிந்து விடும். அதனால் அருணகிரிநாதர்.

பேராசை என்னும் பிணியில் பிணிபட்டு
ஓராவினையேன் உழலத் தகுமோ
என்று பாடினார்.



ஆசையின் கொடுமையே அதை அடையும்வரை ஆர்வம் இருக்கும். அடைந்ததும் நிறைவு வராது. இன்னொன்றின் மீது ஆர்வம் ஊட்டி எது கிடைக்கவில்லையோ அதற்காக ஏங்க வைக்கும். 'அகிலமெலாம் கட்டி ஆளினும் கடல் மீதும் ஆணை செலுத்தவே விரும்புவர்' என்பதிலிருந்து ஆசைக்கு அளவேயில்லை என்பது விளங்கும். ஆசைகள் அளவு கடக்கும் போது எதிலும் நிறைவு கிடைக்காமல் தடுமாறுகின்றோம். எனவே தான் 'பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்' என்று பாடினார் திருஞானசம்பந்தர். புலனடக்கம் கடைப்பிடித்தால் பேரானந்தநிலையை எய்தலாம் என்பதே அருளாளர் வாக்கு.

மனிதனுடைய ஆசைகள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என மூவகைப்படும். இவற்றுள் பெண்ணாசை மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானதாகும். பெண்ணாசை விலங்குகளுக்கு அது ஒரு உடல்சார் பிரச்சினை. ஆனால் மனிதனுக்கு மட்டும் தான் அது மனதையும் அறிவையும் கெடுத்து விடுகின்ற பிரச்சினையாக ஆகிவிடுகின்றது. மனிதனுடைய மண்ணாசையும் ஆச்சரியமானது. கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் உனக்கு என்று ஒருவர் சொன்னாலும் கடல் யாருக்கு என்று கவலைப்படுபவர்களும் உண்டு. எல்லைக்கதியாலை ஓர் அங்குலம் அடுத்தவன் காணியில் அகட்டி வைத்து மண் ஆசையை வலுக்கட்டாயமாக்குபவர்களும் உண்டு. பொன்னாசை பெண்களுக்குத்தான் அதிகம் உண்டு. பொன் ஆபரணங்களின் சுமைதாங்கிகளாக அவர்கள் ஆகி விடுகின்றார்கள். அது அந்தஸ்திற்கும் அறிகுறியாகவும் அமைந்து விடுகின்றது.

துன்பங்களுக்கு ஆசையே காரணமாகின்றது என்றாலும் அதை விட்டொழிப்பது எளிதல்ல. இதற்குத்தான் மௌனவிரதம், உண்ணாவிரதம் என்பவற்றையெல்லாம் பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள். இவற்றை இறை உணர்வுடன் படிப்படியாக அதிகரிக்கும் போது ஆசைகள் குறையும். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக மலரும்.

ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள் என்று கூறப்பட்டாலும் இவற்றால் ஆப்பிழுத்த குரங்கு போல அல்லல்படுகின்றான் ஆறறிவு படைத்த மனிதன்.



**நா. க. சிவராமலிங்கம்**

# கனடாவில் தங்கள்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

தொலைபேசி - ***416.226.4500***
அல்லது ***1.800.943.6002***
தொலைநகல் - ***416.226.3208***
இணையதளம் - ***www.OMVIC.ON.CA***

இந்நிறுவனம் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள சுமார் 8800 அரச அனுமதிபத்திரம் பெற்ற வாகன விற்பனையாளரின் செயல்பாடுகளை கண்காணித்து வருகின்றது.

இவ்விசாரணை மன்றத்திற்கு முறைப்பாடுகளை முன் எடுக்கும் போது சகல தேவையான பத்திரங்களையும் சாட்சிக்குரிய ஆதாரமாக (Complaint Support Documents) இணைத்து வழங்கினால் மட்டுமே முறைபாட்டினை சாதகமாக நிரூபிக்க கூடியதாக இருக்கும்.

திருட்டு வாகனங்களை விற்பனை செய்பவர்கள் தொடர்பான சந்தேகங்கள் இருந்தாலும் இங்கு முறைப்பாடு செய்யலாம்.

வாகனம் வாங்கும் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்பட்டு அது சரியாக நிரூபிக்கப்படும் போது பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்க என ஒரு 'நட்ட ஈட்டு நிதியம்' (Compensation Fund) இந்நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது.

ஆகக் கூடுதலாக $45,000 டொலர் வரை பாதிப்புகளுக்கு ஏற்றமாதிரி நட்டஈடு இந்நிறுவனத்திலிருந்து பெறலாம்.

ஆனால் அனுமதிபத்திரம் பெற்ற வாகன விற்பனையாளரிடமிருந்து (License Car Dealer) வாகனங்களை வாங்குபவர்கள மட்டும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் நிரூபிக்கப்படும்போது தங்களின் இழப்புகளுக்கு மட்டுமே இந்நிதியத்திலிருந்து நட்டஈடு பெறலாம். தனிநபரிடமிருந்து வாகனம் வாங்கி ஏமாற்றப்பட்டால் இந்நிதியத்தில் நட்டஈடு பெற முடியாது.

தனிநபர் எவரிடமிருந்தேனும் வாகனம் ஒன்றினை பணம் கொடுத்து வாங்கும்போது அவர் பற்றிய பெயர், விபரங்கள், அடையாள பத்திரங்கள், எழுத்து மூல உடன்படிக்கைகள் இருந்தால் மட்டும் மேலே குறிப்பிட்ட மாதிரி சட்டரீதியாக வாகனம் பறிமுதல் செய்யப்படும் ஒரு நிலை ஏற்பட்டு நிரபராதியான நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டால் வேறு வழியில் அதாவது 'சிறு நட்டஈடு கோரும் நீதிமன்றம்' (Small Claims Court) மூலம் விற்பனை செய்தவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து பணத்தினை அறவிட முயற்சிக்கலாம். உடன்படிக்கை ஆதாரங்களும், ஆவணங்களும் கையில் இல்லையேல் சிக்கல்கள்.

ஆனால் பறிமுதல் செய்யப்படும் நிலையில் உள்ள வாகனம் திருடப்பட்ட வாகனமாக இருந்தால் எவரிடம் வாங்கினோம் என்ற அடையாளங்கள் ஆதாரமும் நிரூபிப்பதற்கு தயாராக இல்லையேல் பணம் கொடுத்து வாங்கிய வாகனத்தினையும் இழந்து குற்றவாளியாகவும் நிற்கும் நிலையினையும் எதிர்கொள்ளலாம்.

இப்படி அகப்பட்டவர்கள் கனடா வாழ்வில் ஏராளம் பேர் எதற்கும் ஜாக்கிரதை!


**வீடு, மனை, நிலம், வியாபாரம், வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க அழையுங்கள்**





**KESH DOSANJH** *M.A. ECON.*
Sales Representative

**Cell: 416-836-9530 Office: 416 - 321-6969**
**Email: kdosanjh@trebnet.com**

***HomeLife GTA Realty Inc.,*** Brokerage*
HOMELIFE HIGHER STANDARDS
***1711 McCowan Rd. #206, Toronto***
***145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666***
*Independently owned & operated

**கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது**

# The Hurt Locker

20ஆம் பக்கத்தொடர்ச்சி

விடயத்தைதான் விரும்புகின்றேன்". அடுத்த தடவை ஒரு வருட சுற்றில் மீண்டும் பாக்தாத் திரும்புகின்றார் சார்'



Mark Boal, என்ற பத்திரிகையாளர் ஈராக்கில் EOD யுடன் தங்கியிருந்த பொழுது பெற்ற அனுபவங்களின் தொகுப்பாக மலர்ந்துள்ளது இப்படம். மற்றொரு பத்திரிகையாளரான Chris Hedges ன் நாவலான War Is a Force That Gives Us Meaning ன் வாசகங்கள் "The rush of battle is a potent and often lethal addiction, for war is a drug படத்தின் ஆரம்பத்தில் காட்டப்படுகின்றன.

இப் படம் அமெரிக்க சிப்பாய்களின் பார்வையிலேயே படமாக்கப்பட்டுள்ளது. ஒரு காட்சி - வீதியோரத்தில் குண்டு. ஒரு சிப்பாய் அதனருகில் உள்ளார். காவலுக்கு நின்ற சிப்பாய்கள் வீதியோரத்து கட்டிடத்தில் ரிமோட் ஒன்றுடன் நிற்பதை அவதானிக்கின்றனர். ரிமோட்டை கீழே போடுமாறு சத்தம் போடுகின்றனர். அவரோ புன்னகைத்தவாறு அவர்களை பார்த்து கையசைக்கின்றார். சில செக்கனுக்குள் ரிமோட்டை அமத்த குண்டுகள் வெடிக்கின்றன. சிப்பாயின் உடல் சிதறுகின்றது. பார்வையாளர்களான எமக்கு சிப்பாய்களின் மேல் பரிதாபமே ஏற்படுகின்றது. படம் முழுவதும் அமெரிக்க சிப்பாய்களுக்கு எதிராக மக்கள் உள்ளதாகவே காட்டப்படுகின்றது. ஒரு காட்சியில் சிறுவர்கள் இவர்களை நோக்கி கல் எறிகின்றனர். மற்றொரு காட்சியில் பெண் ஒருத்தி சார்ஜன்ட் வில்லியம் ஜேம்ஸை துரத்துகின்றார். ஈராக்கிய மக்களின் புன்னகைக்கு பின்னால் குண்டுகள் உள்ளது போல் காட்டப்படுகின்றது. சிப்பாய்கள் மிகவும் கடினமான சூழலில் வாழ்வதாக காட்டப்பட்டுள்ளது. இப்படம் இளைஞர்களை நோக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சாகசங்களை விரும்புகின்றனர். கணினி விளையாட்டை போன்றது போர் இவர்களை கவருவதுடன் இனி வரும் காலங்களில் இந்த இளைஞர்களின் இராணுவ சேவை அமெரிக்காவிற்கு தேவை.

வியட்நாம் போரில் பணியாற்றிய இயக்குனர் ஒலிவர் ஸ்ரோன் தனது படங்களில் போரின் கோரங்களை பதிவாக்கியுள்ளார். இவர் சினிஸ்ரேட் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியின் ஒரு கேள்விக்கான பதில் இது.

'இப்படம் போர் ஒரு சக்தி. இது எமக்கு வாழ்விற்கான அர்த்தத்தை வழங்குகின்றது எனத் தொடங்கும் நூலில் இருந்து பெறப்பட்ட வாசகங்களில் இருந்தே தொடங்கப்படுகின்றது. போரைப்பற்றிய பார்வை ஒலிவர் ஸ்ரோனுக்கும், இப்படத்தின் இயக்குனர் Kathryn Bigelowக்கும் அதிகளவில் உள்ளது. மிகச் சிறந்த போரைப்பற்றிய படங்கள் அனைத்தும் போரை விமர்சித்துள்ளன. Battle of Allegires, Hambuger Hill, Platoon எனப் பல படங்கள் இவ் வரிசையில் இடம் பெறுகின்றன. இப்படம் வாழைப் பழத்தில் ஊசியை ஏத்துவது போல் ஈராக்கிய மக்களை போர்க் காவிகளாகவும், போர் விரும்பிகளாகவும் காட்டுகின்றது. அவ்வகையில் இது ஒரு பிராச்சாரப் படமே. இப்படம் அமெரிக்க அரசிற்கு போருக்கு ஆட்களை சேர்க்க உதவி புரியும்.

ஒஸ்கார் வெறும் சலசலப்பு என்பதற்கு இப்படம் மற்றொரு உதாரணம்

பிற் குறிப்பு
இப் படம் ஒஸ்காரின் இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. பரபரப்பாக பேசப்படும் மற்றொரு விடயம் கத்தரின் அவற்றார் இயக்குனர் ஜேம்ஸ் கமரோனின் முன்னால் மனைவி என்பதே.

2009ல் கவனிப்பாரற்று போன மற்றொரு படம் Paranormal Activity . ஒரு வீட்டில் இரவில் வரும் சபதங்களை வீடியோ கமராவில் பதிவாக்குகின்றனர். மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு பல லட்சங்களை லாபமாக பெற்ற படம் இது. கனடிய திரைப்பட கலைஞர்கள் நிச்சயமாக பார்க்க வேண்டிய படம். ஒரு வீடியோ கமராவால் சாதனை புரிந்துள்ளார்கள். இப்படத்தில் வரும் காட்சிகள் அச்சத்தை ஏற்படுத்தும் எனவே சிறுவர்களுக்கு ஏற்றதல்ல.



# வருது வருது Oscar வருது!

## Part 2

Hollywood பக்கம் இப்போது போய் வந்தீர்கள் என்றால், Oscar க்குப் பரிந்துரைக்கப்பட்ட நடிக, நடிகைகள் ஆங்காங்கே நின்று கொண்டு, "சொக்கா, ஜீசஸ், அல்லா அந்த Oscar எனக்கே கிடைக்கிற மாதிரி அருள் புரிய மாட்டியா?", என்று (நம் "திருவிளையாடல்" நாகேஷ் பாண-'யில்!) புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம்!



- கிறிஸ்ரி-

82 ஆவது 'Oscar Awards Ceremony", "படம்" காட்டப் போவது மார்ச் 07, 2010! 'Slumdog Millionaire' போன வருடம் 8 Oscar விருதுகளைச் சுருட்டிக்கொண்டு ஓடியதில் இருந்து தெற்காசிய மக்களின் பார்வையும் Oscar விருதுகளின் மேல், மேலும் பதிந்திருக்கிறது! முக்கிய காரணம் A.R. Rahman! (2 Oscar விருதுகள் "இசை"ந்து அவர் பக்கம் வந்ததில், இந்தியாவில் விடுமுறை விடாத குறை ஒன்றுதான்!)

சிறந்த பட விருதுக்காகப் போட்டியிடப் போகும் 10 படங்களில் இந்த வாரம் :

| | |
|---|---|
| The Blind Side | An Education |
| District 9 | Up in the Air |

பற்றி ஒரு பார்வை பார்த்து விடலாம்.

National Football League (NFL) விளையாட்டு வீரர் Michael Oher இன் ஆரம்ப கால வாழ்வை (உண்மைச் சம்பவங்களைப் பிரதிபலிக்கும்!), நம்மை வாழ வைக்கும் 'Feel Good Moive' தான் 'The Blind Side'. ஆபிரிக்க-அமெரிக்கரான Michael Oher, தன் பதின்ம வயதில் நடுங்கும் குளிரில் இருந்து தப்பிக்க பாடசாலை ஜிம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார். ஏன்? அவர் ஒரு வீடற்ற அநாதை. அவர் மேல் பரிதாபப்பட்டு "வழிமறித்துத்" தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள் வெள்ளை இன Tuhoys குடும்பத்தினர். அங்கேயே வளர ஆரம்பிக்கும் அவர், எப்படி அந்த வெள்ளை இன குடும்பத்தினரின் அன்போடு சங்கமித்து, புகழ் பெற்ற NFL விளையாட்டு வீரராக மாறுகிறார் என்பதே திரைப்படம். இன்னாய்யா, ரீலா விடுறீங்க... சினிமாவில் தான் இதெல்லாம் நடக்கும் என்பவர்களுக்கு, ஒரு மாற்றமாக உண்மைச் சம்பவத்தைச் சினிமாவாக எடுத்திருக்கிறார்கள்!

Michael Oher, Tuhoys குடும்பத்தினரின் மகனும் மகளும் போகும் பள்ளிக்கே அனுப்பப்படுகிறான். பள்ளியின் முகப்பில் ஒரு அருமையான பைபிள் வாசகம்:

"With man this is impossible, but with God all things are possible", படத்தின் ஆதார வசனமாகவும் இது அமைகிறது. இனங்களையும், நிறங்களையும் கடந்து அன்பு ஜெயிக்கிறது. படத்தில் 'Michael Oher' இன் வெள்ளை இன வளர்ப்பு அம்மா, Leigh Anne Tuohy வாக நடிப்பில் கலக்கி எறிபவர்(!) Sandra Bullock. சிறந்த நடிகைக்கான விருதுக்குப் போட்டியிடும் 5 நடிகைகளில் இவரும் ஒருவர்.

ஒரு காட்சியில், Michael Oher ஒரு (American) Foot Ball game இல் விளையாடிக்கொண்டிருக்கும், ஒரே ஒரு கறுப்பு இனத்தவராக இருப்பார். அதே game இல் விளையாடிக்கொண்டிருக்கும் வெள்ளை இனத்தவரின் தந்தை, Michael Oher இன் நிறத்தைக் குறித்துக் கிண்டல் செய்ய, விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் வளர்ப்பு அம்மா Sandra Bullock சிலிர்த்துச் சீறி, அவரின் வாயை அடக்குவது Class!

"16 வயதினிலே" பார்க்காத சினிமா ரசிகர்கள் குறைவு. அதில் ஸ்ரீதேவி, தான் காதலித்த டாக்டர் கிராமத்தை விட்டு வெளியேறும் போது ஓடிவந்து கண்ணீருடன், "உங்களுக்காகத்தானே என்னோட டீச்சர் ஆகும் கனவைக் கூட அழிச்சிட்டு, உங்க பின்னாடி வந்தேன்", என்று சொல்ல, டாக்டர் "குழந்தைத் Thanglish' இல், "இப்போ கூட நான் ரொம்ப like பண்ணுறது உன்னை இல்ல, உன்னோட 16 வயச" என்று பதிலளிப்பது "சரித்திரப் பிரசித்தி பெற்ற" காட்சி! இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்?, "உங்கள் கனவுகளை யாருக்காகவும் (காதலுக்காகக் கூட) விட்டுக் கொடுக்காதீர்கள்"! (தமிழ்ச் சமுதாயத்தில் பிறந்த நமக்கெல்லாம், எங்கே அது முடிகிறது?)

"அது சரி, Oscar க்கும் "16 வயதினிலே" படத்துக்கும் என்னய்யா தொடர்பு?", என்று தலையைச் சொறிந்து கொண்டு பலர் இருப்பீர்கள், இப்போது! நான் மேலே சொன்ன "சரித்திரப் பிரசித்தி பெற்ற" காட்சியை முழு நீளப் படமாக எடுத்தால், அதுதான் "An Education" படம்! பாருங்கள், ஒரு சிறந்த (கவனிக்க, ஒரு சிறந்த!) தமிழ்ப் படம் பார்த்த திருப்தி தரும்!

District 9, ஒரு "அரசியல்" படம் என்று சொல்லலாம்! அதை ஒரு 'Space Adventure'(Star Trek, Star Wars போன்ற படங்கள்) படம் என்று ஓடிப் போய்ப் பார்த்தவர்கள், பாதியிலேயே எழுந்து ஓடி விட்டதாகத் "தகவல்கள்" தெரிவிக்கின்றன! வேற்றுக்கிரகவாசிகள் (Aliens) பயணிக்கும் விண்வெளிக் கப்பல் (Space Ship) பூமிக்கருகே பழுதடைந்து விட, அந்த வேற்றுக்கிரகவாசிகளை மனித சமுதாயம் எப்படி, ஒரு பகுதியில் அடைத்து வைத்து மனித(!?) உரிமை மீறல்களுக்கும், பரிசோதனைகளுக்கும் உட்படுத்துகிறார்கள் என்பதே படம். ஆனால் இவையெல்லாம் எங்கோ, எப்போதோ, மனித சமுதாயத்தின் மேல் மனித (மிருக!) சமுதாயமே நடத்திய, நடத்திக் கொண்டிருக்கும் கொடுமைகள் தானே, என்று படத்தில் முழுவதுமே நினைவுபடுத்துவது தான் இயக்குனரின் வெற்றி!

'Up in the Air' பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள், "விளம்பரம்" பெப்ரவரி 15 இதழ் படியுங்கள். மொத்தத்தில் நீங்கள் 'Oscar Awards Ceremony' பார்க்க ரெடி! எனவே, March 07, 2010 மாலை, நீங்கள் சொல்ல வேண்டியது - Lights, Camera, Action - Oscar!


விற்பனையாகின்றது குறமகளின்

• கூதிர்காலக் குலாவல்கள்

• அகணிதன் அல்லது நதியின் பிழையன்று

என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்

தொலைபேசி இலக்கம்: 416.282.8059

**GTA Square - 5215 Finch Ave. E., #201**

**Middlaefield & Finch**

**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்

நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்




**சாரதிப்பத்திரம்**

**உத்தரவாதம்**

*Get your G licence through me.*

*If you fail G test, we will pay your test-booking fee.*

(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*

***Road test available in out cities***


Here to help you
If you're one of the Canadians hit hardest by the economic downturn, Canada's Economic Action Plan has real benefits for you.
• New funding for skills upgrades
• Access to on-the-job experience
• Help finding a new job
• Assistance in becoming self-employed
• Retraining for workers who have paid into government programs for all those years and now need assistance
Call or visit to learn more.
actionplan.gc.ca
1 800 O-Canada
Là pour vous aider
Si vous êtes parmi les Canadiens et Canadiennes les plus durement touchés par la crise économique, le Plan d'action économique du Canada vous offre un vrai coup de main.
• Nouveaux fonds pour le perfectionnement des compétences
• Accès à la formation en milieu de travail
• Soutien à la recherche d'emploi
• Aide au travail autonome
• Programmes de formation pour les travailleurs et travailleuses qui ont contribué pendant des années aux programmes du gouvernement et ont aujourd'hui besoin d'aide
Appelez ou visitez le site Web pour en savoir plus.
plandaction.gc.ca
1 800 O-Canada
CANADA'S ECONOMIC
ACTION PLAN
PLAN D'ACTION
ÉCONOMIQUE DU CANADA
Canada

# அன்று போருக்கு இலக்கணத்தைக் கொடுத்தோம் இன்று ஒற்றுமைக்கு அர்த்ததைக் கொடுப்போம்

-- என்கிறார் கலாநிதி ராம் சிவலிங்கம், தலைவர்-தமிழீழ அரசு கனடா

நதிகள் ஒன்றாகச் சேர்ந்து ஆறாக மாறும்போது தானே அது வலிமை பெறுகிறது. இது நமக்கு இயற்கை தந்த பாடம். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு, என்ற பழமொழியைப் பாருங்கள். இது எமது மூதாதை-தயர் எமக்குக் கற்பித்த உண்மை. இவையெல்லாம் நமக்கு எதைக் கூறுகின்றது? எமது ஒற்றுமையின் தேவையை அதன் அவசி யத்தை எமக்கு அழகாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்ல வில்லையா?

எம்மிடம் ஒற்றுமை இல்லை என்று கூறுகிறார்களே அது உண்மையா? எப்படி அது உண்மையாகலாம். சற்று சிந்தியுங்கள். புலம்பெயர் தமிழீழ அரசின் நோக்கமும் அதன் செயற்பாடும் ஏதாவது ஒரு தமிழ் அமைப்புக்கோ அதன் செயற்பாட்டிற்கோ தடையாக இருக்கிறதா அல்லது முரணாக உள்ளதா? இல்லவே இல்லை. மாறாக எல்லோரையும் அரவணைத்துச் செல்லவல்ல வாகனமல்லவா இந்தத் தமிழீழ அரசு.

நாம் வேண்டி நிற்பதும், அடைய இருப்பதும் இறமையான, சுதந்திரமுள்ள தமிழ் ஈழம். எமது செயற்பாடுகள் யாவும் ஜனநாயக முறையிலானதும் வெளிப்படையானதும் அல்லவா. அது மாத்திரமல்ல இது ஈழத் தமிழர்களுக்காக தமிழரால் அமைக்கப்பட்ட ஓர் கட்சி சார்பற்ற அமைப்பு. இதில் யார் விரும்பினாலும் சேரலாம், எவர் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம். ஆதலால் ஒற்றுமையின்மைக்கு இங்கு இடமே இல்லை என்பது என்ன புரியாத புதிரா அல்லது விளங்காத விடயமா.

நாம் நடாத்துவதோ எமது மூன்றாம் கட்டப் போர். இது உலக சட்ட திட்டங்களுக்கு அமைய பிரபல வழக்கறிஞர் உருத்திரா விசுவநாதனினால் வழி நடாத்தப்படும் ஓர் தார்மீகப் போர், ஒரு அறவழிப் போராட்டம். ஈழத் தமிழர்களின் விடிவுக்காக அவர்களின் சுதந்திரத்திற்காக நாம் எடுக்கும் இறுதி யாத்திரை.

அப்படியானால் தமிழுக்கும் தமிழருக்கும் ஆபத்து என்றால் தன் உயிரையே தரத் தயங்காத எம் இளைய சமுதாயம் ஏன் இன்று தடுமாறுகிறது? நிலை குலைந்து நிற்கிறது. ஆமை வேகத்தில் அசைந்து வருகிறது. தங்கள் பங்கை திறம்பட செய்த எம் தாய் குலம் ஏன் இன்று தயங்கி நிற்கிறது, தள்ளாடி நகர்கிறது?

உங்கள் தடுமாற்றத்திற்கு, நிலை குலைவிற்கு, தயக்கத்திற்கு, தாமதத்திற்கு பெயர்தான் ஒற்றுமை இன்மையா? அல்லது எம்மிடையே உள்ள கருத்து வேறுபாடுகள் எமது தமிழ் உணர்வை நாம் இழந்து விட்டதாக பறை சாற்றுகின்றதா? தாமதம் வேண்டாம், படை எடுத்து வாருங்கள், உருத்திரா தலமையில் அணியாகத் திரண்டு ஈழத்தை வென்றெடுப்போம்.

நாம் யார்? ஈழத்தாயின் இணையற்ற செல்வங்கள் அல்லவா. ஒரு கண்ணியமான இனத்தின் காவலர்கள் அல்லவா. வீர இனத்தின் வித்துக்கள் அல்லவா. நாம் எடுத்த பணி இன்னும் முடியாத வேளை நாம் பார்த்துக் கொண்டிருப்பது பாவமல்லவா? நட்டாற்றில் எமது உறவுகளை விடுவது சரியா? நீங்களும் கைவிட்டால் அவர்கள் எங்கு போவார்கள் என்னதான் செய்வார்கள் என்று ஒருமுறை சிந்தியுங்கள்?

எம் இனிய உறவுகளே! தமிழ் உணர்வை நீங்கள் இழக்கவுமில்லை. உங்கள் உடன் பிறப்புகளை நீங்கள் மறக்கவுமில்லை. எம்மிடம் சிறு கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கையும் ஆரோக்கியமானதும் தானே. எமது நோக்கத்திலும், அடைய இருக்கும் குறியிலும் எந்தவித வேறுபாடும் இல்லையே. நாம் வேண்டி நிற்பதும், அடைய இருப்பதும் இறைமையான, சுதந்திரமுள்ள ஓர் தனி நாடு தானே.

புதுமை மிக்க தமிழீழ அரசின் அரசியலை நாம் நன்றாக அறியவேண்டிய நேரம் இது. இந்த மூன்றாம் கட்டப்போரை, அதன் தனித்துவத்தை நாம் புரிய வேண்டிய காலம் இது. பற்றி எரியும் எம் உள்ளக் குமுறலை தணிய வைத்துவிட்டு, நாம் எல்லோரும் தமிழீழ அரசு என்ற அந்தத் தார்மீகப் போருக்கு எம்மைத் தயார் செய்ய வேண்டும். இதுவே என் ஆசை.

பாட்டுக்கு பரவசத்தையும், ஆடும் கலைக்கு அர்த்தத்தையும், போருக்கு இலக்கணத்தையும் தந்தவர்கள் நாமல்லவா. வானமே எம்மை அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு வளர்ந்து வரும் எம் இனமே! இராஜபக்சாவின் தேர்வு, சீனாவின் இலங்கை வருகை எமக்கு சாதகமாக இருந்தாலும், எமது வெற்றி எமது கையில்தான் தங்கியிருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்.

தமிழர்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து ஒற்றுமைக்கு அர்த்ததையும், தனித்துவமான எம் முயற்சிக்கு முதல் இடத்தையும் கொடுத்து, தமிழீழ அரசை அமைக்கும் முயற்சியில் நாம் எல்லோரும் முழு மனத்துடன் பாடுபட வேண்டும் என்பதே என் அவா. தேர்தல் வேலைகளைக் கவனிக்க, தேர்தலில் பங்கு கொள்ள எமக்கு நூற்றுக்கணக்கான தொண்டர்களும், பங்காளிகளும் தேவை. தயவுசெய்து எம்முடன் இணைந்து செயற்பட வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேதனைகளின் மத்தியில், வெற்றியை வேண்டிநிற்கும் என் உறவுகளே! நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து அர்த்தமுள்ள அறவழிப் போருடன் எம்மை இணைத்து, அங்கு முள்ளு வேலிக்குள் முடங்கி இருக்கும் எம் உறவுகளை, நடை பிணமாக வாழும் எம் சந்ததியை மீண்டும் வாழவைக்க நாம் எல்லோரும் முன்வர வேண்டும். அவர்களுக்கு ஒரு இறைமையான சுதந்திரமுள்ள ஒரு தமிழ் ஈழத்தை அமைக்கும் வரை நாம் உறங்க மாட்டோம் என்று சபதம் எடுத்து செயற்பட வேண்டும்.

தமிழரை அழிக்க எல்லா சிங்கள கட்சிகளும் சிங்களவர்களும் ஒன்றிணைந்து நிற்கும் போது அந்த அப்பாவித் தமிழரை காக்க நாம் ஏன் ஒன்றாக, முழு மூச்சுடன் செயற்பட முடியாது? என்று ஒருமுறை உங்களை நீங்களே கேளுங்கள். அதற்கான விடை நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும். இது சத்தியம்.


*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*

***www.vlambaram.com***



## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## நூற்றாண்டு விழா

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி, கொக்குவில் இந்துக்கல்லரி பழைய மாணவர் சங்கம் - கனடாவினால் நூற்றாண்டுவிழா இராப்போசன விருந்துடன் கொண்டாடப்படவுள்ளது.

காலம் :March 27th, 2010

இடம் : J & J Swagat Convention Centre, 415 Hood road, Markham, ON

நேரம் : மாலை 6 மணிக்கு

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபி-மானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கும், முன்கூட்டிய பதிவுகளுக்கும்

**905-472-4194** **416-431-1060**

**416-318-6195** **416-621-6308**



## மகாஜனாவின் கணிதம் மற்றும் பொது அறிவுப்பொட்டி - 2010

கடந்த ஐந்து ஆண்டுகளாக மகாஜனா பழைய மாணவர் சங்கம், கனடா முன்னெடுத்து முதன்மையாக செயற்படுத்திய நிகழ்ச்சி இங்குள்ள இளம் தலைமுறையினருக்கு கணிதம் மற்றும் பொது அறிவுப்போட்டியை நடத்தி பரிசுகள் வழங்கி ஊக்கம் அளித்து வந்துள்ளது.



இவ்வாண்டு சங்கம் மகாஜனாவின் நூற்றாண்டை சிறப்பாகக் கொண்டாடும் விதத்தில் நிகழ்ச்சிக-ளில் இப்போட்டியை மொன்றியலிலும், மற்றும் மகாஜனா பழைய மாணவர் சங்கங்கள் இயங்கும் நாடுகளிலும் நடத்துவதற்கு முடிவு செய்தது. அதற்கு அமைய இம்மாதம் 7ம்திகதி (07-02-2010) இப்போட்டியை ரொரன்ரோவிலும், மொன்றியலிலும் நடத்தி முடித்துள்ளனர். இம்முறை மூன்று மடங்கு போட்டியாளர்கள் ரொரன்ரோவிலும் மொன்றியலில் 173 போட்டியாளர்கள் முதன்முறையாக ஊக்கமுடன் பங்குப்பற்றியுள்ளனர். இப்போட்டியில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு சங்கத்தினரால் வரும் ஜூலை மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடத்தப்படும் "முத்தமிழ் விழா"வில் பரிசளிக்கப்படும்.

இப்போட்டியை மிகச்சிறந்த முறையிலும், திட்டமிட்ட நிரல்களுக்கு அமைய மகாஜனா பழைய மாணவர் சங்கம் சிறப்பாகச் செயற்படுத்தியுள்ளனர்.




# என் வீடு-உன் வீடு-அவர் வீடு!

**என்இனிய நண்பர்களே!
வாழ்த்துக்கள்**

நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

வீடு, இல்லம் அருமையான தமிழ் சொற்கள். இதனை ஆங்கிலத்தில் House என்று மொழி பெயர்த்தனர். சிலருக்கு இது சரியாகப்படவில்லை. இல்லம், வீடு என்பதன் முழுமையான பொருளும் அதிலே பொருந்திவரவில்லை. தமிழ் வீட்டார் இயல்புகளும் வீடு, இல்லம் என்பதன் உயிர்ப்பான அர்த்தமும் தொனிக்க Home என்று ஒரு சொல்லை ஆங்கிலத்தில் ஆக்கம் செய்தனர். இல்வாழ்வான் இல்லாள் என்று திருக்குறளிலே வரும் சொற்களில் குடும்பப்பாங்கு என்னும் தொனிப்பு வெளிப்படுகிறது. குடும்பப்பாங்கு வெளிப்படும் ஆங்கிலச் சொல்லாக Homely என்ற சொல் உருவாக்கப்பட்டுள்ளது. வீடு பற்றி இப்படி எத்தனையோ விளக்கங்கள் விரிவடைந்துள்ளன. நண்பா! நாகையா நடித்த என் வீடு யாழ். ராணி படமாளிகையில் பார்த்த நினைவலைகள் கிளம்புகின்றனவா? ஒருவீட்டு முதியவருக்குள் அடங்கியிருக்கும் பொறுப்பும் கடமையும் அக்கறையும் அன்பும் பாசத்துடிப்பும் அவர் வாய் மொழியிலும், உடல் மொழியிலும் வெளிப்படும் உணர்ச்சிக் கோலங்களால் நம்மை உருக்கி விடும். எத்தனையோ வீட்டுப் பெரியவர்களிடம் இதனைக் கண்டிருக்கிறோம். நடிகர் நாகையாவின் முகத்திலும் கண்ணிலும் ஏன் மூக்கு நுனியிலும் கூட வீட்டின் முகவரியும் குடும்பத்தின் பாசமும் பீறிட்டுப் பிரகாசித்தமை இன்றும் நினைவுக்கு வருகிறது. இதுபோன்று நமது தேசத்தின் பிதாக்களிலும் மாதாக்களி லும் குடும்பக்குணங்களும் வீட்டின் வாசனை களும் வீசியமையை மறக்க முடியுமா?

எங்கள் வீடு, உங்கள் வீடு, அவர்கள் வீடு என்ற உரிமைக் குரல்களும், தாய் வீடு, அன்னை இல்லம், தாய் இல்லம், தாயகம் என்ற உறவுக்குரல்களும் பின்னிக்கலந்த உணர்வோசைகளும் செவிக்குள் இடை யிடையே, கனவிலும் கூடக் கேட்கிறதல்லவா? வீடு தாய்க்குச் சமமானது. தாய் பேசிப்பேசி அன்பு செலுத்துவாள். வீடு பேசாமல் அன்பு செலுத்தும். தாயும் பேசாமல் அன்பு செலுத்தும் நேரங்களும் உண்டு.

தாய்க்குப் பிள்ளைகள் எல்லாம் வேறு வேறு குணங்குறிகளைக் கொண்ட ஒரே ஆத்மாதான். கடவுள்கள் எல்லாம் ஒன்று என்பது போல் தாய்க்கு பிள்ளைகள் எல்லாம் ஒன்றுதான். பிள்ளைகள் காலத்துக்குக்காலம் வேறுபடும் போது தாய் வேதனைப்படுவாள். வீடும் தாய் போன்று எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாதுகாப்பை - நிழலை கொடுக்கிறது. குழப்படி காரனுக்கும் சமாதான விரும்பிக்கும் வீடு வித்தியாசம் காட்டுவதில்லை. தன்னைக் காலால் உதைப்பவனுக்கும், கையால் தடவுபவனுக்கும் வீடு ஆதரவைக் கொடுக்கிறது.

ரிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

இந்த உலகத்தின் வீட்டை விட்டு அந்த உலகத்துக்குப் போவதையும் வீடடைதல், வீடுபேறு என்றே நம்மவர்கள் சொன்னார்கள். அறம் பொருள், இன்பம், வீடு என்றே புருஷாத்தங்கள் புகலப்பட்டன. நான்கு பேருண்மைகளில் வீடு என்ற பேருண்மை பற்றித் திருவள்ளுவர் ஏன் ஒன்றும் சொல்ல வில்லை என்ற கேள்விக்கு இன்றுவரை தக்க பதில் எதுவும் கிடைக்கவில்லை. இகலோ வீட்டைப் பிடிக்கலாம். வீடு பிடித்தல். இடம்படவீடு எடேல் என்பன வழக்கில் இருக்கிறது. பரலோக வீடு பிடிபடாது போலும்.

நாம் இருக்கும் வீட்டைவிட்டு, வெளியே போ! என்று வீட்டில் இருப்பவர்கள் யாராவது சொல்லுவார்கள். ஆனால் வீடு சொல்லாது. கோபித்துக் கொண்டு வெளியேபோய், சொன்னவருக்குத் தெரியாமல் களவாக உள்ளே நுழைந்து அம்மாவிடம் சோறுவாங்கித் தின்று, சற்றுநேரம் அம்மாவின் மடியில் உறங்கிவிட்டுப்போனாலும் அம்மாவைப் போல வீடு யாருக்கும் சொல்லாது. வீடுபேறு என்ற மோட்ஷ வாக்கியம் நினைக்க நினைக்க இன்பமும் ஆறுதலும் தருகின்ற சொல். மனிதன் உடலோடு வீட்டில் வாழ்ந்து உயிர் பிரிந்து போய் வீடுபேறு என்ற மற்றுமோர் வீட்டில் இருப்பதும் வியப்புக்குரியதே. நாம் விஞ்ஞானக்கண்டு பிடிப்புகளை வியக்கிறோம். மெஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கு கற்பூரத்தைக் காட்டிவிட்டு விலகிவிடுகிறோம். நமக்கு வரும் துன்பங்களுக்கு இதுவும் ஒரு காரணமோ தெரியவில்லை. புரிந்து கொள்ளவும் இல்லை. புரிய இருக்கும் இடத்திலும் பிரசாதச் சிந்தனைதான் வருகிறது. ஏன் சிரிக்கிறாய்? மனத்தைக் கூட அடக்கிவிடலாம். எங்கே வயிற்றை அடக்கிய ஒருவரைக் காட்டுவோமா?

பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்று கூறி அந்தப்பத்தையும் பட்டியல் போட்டு காட்டினார் ஒருவர். பட்டியல் வேண்டுமா? மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, மெல்லியர்மேல் காமுறுதல் என்பவையாம்.

மனத்துன்பங்களை நித்திரை கொண்டாவது போக்கிவிடலாம். வயிறு பசிகொண்டால் நித்திரையும் கொள்ளவிடாது. இதற்குப் பிடித்தது வீட்டுச் சாப்பாடாம். வெளிச்சாப்பாடு களையே வீட்டுச் சாப்பாடு போன்றது என்று விலைப்படுத்துவதை அறிந்திருப்பீர்கள். வீடு கிடைப்பது அதிலே இருந்து வாழ்வதும் ஒரு கொடையே. இது போன்று வீடுபேறு கிடைப்பதும் புண்ணியமே. வீடுபேறு கிடைத்தவர் திரும்பி வந்து அதன் மகிமை பற்றிச் சொல்லும் சூழ்நிலையை இறைவன் உருவாக்குவாரா?

அந்தக்காலத்தில் நம்மவர்கள் பள்ளிக் கூடத்தை 'ப' வடிவிலும் வீட்டை 'ட' வடிவிலும் காட்டினார்கள். சிலர் நாற்சாரமாய் கட்டினார்கள். அந்த வீடுகளின் விறாந்தைகள் படிக்க உதவின. படுக்க உதவின. சாப்பிட உதவின. நெல்லுப்பரவி காயவைத்தோம். பாய்விரித்து இருக்க வைத்தோம். கதிரை போட்டு வரவேற்றோம். வீட்டைவிட்டு எங்காவது பிறஇடங்களுக்குப் போனால் நமக்கு வீட்டுவியாதி என்ற வருத்தமும் வந்திருக்கிறது. இதனை ஆங்கிலத்தில் Home sick என்றார்கள். நான் யாழ். இந்துக்கல்லூரி யில் படித்தபொழுது கல்லூரிக்கு அருகில் காங்கேசன்துறை வீதியில் சிவதொண்டன் நிலையத்துக்கு எதிரில் இருந்த செட்டியார் விடுதியில் (Bodring) சொற்பகாலம் தங்கியிருந்தேன். பக்கத்திலே Baby Bording என்று ஒன்றும் இருந்தது. எனக்கு எந்த உடல் வியாதியும் வருவதில்லை. மனவியாதி வீட்டு வியாதி Home sick வந்து பாடாய் படுத்தும். இதற்கு ஒரு மருந்து கண்டுபிடித்தேன். மருந்துமல்ல மார்க்கம்.

எங்கள் ஊருக்குப் போய் திரும்பும் மாணவர்கள் சிலர் எங்கள் வீட்டுக்கு முன்னால் நீண்டு போகும் பிரதான வீதி வழியாகவே யாழ்ப்பாணம் திரும்ப வேண்டும். அவர்கள் விடுதிக்குத் திரும்பியதும் எங்கள் வீட்டைப் பார்த்தீர்களா என்று கேட்பேன். ஓம் பாத்த நாங்கள் உன் அப்பர் மாட்டுக்கு குழைபிடுங்கிப் போட்டுக் கொண்டு நின்றார்.

உன் அக்காள் பர்வதம் ஒரு கன்றுக்குட்டிக்கு போத்திலால் தண்ணீர் பருக்கிக்கொண்டி நின்றாள் என்பார்கள். நான் புளகாங்கிதமடைந்து அவர்கள் கண்களை என் கண்ணுக்கு அருகில் பிடித்து ஏக்கத்தோடு பார்ப்பேன். கண்கள் கண்களில் வீட்டைத் தேடும். வீடு தெரியாது. வீட்டைக்கண்ட கண்களை காண்பதில் வீட்டைக்கண்டது போன்ற ஒரு திருப்தி. இப்படி வீடு பற்றிய நனவிடைதோய்தல் பலருக்கும் உண்டு.

வீட்டில் சிலர் வாழ்வார்கள். சிலர் வசிப்பார்கள். வசித்தவர்களுக்கு வீட்டின் அருமை பெருமை தெரியாது. வாழ்ந்தவர் களுக்கு அதன் அர்த்தமும், இன்பமும், சுகமும் எங்கிருந்தாலும் நினைவுக்கு வரும். நிம்மதியைக்குழப்பும். நண்பனே! நான் என் வீட்டை விட்டு நாட்டை விட்டு வெளிக்கிட்டு முப்பது ஆண்டுகள் முடியப் போகிறது. என்ன காரணம், நாடுகாடாக மாறியது ஆளவந்தவர்கள் ஆணவத்தால், அதிகார வெறியால் சூறையாடல் அழித்தல் அல்லல் படுத்துதல் என்று மிருகவேட்டை ஆடினர். உரிமைகளைப் பறிப்பதிலும், உயிர்களைப் பிரிப்பதிலும் உலுத்தர்களாய் செயல்பட்டனர். கூக்குரலுக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. தர்மத்தின் வாழ்வதனைச் சூது கௌவியது. பேய் ஆட்சி செய்தால் சாஸ்திரங்கள் பிணம் தின்னுமாம். பிணமா தின்னப்பட்டது? பிணங்கள் தின்னப்பட்டன. இந்த நீண்டதுயரம் பற்றி உனக்கும் தெரியும்தான். என்னைப் போல், உன்னைப்போல் எத்தனைபேர் வீடிழந்து, நாடிழந்து நாலாபக்கமும் சிதறிச் சீர்கெட்டு உயிர்பிழைத்திருக்கிறோம். எங்கள் உயிரைக் காப்பாற்றிய நாடுகளுக்கு நாம் கடவுள் வணக்கம் செலுத்த வேண்டும்.

ஊருக்குப் போகும் எண்ணம் இருக்கிறதா? என்று கேட்டிருந்தாய். எண்ணம் இருக்கிறது. இதனோடு சில ஏக்கங்களும் என்னைத் தாக்குகின்றன. அது ஒரு காலம். அது ஒரு காலம் என்று கவிஞன் சு. வில்வரத்தினம் ஒரு கவிதை எழுதினார். எழுதியவனும் போய்விட்டான். எழுத்து இதயத்தை கசக்கி மணக்கிறது. இதுதான் மண்வாசனையோ அந்தக்காலம் என் வீடு இருந்த இருப்பு. இயங்கிய இயக்கம். அன்பாய் இன்பமாய் ஆதரித்தும் அரவணைத்தும் வாழ்ந்த காலங்கள். என் வீட்டுத் தோட்டம், முற்றத்து மல்லிகை, செம்பரத்தை, தென்னைமரங்கள், வீட்டைச்சுற்றிலும் வேப்பமரங்கள், ஊஞ்சல்கட்டி ஆடிய பூவரசு, மாந்தோப்பு, மஞ்சவண்ணா, கூடார வண்டிலும், மொட்டை வண்டிலும் நின்ற மாட்டுமால். மாடுகளைக் கட்டி வளர்த்த சிறுகூடல், உழவுக்கலப்பைகள் வைத்திருந்த தாழ்வாரம், வேலியில் படர்ந்திருந்த தூதுவளை, காய் முருங்கை, கறிவேப்பிலை மரம், மாதுளைமரங்கள்.

என் தந்தை இருந்து சிவபூசை செய்த பூசை அறை, படுக்கை அறை. சாமான் அறை. என் மனைவி மூன்று நேரமும் நின்று சமைத்த சமையல் அறை. மத்தியானச் சமையல் முடிந்ததும் சாப்பாட்டைச் சட்டிகளில் எடுத்துக் கொண்டு என் தந்தையார் இருக்கும் விறாந்தைக்குச் சென்று பரிமாறித் திரும்பிய அன்னபூரணியின் அழகுக்கோலம், அவள் இன்று இல்லையே என்ற ஏக்கம், என் வீடு தடம்புரளாமல் சிதைந்து போகாமல் அச்சாணியாய் ஆதாரசக்தியாய் இருந்தவள் என் மனைவி - விமலநாயகி, வீட்டுக்கு வந்த மகாலக்சுமி வீடுபேறு அடைந்து விட்டாள். மாறாட்டம் அடைந்து மனம் உடைந்து சிதறிய என்னை தெளியவைத்து தெம்பு தந்து இதனை எழுதவைக்கும் என் உயிரனைய உத்தமியை வணங்குகிறேன்.

மாலை நேரத்தின் சோலைக்குயில்களின் பாட்டு. பறவைகளும் கறவைகளும் கூட்டுக்கும், வீட்டுக்கும் திரும்பும் கண்ணுக்கினிய காட்சி. பக்கத்து வீட்டுக் கிளாக்கராச்சியும், சிவக்கொழுந்துமாமியும் கொண்டுவரும் ஊர்புதினங்கள். பக்கத்து சிவன்கோயிலும் முருகன் கோயிலும் எழுப்பும் ஆன்மீக அலைகள் அக்கிராமத்துப் பிராணம வீடுகளிலிருந்து வரும் நெய்வாசம். தந்தையாரிடம் சைவசித்தாந்த வகுப்புக்கு வரும் பல ஊர்களின் சிவாச்சாரியார்கள். அண்ணர் சிவராமலிங்கத்திடம் ஆங்கிலம் படிக்க வரும் மாணவர்கள். கமக்காறி இருக்கிறாவோ? என்று கேட்டபடி என் தாயாரைத் தேடி வரும் தாய்மார்கள். தந்தையாரின் மருந்துக்கும் மருத்தெண்ணைக் கும் வரும் நோயாளர்கள். இப்படி எத்தனை எத்தனை நினைவுகள் நெஞ்சின் அலைகளாய், நினைவின் சுவடுகளாய், நினைவு ஏக்கங்களாய் வந்து வந்து மோதுகின்றன.

யாரோ ஒரு எழுத்தாளன் பல வருடங்கள் கழிய தனது முதுமைக்காலத்தில் தான் சிறுவனாய் வாழ்ந்த வீட்டிற்கு காலடி எடுத்து வைத்தபோது அழுதானாம். ஏன் அழுகிறாய்? என்று கேட்டபோது, அந்த வீட்டின் இதயம் துடித்துக் கொண்டிருப்பதை என் காதுகள் கேட்கின்றன என்றானாம்.

நான் என் வீட்டிற்குள் போனால் என்ன நடக்கும். என் மனைவி விமலா! அங்கிருந்து அசரீரியாய் வாங்கப்பா! ஏன் இவ்வளவு காலம் சென்றது? என்று கேட்டால் என் நெஞ்சு வெடித்து விடுமே. அப்பாவை ஊருக்கு அனுப்பக்கூடாது. அம்மா இல்லாத வீட்டை அவர் கண்டால் இதயம் நின்றுவிடும் என்று என் பிள்ளைகள் உறவினர்களுக்குச் சொன்னார்களாம் நண்பா! என் சொந்த வீட்டிற்குப் போகாமல் சொர்க்கவாசல் வீடு பேற்றிற்குப் போவதுதான் நல்லதா? என்ன செய்ய? நீயே எழுது.

வேறு என்ன?
பிற பின்பு!



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# Served Over 15 Years In Toronto Now in Richmond Hill

# NTE AUTO INC.

## New Trade Engineering

MS7


**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575**

## Quality Work... For Less $$$

**"Fully Licensed Class "A" Mechanics on Duty"**

Repairs To All Makes & Models

- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- BMW service & Maintenance
- Mechanical, Auto Electrical Repairs
- Mechanical Safety Inspection & Certification
- FREE ESTIMATES



# MS7 Quality Used Car Sales

## 905-770-2575 / 416-399-6640

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

**www.vlambaram.com**





# SMILE....

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED





HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.** Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# தேக்கடி...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

மான்கள் போல் மலைப்பாம்புகளும் அதிக எண்ணிக்கையில் உள்ளன. சலசலத்துக் கொண்டிருக்கும் பெரியாற்றில் இந்த காட்டு விலங்குகள் தண்ணீர் குடிக்கும் காட்சியை கண்டு ரசிப்பது ஒரு புதுமையான அனுபவமாக இருக்கும். தேக்கடியில் வனத்துறையால் நடத்தப்படும் ட்ரெக்கிங்கும் மிகப் பிரபலமானது. குறிப்பாக, தேக்கடி யானை சவாரி மிகப் பிரசித்தமானது. யானை மீதேறி சவாரி செய்வது பெரியவர்களைக் கூட குழந்தைகள் போல குஷிப்படுத்தி விடும். இதை தேக்கடியில் நேரில் காணலாம். ஒய்யாரமாக நடந்து செல்லும் யானை மீது அமர்ந்து காட்டின் அழகை ரசிப்பது மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். ஒரு முறைக்கு அரை மணிநேரம் என்ற கணக்கில் இங்கு யானை சவாரி நடத்தப்படுகிறது.

உயரமான மலை என்று சொல்கிறார்கள். தேக்கடிக்கு அருகில் உள்ள செங்குன்றம் 1700 மீட்டருக்கும் மேலே உயரம் கொண்டது. இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடைப்பட்ட மலைப் பகுதிகள் ஏற்றமும் இறக்கமும் கொண்டவை.

மதுரையில் இருந்து குடநாட்டுக்கு வர வேண்டுமானால், இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று மதுரை - கொச்சி சாலை, இன்னொன்று கம்பம் வழியாக வரும் மதுரை - கோட்டயம் சாலை. இந்த இரண்டு சாலைகளுமே தமிழகத்து எல்லைக்குள் கம்பத்திற்கு சற்று தொலைவு வரை, ஒரே சாலையாக இருந்து பிரிந்து சிறிய கோணத்தில் குடமலைச் சேர நாட்டுக்குள் நுழைகின்றன. இந்த இரு பாதைகளும் பழங்காலத்தில் சேர, பாண்டிய நாடுகளுக்கு மிக முக்கியமானவையாக இருந்திருக்க வேண்டும். இன்றைய கேரள - தமிழக எல்லையில் இருந்து தெற்கே தேக்கடி, வண்டிப் பெரியார், வடக்கே தேவிகுளம், மேற்கே பேரியாறு (பெரியாறு) என்ற கேரளப் பகுதிகளை நாம் கூர்ந்து பார்த்தால், அந்தப் பரப்பு குடமலை நாட்டின் 'கிழக்கு வாசல்' என்பது புரியும். இந்தக் கிழக்கு வாசல் அரண் அக்காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும். இதைத்தான் 'குணவாயில்' என்று சிலம்பின் பதிகம் கூறுகிறது என்கிறார்கள். இந்த கிழக்கு வாசல் அன்றைய நாட்டுப் பிரிப்பின் படி தனிக் கோட்டமாக (அல்லது மண்டலமாக அல்லது வட்டமாக அல்லது மாவட்டமாக அல்லது சிற்றரசாக) இருந்திருக்க வேண்டும். அரண சூக்குமம் நிறைந்த பகுதி என்பதால் இது சிறப்பு பெற்றும் இருந்திருக்க வேண்டும். சேர - பாண்டிய நாட்டின் எல்லைப் பகுதியான இப்பகுதி, இன்றைய கேரள - தமிழக எல்லைப் பகுதியில் இருக்கும் குமுளி, செங்குன்றம், தேக்கடி பகுதிகளை உள்ளிட்டு, மேற்கே வண்டிப் பெரியார் போன்ற ஆற்றங்கரை நகரத்தைக் கொண்டதாகவும், வடக்கே தேவி குளம் அல்லது ஆனைமுடி மலைத்தொடர் வரை உள்ள பகுதிகளைக் கொண்டதாகவும் இருந்திருக்க வேண்டும். தமிழரசியல், தமிழியம், தேசியம் என்றெல்லாம் ஆர்வப்படுபவர்கள் தவிர்க்க முடியாத சங்கதிகள், வரலாறுகள் இவை.

இயற்கையுடன் சில நாட்கள் இணைந்திருக்க நினைப்பவர்கள் தேக்கடியை தேர்ந்தெடுக்கலாம்.



தேக்கடி ஏரி, படகு சவாரி, சரணாலயம் தவிர தேக்கடி காட்டுப் பகுதியை ஒட்டி பத்துப் பதினைந்து கிலோமீட்டர் சுற்றளவுக்குள் அமைந்திருக்கும் பல பிரசித்தமான இடங்களும் தேக்கடி பயணத்தை இனிமையாக்கக் கூடியவை. தேக்கடியை ஒட்டி தமிழகத்துக்குள் அமைந்திருக்கும் நகரம் குமுளி. இந்தப் பகுதியின் ஷாப்பிங் சென்டராக இந்நகரம் திகழ்ந்து வருகிறது. காட்டில் கிடைக்கும் வாசனைப் பொருட்களை இங்கே விற்பனை செய்கிறார்கள். மிகப்பழமையான மங்களா தேவி கோவில் தேக்கடியில் இருந்து சுமார் பதினைந்து கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கேரளத்தின் பாரம்பரிய கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இக்கோயில், கடல் மட்டத்தில் இருந்து 1337 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் இருந்து பார்த்தால் அடர்த்தியான மேற்கு தொடர்ச்சி மலை காட்டின் அழகை கண்குளிர ரசிக்கலாம். தமிழக - கேரள அரசியலில் அவ்வப்போது புயலைக் கிளப்பி வரும் முல்லைப் பெரியாறு அணையும் இங்குதான் அமைந்துள்ளது. (இந்த அணையைப் பற்றி தனியாக விரிவாக இன்னொரு பயணத்தில் நாம் பார்க்கலாம்.) சாரல் மழைக்கு பெயர்பெற்ற சுருளி அருவி கம்பம் அருகே உள்ளது. சுமார் 150 அடி உயர மலை உச்சியில் இருந்து பல்வேறு மூலிகை செடிகள் கலந்து இந்த அருவியில் தண்ணீர் கொட்டுகிறது. தேக்கடியில் இருந்து 45 கி.மீ தூரத்தில் பச்சை வெல்வெட் துணியை போர்த்தியதைப் போல புற்களால் போர்த்தப்பட்டிருக்கும் புல்லுமேடு, டிரைபல் ஹெரிடேஜ் மியூசியம் போன்ற இடங்களும் பார்க்கத் தகுந்தவையே. தேக்கடியைச் சுற்றிய பகுதிகளில் மேற்கு மலைத்தொடரில் இடுக்கி மாவட்டத்தில் பல உயரமான மலை முகடுகள் உள்ளன. இதில் வடபகுதியில் உள்ள ஆனைமுடி மிக அதிக உயரம் கொண்டது. சுமார் 2695 மீட்டர். இதுதான் தென்னிந்தியாவின்

### எங்கே செல்வது? எங்கே தங்குவது?

தமிழக - கேரள எல்லைப் பகுதியில் உள்ள ஊரான கம்பத்தில் இருந்து இருபது கி.மீ., தூரத்தில் கேரள மாநிலத்திற்குள் அமைந்துள்ளது, தேக்கடி. மதுரை, திண்டுக்கல்லில் இருந்து கம்பத்துக்கு அடிக்கடி பேருந்து போக்குவரத்து உள்ளது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் ரயில் போக்குவரத்தும் பேருந்து போக்குவரத்தும் உள்ளது. கம்பத்திலும் குமுளியிலும் எல்லா வசதிகளும் கொண்ட நல்ல தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன.


A1 கொழும்பு

டிஜிற்றல் போட்டோ ஸ்ருடியோ & வீடியோ

| | |
|---|---|
| 2 பாஸ்போட் OR 2 லான்டட் காட் 5 நிமிடத்தில் | $10.00 |
| 2 சிற்றிசன் or அனைத்து ஐ. டி. 5 நிமிடத்தில் | $10.00 |
| 3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ | $30.00 |
| From: அல்பத்துடன் முதல் தரமான போட்டோ PACKAGES | |
| 25 - 5X7 பிறந்த நாள் or முதன் நன்மை | $125.00 |
| 50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா | $250.00 |
| 75 - 5x7 திருமணவிழா or அரங்கேற்றம் | $375.00 |
| 25 - 5x7 போட்டோக்கள் வீட்டிற்கு வந்து எடுப்பதற்கு | $125.00 |

2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, SCARBOROUGH 416-752-4444
E-Mail: WWW.TYP@GMAIL.COM 416-613-2818
Web: www.tamilsyellowpages.com

REAL ESTATE
வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***




# மீள் உயிர்ப்பு

அந்நியப் படைகள்
ஆக்கிரமித்த நிலத்தில்
கருப் பொருட்கள்கூடக்
கரு அறுக்கப்படும்

என்பதைக் கூறி நிற்கும்
குருஷேத்திரப்
பெரு வெளி

என் ஆத்தை வளவில்
கால் ஊன்றி நின்ற
இருபத்திரண்டு
தென்னம் தாய்கள்,

என் ஆத்தைக்குச் சோறு போட்ட

எண்ணெய்த் தென்னம் கன்றுகள்

ஊரின் கறிச் சட்டிகளில்
புளி கரைத்து ஊற்றிய
புளியமர விருட்சம்

எதுவுமே அங்கில்லை.

காணி நிலப் பரப்பின்
அடையாளம் காண்பதற்கு

நான்கு திசையும்
என் தலையைச் சுழற்றி
அண்ணாந்து பார்த்தேன்

கோயிலார் அப்புவின்
செவ்விளநீர்க் கன்றுகள்

பூசாரியாரின் பனங் கூடல்

முருகுப்பிள்ளைப்
பெரியப்புவின்
பச்சைக் காய்ச்சித்
தென்னைகள்
வயிரவிப்பிள்ளைக்
குஞ்சியப்புவின்
இத்தி கட்டிப் பனைகள்

பக்கத்துக் காணியில்
பரந்து நின்ற
பழைய வேம்புகள்

ஊர் மக்கள்
ஊஞ்சல் கட்டி
உதைந்து ஆடிய
ஆலமர விருட்சம்

எதுவும்
நின்ற அடையாளமே
தெரியவில்லை

நிலத்தை ஆழமாக
அகழ்ந்து
வேருடன்
பிடுங்கினரோ?



முத்துராஜா


# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

TRIDEL®

## Another Project ...
## In West Toronto




## Location: HWY 427 / North of Bloor

## For early booking

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 29, Mississauga

# எனது சுயரூபத்தை வெளிப்படுத்தாவிட்டால் நான் விரும்புபவை வாழ்வில் எனக்குக் கிட்டாது

எனது உண்மையான சுயரூபத்தை நான் வெளிக்காட்டாது உள்ளடக்கி இரகசியமாய் வைத்திருந்தால், நான் மிகவும் விரும்புபவை எனக்குக் கிட்டாமல் போய்விடும் என்பதை விளங்கிக் கொள்ளும்போது வாழ்வைப் பற்றிய கூடிய புரிந்துணர்வு எனக்கு ஏற்படும்.

நாம் எதிர்த்து நிற்கும் விடயங்கள் தான் எமக்குக் கிடைக்க வேண்டும் என வாழ்வில் அதிகப்படியாக விரும்புகிறோம். வேலைத்தல உயரதிகாரிகள் எமது சாமர்த்தியத்தை அடையாளங்கண்டு எம்மைப் பாராட்ட வேண்டுமென ஆசைப்படுகிறோம். ஆனால் எமது வேலையின் தரத்தை உயர்த்திட, எமது புத்தியில் தோன்றும் யுக்திகளை வெளிக்கொணர்ந்து, எமது பூரண சக்தியையும், உழைப்பையும் செலவழிக்க நாம் விரும்புவதில்லை. இது வேறொருவரின் அலுவலகம் தானே. நாம் ஏன் விழுந்து விழுந்து வேலை செய்ய வேண்டும் என எமது முழு சாமர்த்தியத்தையும் வெளிக்கொணராது தடுத்து உள்ளடக்கி விடுகிறோம். எம் குடும்ப உறவுகளின், பூரண அங்கீகரிப்பையும் ஆதரவையும் விரும்பி எதிர்பார்க்கிறோம். ஆனால் எமது உறவு வட்டத்திலுள்ள பலரில் எமக்கு விருப்பமில்லாவிட்டாலும், விருப்பமிருந்தாலும் மேலெழுந்தவாரியாய் ஏனோதானோவென்று தான் அவர்களுடன் பழகுகின்றோம். அல்லது தூரத் தள்ளி விலக்கி விடுகிறோம். எமது உறவுகளிடமிருந்து, ஆர்வம் கலந்த அங்கீகரிப்பு, நெருங்கிய தொடர்பு, அன்பு முதலியவற்றை நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் இவ்வாறு நாம் விரும்புவற்றை எமது வாழ்க்கைத் துணைக்குக் கூட மனமுவந்து கொடுப்பதில்லை. இந்த அத்தியாவசிய அந்தரங்க நெருக்கம் பல தம்பதிகளிடையே இப்போ காணப்படுவதில்லை என்பது துரதிர்ஷ்டம்.

எந்தவிதமான உறவானாலும் சரி அது சிறப்புற அன்பு, நம்பிக்கை, மரியாதை என்பன அத்தியாவசியம். ஒருவரில் பூரண நம்பிக்கை வைத்து நீ அவருடன் உண்மையாகப் பழகும்போது அவரின்மேல் மட்டுமல்ல உன்மேலும் நீ வைத்திருக்கும் மரியாதை வளர்கின்றது. நம்பிக்கையும் மரியாதையும் இருக்குமிடத்தில் தான் அந்தரங்க நெருக்கமுள்ள நேசம் செழிக்கும். ஆனால் நீ உள்ளபடியே உன்னை வெளிப்படுத்தப் பயந்தால் உன் உறவுகளின் பூரண திருப்தியும் நிறைவும் உனக்குக் கிடைக்காது.




ஒருவர், தான் எப்படிப்பட்டவரானாலும் சரி பயப்படாது மனம் திறந்து இன்னொருவருடன் பழகும்போது தான் இருவருக்குமிடையில் நெருக்கமான அந்தரங்க உறவு வளரும். துரதிர்ஷ்டவசமாக பாலியல் உறவுகளின் வெற்றியைத்தான் இப்போ நாம் மிக நெருக்கமான அந்தரங்க உறவு எனக் கணித்து விடுகிறோம். ஆனால் அன்பு, நம்பிக்கை, மரியாதை முதலியன இல்லாத பாலியல் உறவு ஒருபோதும் நிறைவையும் திருப்தியையும் அளிக்காது. இதே உணர்வுகள் தான் அந்தரங்க நேசத்தை நாம் எதிர்க்கும் போது சகல உறவுகளிலிருந்தும் எமக்குக் கிடைக்கும். சாதாரணமாக தொழில் சார்ந்த அல்லது சமுதாய அல்லது குடும்ப உறவுகளின் வளர்ச்சிக்கும் இத்தகைய அந்தரங்க நெருக்கம் அத்தியாவசியம் என்பதைப் பற்றி நாம் சிந்திக்காமல் இருப்பது நாம் செய்யும் மிகப் பெரிய தவறு.

இறைத்தன்மை பொருந்திய மானிடப் பிறப்பின் உள்ளார்ந்த உண்மை மிகவும் அற்புதமானது. உனது சுயரூபத்தின் உண்மையைப் பயமின்றி நீ வெளிப்படுத்தும்போது பிறரின் மனம், இதயம், ஆன்மாவுடன் ஒருங்கிணைந்து நெருங்கிய அந்தரங்கத் தொடர்பினைச் சுலப-மாக ஏற்படுத்தி நிறைவு பெறுகிறாய். நெருங்கிய தொடர்பு படுக்கை அறையில் மட்டுமே அத்தியாவசியம் என இதுவரை நீ நம்பியிருக்கலாம். வாழ்வின் சகல சந்தர்ப்பங்களிலும் இன்றுமுதல் உனது சுயரூபம், உணர்வுகள் உண்மையாகவே இருக்கும் என உன்னுடனே உடன்படிக்கை செய்துகொள்.

**நெருங்கிய தொடர்புள்ள அந்தரங்க உறவினை, நான் முதலில் என்னுடனும் பின்பு சகலருடனும் ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் இன்றுமுதல் ஈடுபடப்போகிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 165

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி







